*J. S. C. Tamil Text for 1950 ( N. P. T. A)*

# தமிழ் மலர் மாலை

★

# THAMIL MALAR MALAI

★

சுன்னாகம் :

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

1950

[ விலை ரூ. 1-25

370.284.4
தமிழ்
SLIPR

370.284.4
தமிழ்
கி 260

# தமிழ் மலர் மாலை

370.284.4 54PR
த.ப
4087
370.284.4
தமிழ்
உசாத்துணை நூல்கள்
இரவல் எடுப்பதற்கன்று

# Thamil Malar Malai

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7-57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு 6

இரண்டாம் பதிப்பு

4087
STORES
BOOK-SELLERS
MALAY ST.
ISLAND

சுன்னாகம் :
வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

Copyright] 1950 [விலை ரூ 1-25

# பொருளடக்கம்

## செய்யுட் பாகம்


| | | பக்கம் |
|---|---|---|
| I. | கடவுள் வணக்கம் ... ... | 1 |
| II. | கதைப்பகுதி | |
| | 1. நளவெண்பா ... ... | 4 |
| | 2. கம்பராமாயணம்—சுந்தரகாண்டம் அநுமன் சீதையைக் கண்டமை ... | 12 |
| | 3. குசேலோபாக்கியானம் குசேலர் மேல் கடலடைந்த அத்தியாயம் ... | 24 |
| | 4. பாஞ்சாலி சபதம் ... ... | 28 |
| III. | சங்கச் செய்யுள்கள் | |
| | 1. புறநானூறு ... ... | 35 |
| | 2. கலித்தொகை ... ... | 36 |
| | 3. குறுந்தொகை ... ... | 36 |
| | 4. திருக்குறள் ... ... | 40 |
| | 5. நாலடியார் ... ... | 42 |
| | 6. இன்னா நாற்பது ... ... | 45 |
| | 7. இனியவை நாற்பது ... ... | 48 |
| IV. | ஈழமண்டலச் சிறப்பு ... ... | 50 |
| V. | சுயசரிதை (ஆங்கிலப் பயிற்சி) ... ... | 53 |


## வசன பாகம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கல்வி ... ... (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்) | 55 |
| 2. | நான் கேட்டபடி ... ... (டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்) | 59 |
| 3. | மாணவருக்கு ... ... (மகாத்மா காந்தியடிகள்) | 63 |
| 4. | சிட்டுக்குருவி ... ... (ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் அவர்கள்) | 72 |
| 5. | தமிழ் வளர்த்த தாமோதரன் ... ... (ராவ்சாகிப் S. வையாபுரிப்பிள்ளை அவர்கள்) | 74 |
| 6. | சத்தியவேதம் (புதிய உடன்படிக்கை) ... (மத்தேயு சுவிசேஷம்) | 78 |
| 7. | காவலனும் கண்ணீரும் ... ... (திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் B. A., B. L.) | 83 |
| 8. | நோபெல் பரிசு ... ... (ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி அவர்கள் B. A., B. L.) | 86 |
| 9. | விசுவரூப தரிசனம் ... ... (ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்) | 92 |
| 10. | பரீக்ஷை எடாத பண்டிதர் ... ... (பண்டிதர் ஸ்ரீ சி. கணபதிப்பிள்ளை அவர்கள்) | 96 |
| 11. | தமிழ்த் தொண்டு ... (அருள் திரு. விபுலானந்த அடிகள்) | 101 |

## பதிப்புரை

கலாசாலைகளிற் பயிலும் மாணவர்கள் ஒரு நூலின் பெரும்பகுதியைக் கற்பதினும், பல நூல்களின் சிறுச் சிறு பகுதிகளைக் கற்பதனாற் பெரும் பயன் அடைவர் என்பது, இக்காலக் கலாவல்லுநர் பலரின் அபிப்பிராயம். அதற்கியையவே இந்நூல் தொகுக்கப் பட்டது.

இந்நூலில் பல சுவையுள்ள பாடல்களும், பேரறிஞர்கள் பலராற் காலத்துக்குக் காலம் வெளியிடப் பட்ட கட்டுரைகள் பலவும் அமைந்துள்ளன.

இக் கட்டுரைகளை வெளியிட அனுமதி யளித்த அன்பர்கள் அனைவர்க்கும் தமிழ்த்தாய் அருள் பாலிப்பாளாக.

இந்நூலைக் கையெழுத்துப் பிரதியாகவே பார்வையிட்டு, அதனை ஜே. எஸ். ஸி. (J. S. C.) பரீக்ஷைக்குரிய பாட புத்தகமாக அங்கீகரித்த வடமாகாண ஆசிரியர் சங்கத்தினர் (N. P. T. A.) செயல் மிகவும் போற்றற்பாலதற்குரியது.

சுன்னாகம் }
25-11-49 }

வ. இ. தமிழ்நூற் பதிப்பகத்தார்

M. Nadarajah.
J.S.C.

# தமிழ் மலர் மாலை

## செய்யுட்பாகம்

Navaratnargal.

### கடவுள் வணக்கம்

எக்கருமத்தையும் ஆரம்பிக்கும்போது கடவுளை வணங்கி ஆரம்பித்தல் மரபு. எந்த நூலிலும் இது முதலிற் காணப்படும்.

இப்பகுதியில் முதலில் உள்ள செய்யுள் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களாற் பாடப்பட்டது. இவர் தென்னிந்தியாவில் நாகர்கோயில் என்னுமிடத்தில் வசிக்கிறார். இப்பாடல் சரஸ்வதி துதியாக அமைந்துள்ளது. சரஸ்வதி எவ்வெவ்விடங்களில் மகிழ்ச்சியுடன் உறைந்திருப்பாள் என்பதை இப்பாடலில் தெரிவித்திருக்கிறார். சரஸ்வதி கலைகளுக்குத் தலைவி.

1. நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலேஉன் பாதம் அடைக்கலமே.

### ஈசனுவக்கும் இன்மலர் மூன்று

இப்பாடல்களும், (2, 3, 4) கடவுள் வணக்கச் செய்யுள்களே. கடவுள் எவற்றை மகிழ்ச்சியுடன் ஏற்பார் என்பதை இப்பாடல்கள் தெரிவிக்கின்றன. இப்பாடல்கள் சுவாமி விபுலாநந்தர் அவர்களாற் பாடப்பட்டன. ஈழநாடு ஈன்ற உத்தமப் புதல்வர்களுள் ஒருவராய ‘சுவாமிஜீ’ மட்டக்களப்பிற் பிறந்தார்கள். சில ஆண்டுகளின்முன் காலகதியடைந்தனர். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராய்க் கடமையாற்றியவர். ‘யாழ்நூல்’ என்னும் அரிய ஆராய்ச்சி நூலின் ஆசிரியர். இப் பாடல்கள் வினாவிடையாக அமைந்துள்ளன.

2. வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

3. காப்பவிழ்ந்த மாமலரோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.

4. பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறுதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்லப் பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

**குறிப்புரை :**

1. நாடி – விரும்பி அடைந்து; புலம் – வயல்; கரம் – கை; நயம் + உரை = நயவுரை; உரை – சொல்; தேடி – சேர்த்து; கொழிக்கும் – தெரிக்கும் (தெரிந்து எடுத்தல்); கவி – செய்யுள்; கவிவாணர் – புலவர்; நா – நாக்கு; செழுமை + கருணை = செழுங்கருணை; கருணை – இரக்கம்; [கருணை, வெள்ளம்போல் பெருகும் அறிஞர் என்றவாறு]; நெஞ்சு – மனம் (ஆகுபெயர்); உவந்து - விரும்பி; நடம் - நடனம்; களிக்கும் – சந்தோஷிக்கும்; மயிலே – மயில் போன்றவளே! (சரஸ்வதியே!) (ஆகுபெயர்); அடைக்கலம் - சரண்; [உன் பாதத்துக்கு நாம் அடைக்கலம் என்றவாறு.] * உன் பாதம் நமக்கு அடைக்கலம் எனினுமாம்.

நாடி, தேடி, ஓடி என்பன செய்தென் எச்சங்கள். கொழிக்கும், பெருகும் என்பன செய்யுமென் எச்சங்கள். நாம் – தோன்றா எழுவாய். அடைக்கலம் – பயனிலை. * பாதம் – எழுவாய்; அடைக்கலம் – பயனிலை.

2. அடீ! தோழீ! அருள்வள்ளலாகிய கடவுளுடைய திருவடிக்குச் சிறந்த மலர் வெண்ணிறமான மல்லிகை மலரோ? வேறு எந்த வகையான புஷ்பமோ? இவற்றுள் எது என்பாயானால் உத்தமனார் வேண்டும் மலர் இவைகள் அல்ல; உள்ளமாகிய கமலமலரேயாகும்; கமலம் - தாமரை; உள்ளம் – மனம்; 'ஆகும்' என்னும் சொல் வருவித்து முடிக்க; மற்றைய பாடல்களிலு மங்ஙனமே செய்க.

3. காப்பு – காவல், விரியாமற் காப்பது (கட்டு); காப்பு அவிழ்தல் – கட்டவிழ்தல் (விரிதல்); மா – பெரிய; மாமலர் – தாமரைப்பூ; கழுநீர் – செங்கழுநீர்; தொடை - மாலை (தொடுக்கப்படுவது); தொடு + ஐ = தொடை, 'ஐ' செயப்படுபொருள் விகுதி; மாப்பிள்ளை - மணவாளன்.



தம்மையடைந்த ஆன்மாக்களை ஆட்கொள்ளுதலால் கடவுளை மணவாளன் என்றார்.

4. பாட்டு + அளி = பாட்டளி-பாடுகின்ற வண்டு; கொன்றை-கொன்றைப்பூ (ஆகுபெயர்); பார் – பூமி; கற்பகம் – கற்பகமலர் (ஆகுபெயர்); வாட்டம் உறுதவர் – பிறப்பு, பிணி, இறப்பு முதலியவற்றால் வாட்டமுறுத கடவுள்; நாட்டவிழி - கண்ணாகியவிழி (இருபெயரொட்டுப் பண்புத் தொகை); விழிநெய்தல் – விழியாகிய நெய்தல்; உருவகம், [பண்புத் தொகை]; நாடு + அம் = நாட்டம், நாடுவ (பார்ப்ப) தற்குக் கருவியானது. 'அம்' கருவிப் பொருள் விகுதி; உறுதவர் - எதிர்மறை வினையாலணையும் பெயர்.

**பயிற்சி :**

1. பொருள் கூறுக: புலம், கொழித்தல், கவிவாணர், வள்ளல், காப்பு, வாட்டமுறுதவர், அளி.
2 கடவுளைக் கருதி வந்த சொற்களை எழுதுக.
3. எதிர்ச்சொல் கூறுக: நன்புலம், களிக்கும், உத்தமன், நாயகன்.
4. சரஸ்வதி எவ்விடங்களில் உறைவாள்? முடியுமாயின் இதுபற்றிய பாரதியார் பாடலை எழுதுக.
5. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்னுமடியை சரஸ்வதிதுதிப் பாடலுடன் ஒப்பிட்டு ஆராய்க.
6. ஈசன் விரும்பும் மலர்கள் யாவை? ஏன் அவற்றை விரும்புகிறார்?
7. மனம், கை, விழி இவற்றிற்கு உவமானமாகக் கூறப்பட்டன யாவை? அவை எங்ஙனம் பொருந்தும்?
8. கற்பகதரு யாண்டுள்ளது? அம் மரம் விசேடம் பெற்றதேன்? பூவுலகத்தில் அதற்கு நிகரான மரமெது? ஏன்?

**இலக்கணம் :**

1. பின்வருவனவற்றிற்கு உதாரணம் தருக: முதலாகுபெயர், இடவாகு பெயர், உருவகம், பண்புத்தொகை, உவமவாகுபெயர்.
2. இலக்கணம் கூறுக: பெருகும், அவிழ்ந்த, காப்பு, வந்தவர்.
3. பதச்சேதம் செய்க: கொழிக்கும், பருகும், நாட்டம், தொடை.
4. பிரித்தெழுதுக: நயவுரைகள், அடியிணை, மலர்த்தொடை, பாட்டளி.
5. பாடல்களின் எழுவாய் பயனிலை கூறுக.

**கட்டுரையாக்கம் :**

1. கலையும் முயற்சியும் என்றொரு கட்டுரை வரைக.
2. 'தூய்மையான மனம்' என்பது பற்றி ஒரு கட்டுரைக் குறிப்புத் தயாரிக்க.

# II. காதைப் பகுதி

## 1. நளவெண்பா

நிடதநாட்டரசனாகிய நளமகாராசன், விதர்ப்பநாட்டரசனாகிய, வீமராசனது புதல்வி தமயந்தியை விவாகம் செய்தான். இறைவனருளால் இவர்களுக்கு ஓர் ஆண்மகவும் ஓர் பெண்மகவும் பிறந்தன. சில ஆண்டுகளின்பின் நளன் கலியின் தொடர்பால் புட்கரன் என்பவனுடன் சூதாடித் தனது செல்வம், நாடு முதலிய அனைத்தையு மிழந்தான். இதனால் தன் நாட்டைவிட்டு அயல்நாடு செல்ல நேரிட்டது. தன் மனைவியும் மக்களும் துன்பமடைவார்களென எண்ணி வீமராசனிடம் அவர்களை அனுப்பிவிட முயன்றான். தமயந்தி தன் கணவனைப் பிரிய விரும்பாது மக்களை மட்டும் தன் தந்தையிடம் அனுப்பினாள்.

தமயந்தி தன்னைப் பிரிய விரும்பாது தன்னோடு வருவதால் அவளுக்கு ஏற்படக்கூடிய துன்பங்களை எண்ணிய நளன், அவளை அவள் தந்தையிடம் போகச் செய்ய விரும்பினான். இருவரும் அன்றிரா ஒரு பாழ்மண்டபத்தில் ஒரே துகிலுடன் துயின்ற சமயத்து, நளன் அவ்வுடையை இரண்டாக அறுத்துக்கொண்டு அம் மண்டபத்தில் அவளைத் தனியே விட்டுப் பிரிந்துபோயினன்.

மறுநாள் காலையில் தமயந்தி விழித்து பலவாறு புலம்பி, ஈற்றில் வழிப்போக்கர் உதவியால் தன் தந்தைவீட்டை அடைந்தாள். நளன் வழியில் ஒரு நாகத்தாற் கடியுண்டு உரு வேறுபட்டு அயோத்திமன்னனாகிய இருதுபன்னனின் தேர்ச்சாரதியாய் இருந்தான்.

விதர்ப்பநாடடைந்த தமயந்தி தன் கணவனை அடைய விரும்பி, ஒரு புரோகிதனை அழைத்து,

1\. 'காரிருளில் பாழ்மண் டபத்தேதன் காதலியைச்
சோர்துயிலில் நீத்தல் துணிவன்றோ—தேர்வேந்தற்(கு)
என்றுரைத்தால் நேர்நின் றெதிர்மாற்றம் தந்தாரைச்
சென்றறிந்து வா'வென்றாள் தேர்ந்து.

[அங்ஙனமே புரோகிதன் சென்று]

2\. மின்ஆடும் மால்வரையும் வேலையும் வேலைசூழ்
நன்னாடும் கானகமும் நாடினான்—மன்னு
கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
அடைந்தான் அயோத்தி நகர்.



3\. 'கானகத்துக் காதலியைக் காரிருளில் கைவிட்டுப்
போனதூஉம் வேந்தற்குப் போதுமோ—தான்' என்று
சாற்றினான்; அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினான்; வந்தான் எதிர்.

நளன் விடை

4\. 'ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததூஉம்
பண்டை விதியின் பயனேகாண்;—தண்டரளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தானென் றையுறேல் நீ'.

[என நளன் கூறியதைக் கேட்டுக்கொண்டுபோய்ப் புரோகிதன் தமயந்தியை அடைந்து]

5\. 'வாக்கினான் மன்னவனை ஒப்பான் மறித்தொருகால்
ஆக்கையே நோக்கின் அவனல்லன்;—பூக்கமழுங்
கூந்தலாய்! மற்றக் குலப்பாகன்' என்றுரைத்தான்
ஏந்துநூல் மார்பன் எடுத்து.

தமயந்தியின் உபாயமொழி

6\. 'மீண்டோர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை
பூண்டாளென் றந்தணநீ போயுரைத்தால்—நீண்ட
கொடைவேந்தற் கித்தூரம் தேர்க்கோலங் கொள்வான்
படைவேந்தன்' என்றாள் பரிந்து.

புரோகிதன் முரசறைவித்தல்

7\. 'எங்கோன் மகளுக் கிரண்டாம் சுயவரம்' என்(று)
அங்கோர் முரசமறை வித்தான்—'செங்கோலாய்!
அந்நாளும் நாளை அள'வென்றான் அந்தணன்போய்த்
தென்னாளும் தாரானைச் சேர்ந்து.

[உடனே இருதுபர்னன் விதர்ப்பநாட்டுக்குச் செல்ல விரும்பி இரதம் பூட்டுமாறு நளனாகிய தேர்ச்சாரதிக்குக் கட்டளையிட்டான். நளன் இரதம்பூட்ட, அதில் இருதுபர்னன் ஏறி விதர்ப்பநாடு நோக்கிச் செல்லும்போது, இருதுபர்னன்]

8\. மேலாடை வீழ்ந்த தெடுவென்றான்; அவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே—தோலாமை
மேல்கொண்டான் ஏறிவரத் தொன்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா.

### விதர்ப்பநாடடைதல்

9. ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு—வீமன்தன்
பொன்னகரி சென்றடைந்தான் போர்வேட் டெழுங்கூற்றம்
அன்னகரி ஒன்றுடையான் ஆங்கு.

10. ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதில் அடிசில் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயில் கார்நீலம் கண்விழிக்கும் நாடன்
மடைவாயில் புக்கான் மதித்து.

### தமயந்தி சேடியர்மூலம் நளனை அறிதல்

11. 'இடைச்சுரத்தில் தன்னை இடையிருளில் நீத்த
கொடைத்தொழிலான் என்றயிர்த்த கோமான்
—மடைத்தொழில்கள்
செய்கின்ற வாறெல்லாம் தெரிந்துணர்ந்து வா' என்றாள்
நைகின்ற நெஞ்சாள் நயந்து.

12. 'கோதை நெடுவேற் குமரனையும் தங்கையையும்
ஆதி யரசன் அருகாகப்—போத
விளையாட விட்டவன்தன் மேற்செயல்நா டெ'ன்றாள்
வளையாடுங் கையாள் மதித்து.

### நளனும் மக்களும்

13. மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—'மக்காள் ! நீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்கள் ?' என்றுரைத்தான்
வன்மக் களியானை மன்.

### மக்கள் விடை

14. 'மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னை தனைக் கான்விட் டவனேக —இந்நகர்க்கே
வாழ்கின்றோ மெங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றா' னென்றார் அழுது.



### நளன் கூற்று

15. 'உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிப்போந்(து)
இங்கண் உறைதல் இழுக்கன்றோ—செங்கை
வளவரசே !' என்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து.

[அதுகேட்ட அச்சிறுவன்]

16. 'நெஞ்சால்இம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லா(து)
அஞ்சாரோ மன்னர் அடுமடையா—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலாய் ! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி'. [என்றான்.]

[இதனைக் கேட்ட நளன் மக்களை நோக்கி]

17. 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ !
உன்னை யறியா துரைசெய்த—என்னை
முனிந்தருளல்' என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண்.

[இதனைக்கண்ட சேடியர் நடைபெற்ற நிகழ்ச்சியைத் தமயந்தியிடம் கூற, அவள் தந்தையை நோக்கி]

18. 'மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேருங் கொண்டணைந்து—மற்று
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்கா ணெங்கள்
கொடைத்தொழிலான் என்றாள் குறித்து.'

[பின் நளமகாராசன் தன் சுய உருவம் தோன்ற நிற்க]

### வீமராசன் விருந்து செய்வித்தல்

19. வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கண்
கோதையையும் மக்களையும் கொண்டுபோய்—தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி
விதையக்கோன் செய்தான் விருந்து.

[பின் நளமகாராசன் புட்கரனுடன் சூதாடி வென்று தன் நாடு செல்வம் முதலிய அனைத்தையும் பெறப் புட்கரன் வந்தவழியே சென்றான். பின்]

20. ஏனை முடிவேந்தர் எத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி—ஆனபுகழ்ப்
பொன்னகரம் எய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன்.

நகர மக்கள் மகிழ்ச்சி [கவிக்கூற்று]

21. கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்(கு)
ஏதோ உரைப்பன் எதிர்.

—புகழேந்திப்புலவர்

**குறிப்புரை :**

1. கருமை+இருள்=காரிருள் — கருமையையுடைய இருள்; (2-ம் வேற்றுமை உருபும், பயனும் உடன்தொக்க தொகை). சோர்துயிலில் — சோர்வினைத் தருகின்ற துயில் நேரத்தே; நீத்தல் - விட்டுப் பிரிதல்; (தொழில் பெயர்) துணிவு அன்றோ - துணிவான செயலாமோ? தேர் வேந்தன் - தேர்ப்படையையுடைய அரசன்; 'கு' நாலாம் வேற்றுமை; உருபு. அறைதல் - சொல்லுதல்; நேர் நின்று - முன் நின்று; எதிர் மாற்றம் - எதிர் விடை; புரோகிதன் - அந்தணன்; காரிருள், பண்புத் தொகையுமாம். [இருபெயரொட்டு].

2. மின் - மின்னல்; ஆடும் - விளங்குகின்ற; மால்வரை - பெரிய மலை; வேலை - சமுத்திரம்; நல்+நாடு=நன்னாடு; கானகம் - காடு; நாடினான் - தேடினான்; மன்னு - நிலைபெற்ற; 'உ' சாரியை; கடம் - மதம்; தாள் - வழிகின்ற; களியானை - செருக்கினையுடைய யானைப் படை; காவலன் - அரசன்: என்றது நளனை. கடம்+தாழ்=கடந்தாழ்.

3. கானகம் - காடு; போதுமோ - பொருந்திய செயலாகுமோ? 'ஓ' வினாப் பொருளில் வந்தது. 'தான்' அசை: சாற்றினான் - சொன்னான்; தார் வேந்தன் - மாலையையுடைய அரசன்; (2-ம் வேற்றுமை, உருபும், பயனும் உடன் தொக்க தொகை) எதிர் - முன்; நளமகாராசன் அந்தணன்முன் வந்தான் என்றவாறு.

4. ஒள்+தொடி=ஒண்டொடி — ஒள்ளிய வளையலை யுடையாள்; (தொடி—வளையல்) அன்மொழித்தொகை. உறக்கம்—நித்திரை=உறங்கு +அம்=உறக்கம்; தொழிற்பெயர். 'அம்' விகுதி; நீத்தது - நீங்கியது; பண்டைவிதி - பழையவிதி; பயன் - முடிபு; தண்+தரளம்=தண்டரளம் - குளிர்ந்தமுத்து; பூ - பொலிவாகிய; தாம வெண் குடையான் - மாலைகளை அணிந்த வெண்கொற்றக் குடையுடையவனாகிய நளன்; பொன் மகள் - இலக்குமிபோன்றவளாய தமயந்தியை; வெம்மை+வனம்= வெவ்வனம்; வனம் - காடு; ஐயுறேல் - சந்தேகமடையாதே. ஐயுறு+ ஆ+ஏல்=ஐயுறேல். முன்னிலை ஒருமை எதிர்மறை வினைமுற்று. 'ஆ' எதிர்மறை இடைநிலை; புணர்ந்து கெட்டது.

5. வாக்கு - பேச்சு; மன்னவன் - நளமகாராசன்; மறித்து - திரும்ப; ஒருகால் - ஒருபோது; ஆக்கை - உடல்; கமழும் - வாசனை வீசுகின்ற; கூந்தலாய் - கூந்தலையுடையவளே! (அண்மை விளி); மற்று - இடைச்சொல்; குலப்பாகன் - (உடம்பின் தோற்றத்தாலும் தொழிலாலும்) பாகர்குலத்தான்போலக் காணப்படுகிறான். நூல் ஏந்து மார்பன் - நூலை அணிந்த மார்பையுடையவன் (அந்தணன்).



6. மீண்டு+ஓர்=மீண்டோர் - திரும்பவுமொரு; சுயம்வரம் - தனக்குரிய கணவனை ஒரு பெண் தானே தெரிதல்; வீமன்மடந்தை - ஆறும் வேற்றுமைத் தொகை; மடந்தை - பெண்; பூண்டாள் - விரும்பினாள்; அந்தணா! - அண்மைவிளி; உரைத்தால் - சொன்னால் (வினை எச்சம்); கொடைவேந்தன் - கொடுத்தல் தொழிலையுடைய அரசன்; என்றது இருதுபர்ணனை, தேர்க்கோலம் - தேரில் கோலம்; என்றது நளன் தேர் செலுத்திவருவதனை; கொள்+வ்+ஆ=எதிர்காலமுற்று.

7. எம்+கோன்=எங்கோன் - எமது அரசனாகிய வீமன்; முரசு - பறை, 'அம்' சாரியை. செம்மை+கோல்=செங்கோல்; அ+நாள்= அந்நாள்— அந்தநாள்=அந்த இரண்டாம் சுயம்வரநாள்; அளவு - (தவணை) தினம்; தென் - இசை; ஈண்டு இசைபாடும் வண்டிற்காயது. தென் ஆளும் - வண்டுகள் மொய்க்கும்; தாரான் - மாலையையுடையவன்; [தென் - தெற்குப்பாகமெனினுமாம்; அழகுமாம்.]

8. மேலாடை - தேகத்தின் மேலே இடும் ஆடை; அவ்வளவில் - அவ்வாறு சொல்வதற்கிடையில்; நாலாறு - (24) 3-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை; ஒரு காதம் - கூப்பிடுதொலை; தோலாமை - தோல்வி இல்லாமை; எதிர்மறைத் தொழிற்பெயர். மேற்கொண்டான் - உடையவன்; என்றது இருதுபர்னனை; தொன்மை - பழமை; கலிச்சூதின்மால் கொண்டான் - கலியின் தொடர்பால் சூதாட்ட மயக்கங்கொண்டவன்; என்றது நளனை; கோல் - தாற்றுக்கோல் (கடிவாளம்); மா-குதிரை. 'நாலாறு' பண்புத்தொகையுமாம்.

9. அலவன் - நண்டு; துயில் - நித்திரை; காமர் - அழகிய; நெடுமை+நாடு=நெடுநாடு; பொன்னகரி=பொன்+நகரி=பொன்மயமான பட்டினம்; வேட்டு - விரும்பி; (செய்தெனெச்சம்) கூற்றம் அன்ன கரி - யமனைப் போன்ற யானை; 'அன்ன' உவமஉருபு; ஆங்கு - 7-ம் வேற்றுமை உருபு. (இடப்பொருள்) காமர் - உரிச்சொல்.

10. ஆதி - முதன்மையாகிய; நெடுமை+தேர்=நெடுந்தேர்; பரி - குதிரை, விட்டு - அவிழ்த்து; ஆற்றி - ஆறச்செய்து (பிறவினை); கோது - குற்றம்; அடிசில் - சமையல்; குறை - இன்றியமையாத வேலை; முடிப்பான் - எதிர்காலவினைஎச்சம்; மடைவாயில் - சமையலறையின் வாயிலில்; புகு+ஆன்=புக்கான்-போனான். பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டிற்று. "மேதிக்....நாடன்" என்றது நளனை. மேதி - எருமை; எருமைகள் நீலக்கொடிகளை உண்ணும்போது அப்புஷ்பங்கள் எருமையின் கடைவாயில் கண்ணைப்போல விழிக்கும் என்றவாறு.

11. இடைச்சுரம் - பாலைவனத்தின் நடுவில்; இடை இருள் - நடுயாமம்; அயிர்த்த - அயிர்க்கப்பட்ட - சந்தேகிக்கப்பட்ட; கோமான் - நளன்; (அரசன்). மடைத்தொழில் - சமையல் வேலை; செய்கின்றவாறு - செய்கின்ற முறை; நளன் சமையல் தொழிலில் வல்லவனாதலின்

அவன் சமையல் செய்யும் விதத்திலிருந்து அறிவதற்கே அங்ஙனம் தமயந்தி கூறினாள். நைதல் – வருந்துதல்; நயந்து – விரும்பி.

12 கோதை – மாலையையும்; நெடுவேல் குமரன் - நீண்ட வேற்படையையுமுடைய புதல்வனையும்; போதவிளையாட – போய்விளையாட; அவன் என்றது நளனை; நாடு - அறி; வளை – வளையல்கள்; ஆடும் – அசையும்; மதித்து - விரும்பி.

13. காணு – கண்டு; (செய்யா என்னும் வாய்பாட்டெச்சம்) நடுங்கா – நடுங்கி; புக்கு - போய்; வீரப்புயம் – வீரத்தன்மை பொருந்திய புயம்; வன்மம்–பகை; களியானை – மதச் செருக்குள்ள யானை; யானைமன் – யானைப்படையை யுடைய அரசன்; மக்காள் - விளி.

14. நிடதத்தார் வாழ்வேந்தன் – நிடதநாட்டு மக்கள் வாழ்தற்குக் காரணமான அரசன்; (நிடதநாட்டைக் காப்பாற்றியவன்). அன்னை - தாய்; இந்நகர்க்கு - இந்நகரில் (உருபு மயக்கம்) 7-ம் வேற்றுமை உருபு நிற்கவேண்டிய இடத்தில் 4ம் உருபு நின்றது; மற்றொருவன் என்றது புட்கரனை; அழுது—செய்தெனெச்சம்.

15. போந்து - வந்து; இங்கண் – இவ்விடம், (கண் – 7-ம் உருபு) செம்மை + கை = செங்கை; வள அரசு – வளப்பம் பொருந்திய அரசனே! மாதவம் - பெரியதவம்; எடுத்து – தூக்கி.

16. இம்மாற்றம் – இச்சொல்; உரைக்க - சொல்ல; அஞ்சாரோ – பயப்படாரோ! மன்னர் - அரசர்; அடுமடையா - சமையல் வேலை செய்யும் மடையனே; [மூழுமடையனே] எஞ்சாது – குறையாமல்; (எதிர்மறைக் குறிப்பெச்சம்); சிறுதொழிலாய் – புன்தொழிலை யுடையவனே! எம் + கோமான் = எமது அரசனுக்கு; வாய்மையே கண்டாய் வலி – வாய்மையே வலிமையாகும். [சூதாடச் சம்மதித்தானாதலின் சூதில் தோற்றமையால் நாடு நகரை விட்டுச் சென்றனனேயன்றி வலியிற் குறைந்து சென்றானல்லன்; சொன்னசொல் தவறலாகாது என்பதுபற்றியே சென்றான் என்றவாறு].

17. மடையர் – சமையல் வேலை செய்பவர்; உன்னை - உன் பெருமையை; முனிந்தருளல் - கோபிக்காதே; அல் – எதிர்மறை விகுதி; முடிசாய்த்து – தலைவணங்கி; கனிந்து – மனம் கனிந்து.

18. திருநகர்க்கு - உருபு மயக்கம் [திருநகர்க்கண்]; மன்னன் என்றது இருதுபர்னனை; கொற்றம் – வெற்றி; தனித்தேர் – ஒப்பற்ற தேர்; மடைத்தொழில் – சமையல் தொழில்; 'காண்' முன்னிலையசை. எங்கள் கொடைத் தொழிலான் – எங்கள் கொடைத்தொழிற்குரிய நளமகாராசன்.

19. வேதநெறி – வேதமுறை; வழுவா – மாறாத; வேந்தன் – நளன்; பூ – பொலிவு; தடங்கண் – விசாலமானகண்; கோதை – பெண் (தமயந்தி); தாது – மகரந்தம்; புதைய – மறைய; பூ + சோலை = பூஞ்சோலை; பூஞ்சோலையை வேலியாகவுடையவன்; தேன்பாய்ந்தொழுகும் சோலை என்க; விதையக்கோன் - விதர்ப்பராசன்; (வீமன்). விருந்து (பண்பாகுபெயர்).



20. முடிவேந்தர் – முடியுடைய அரசர்; போற்றிசைப்ப - புகழ்ந்து துதிக்க; புடை - பக்கம்; சூழ – சுற்றிவர; பொன் + நகரம் = பொன்னகரம், (அமராவதி); புரந்தரன் – இந்திரன்; பொலிந்து – விளங்கி; நல் + நகரம் = நன்னகரம்.

21. கார் – கருமேகம்; தோகை - மயில்; மயில் கருமேகத்தைக் காணின் மகிழ்ச்சியடையும். வாள்முகம் – ஒளிபொருந்திய முகம்; நிறைபுலம் - சிறந்த வயல்; பார் – பூமி; மாது – தமயந்தி; மன்னன் – நளன்; மாநகர் – பெரியபட்டினத்திலுள்ளார் (இடவாகுபெயர்); எதிர் - உவமை; உரைப்பன் – சொல்வேன்; [இது கவிக்கூற்று] [இந்நூலைப் பாடியவர் புகழேந்திப்புலவர் 'வெண்பாவிற் புகழேந்தி' என்னும் பகுதி, இவரது புலமையைத் தெரிவிக்கும்].

பயிற்சி

1. நளனைக்கருதி இப்பகுதியில் வந்த சொற்களியாவை?
2. பொருள் தருக: மாற்றம், வேலை, களியானை, தாளம் நீத்தான், ஆக்கை, அலவன், அடிசில், முனிதல், கோதை, புரந்தரன்.
3. மனைவியைக் கானகத்திற்பிரிந்தகாரணம் எதுவென நளன் கூறினன்?
4. நளனை அடையத் தமயந்தி மேற்கொண்ட உபாயம் யாது? அது பற்றி உமது அபிப்பிராயம் யாது?
5. நளனின் தேர்ச்சாரத்தியத் திறமையைக் காட்டும் பாடலை எழுதுக.
6. 'தோலாமை மேல்கொண்டான்........... மா'' இதன் கருத்து நன்கு புலப்பட விளக்கி எழுதுக.
7. "போர்வேட்டெழுங்.........கரி'' பிரித்து உவமையை விளக்குக.
8. எருமை நீலப்பூக்களை உண்ணும் சிறப்பை வர்ணித்தெழுதுக.
9. மக்களை நளன் கண்டபோது அவன்நிலை யாது?
10. நளனும் மக்களும் பேசியவற்றைச் சம்பாஷணையாக எழுதுக.
11. 'நளன் நிடதநாடு மீண்டபோது'' என்று தொடங்கி 5 வசனம் வர்ணனையாயெழுதுக.
12. நகரமக்கள் மகிழ்ச்சிக்குக் கூறப்பட்ட உவமானங்களியாவை?

இலக்கணம்

1. பின்வருவனவற்றிற்கு உதாரணம் தருக: உரிச்சொல், செய்யா என்னுமெச்சம். இடவாகுபெயர், அன்மொழித்தொகை, உருபும், பயனும் உடன் தொக்கதொகை, எதிர்மறை வினைமுற்று, பிறவினை, விளிப்பெயர், உருபுமயக்கம்.
2. பிரித்தெழுதுக: தண்டரளம், புக்கான், பொன்னகரம், அன்னகரி அவ்வளவில, மாதவம்.
3. இலக்கணம் கூறுக: ஐயுறேல், எஞ்சாது, முடிப்பான்.

கட்டுரை

1. விதியின் வலிமை என்னும் பொருளில் ஒரு கட்டுரை தருக.

## 2. கம்பராமாயணம்

### சுந்தரகாண்டம்: அநுமன் சீதையைக் கண்டமை

ராம+அயநம்=ராமாயணம்: [வடமொழிச்சந்தி. அயநம்—சரித்திரம்] ஸ்ரீராமனது சரித்திரத்தைக்கூறும் நூல். கம்பராமாயணம்—கம்பராற் செய்யப்பட்ட இராமாயணம் என விரியும். இராமாயணம் என்னும் நூலை முதல் முதல் செய்தவர் வான்மீகி முனிவர். அவர் அந்நூலை வடமொழியில் இயற்றினார். கம்பர் அந்நூலை ஆதாரமாகக்கொண்டு தமிழிற் கம்பராமாயணம் செய்தார். சில இடங்களில் தமது கற்பனையையும் சேர்த்து மிகச் சிறந்த முறையில் விருத்தப்பாவில் அந்நூலைச் செய்தார். "கல்வியிற் பெரியவன் கம்பன்," "விருத்தமெனும் ஒண்பாவில் உயர் கம்பன்" என்பன மூலம் கம்பரின் புலமை புலனாகும். கம்பராமாயணம் தமிழிலுள்ள நூல்களுட் சிறந்தது. கம்பராமாயணம் ஏழு காண்டங்களை உடையது. சுந்தரன்—அநுமன்; அநுமனைப் பற்றிய செய்தியைத் தெரிவிக்கும் பகுதி சுந்தரகாண்டம் ஆகும்.

[சீதையை இழந்த இராமன் கிஷ்கிந்தையை அடைந்து அநுமனைச் சந்தித்து அவன்மூலம் சுக்கிரீவனுடன் நட்புப்பூண்டான். சுக்கிரீவன் வேண்டுகோள்படி, சுக்கிரீவன் தமையனான வாலியை இராமன் கொன்று சுக்கிரீவனை அரசனாக்கினான். பின், சுக்கிரீவனது குரக்குச் சேனைகள் சீதையைத்தேட ஆரம்பித்தன. சுக்கிரீவனது மந்திரியாகிய அநுமன் சீதையைத் தேடி, கடலைத்தாண்டி இலங்கையை அடைந்தான். இலங்கையை அடைந்து பல இடங்களிலும் தேடி அசோகவனம் என்னும் இடத்தைச் சார்ந்தான்.]

#### அநுமன் நினைவு

1. மாடு நின்றவம் மணிமலர்ச் சோலையை மருவித்
தேடி இவ்வழி காண்பனேல் தீருமென் சிறுமை
ஊடு கண்டில னெனில்பின்னர் உரியதொன் றில்லை
வீடு வேன்மற்றில் விலங்கல்மேல் இலங்கையை வீட்டி.

#### சீதையின் நிலை

2. வன்ம ருங்குல்வா ளரக்கியர் நெருக்கவங் கிருந்தாள்
கன்ம ருங்கெழுந் தென்றுமோர் துளிவரக் காணா
நன்ம ருந்துபோல் நலனற வுணங்கிய நங்கை:
மென்ம ருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்தாள்,



3. துயிலெனக்கண்கள் இமைத்தலும்முகிழ்த்தலும்துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென ஒளியிலா மெய்யாள்
மயிலியற் குயில் மழலையாள் மானிளம் பேடை—
அயிலெயிற்று வெம்புலிக் குழாத்தகப் பட்ட தன்னாள்.

4. விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை யெண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந் துயிர்த்தல்
அழுத லன்றிமற் றயலொன்றும் செய்குவ தறியாள்.

#### சீதையின் நினைவு

5. வன்கண் வஞ்சனை அரக்கரித் துணைப்பகல் வையார்
தின்ப ரென்னினிச் செயத்தக்க தென்றுதீர்ந் தானோ
தன்கு லப்பொறை தன்பொறை யெனத்துணிந் தானோ
என்கொல் எண்ணுவேன் என்னுமங் கிராப்பக லில்லாள்.

6. பெற்ற தாயரும் தம்பியும் பெயர்த்தும்வந் தெய்திக்
கொற்ற மாகர் கொண்டிறந் தார்களோ குறித்துச்
சொற்ற ஆண்டெலா முறைந்தன்றி அந்நகர் துன்னான்
உற்ற துண்டெனப் படருழந் துருதநோ யுறுவாள்.

7. ஆழநீர்க் கங்கை அம்பிக டாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பிநீ
தோழன் மங்கைகொ ழுந்தியெனச் சொன்ன
வாழி நண்பனை உன்னி மயங்குவாள்.

#### இவ்வாறு இருந்த சீதாபிராட்டியை, அசோகவனத்தில் ஒருமரத்தின் மேலிருந்த அநுமன் காணல்.

8. விரிமழைக் குலங்கிழித்து ஒளிரு மின்னெனக்
கருநிறத் தரக்கியர் குழுவிற் கண்டனன்
உருநிறத் தொருதனிக் கொண்டல் ஊழியான்
இருநிறத் துற்றளற் கியைந்த காந்தத்தை.

#### சீதாபிராட்டியைக் கண்ட அநுமன் மகிழ்ச்சி

9. வீடின தன்றறன் யானும் வீகலேன்
தேடினன் கண்டனன் தேவி யேயென
ஆடினன் பாடினன் ஆண்டும் ஈண்டும்பாய்ந்
தோடினன் உலாவினன் உவகைத்தே னுண்டான்.

அநுமன் பலவாறு சிந்தித்தல்

10. மூவகை உலகையும் முறையின் நீக்கிய
பாவிதன் உயிர்கொள்வான் இலைழத்த பண்பிதால்
ஆவதே ஐயமில் அரவி னீங்கிய
தேவனே யவன்இவள் கமலச் செல்வியே.

11. புனைகழ லிராகவன் புயத்தை யோபுகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ
வனைகழல் அரசரின் வண்மை வீக்கிடும்
சனகர்தம் குலத்தையோ யாதைச் சாற்றுகேன்.

12. வெங்கனல் முழுகியும் புலன்கள் வீக்கியும்
நுங்குவ அருந்துவ நீக்கி நோற்றவர்
எங்குளர் குலனில்வந் தில்லின் மாண்புடை
நங்கையர் மனத்தவம் நவிலற் பாலதே.

13. பேணநோற் றதுமனைப் பிறவி பெண்மைபோல்
நாணம்நோற் றுயர்ந்தது நங்கை தோன்றலால்
மாணநோற் றீண்டிவ ளிருந்த வாறெலாம்
காணநோற் றிலனவன் கமலக் கண்களால்.

14. தருமமே காத்ததோ சனகன் தன்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ
அருமையே அருமையே ஆரி தாற்றுவார்
ஒருமையே எம்மனோர்க் குரைக்கற் பாலதோ.

என அநுமன் கூறிக்கொண்டு ஒரு மரக்கிளையில் மறைந்து நிற்க, பாவியாகிய இராவணன் அசோகவனத்தில் தேவப் பெண்கள் பலர் புடைசூழ வந்து சீதாபிராட்டியிடம் பல வார்த்தைகளை நயந்து கூறினன். அப்போது தேவி வஞ்சகனை இராவணனைக் கோபித்து இழித்துக் கூறினள். அதனாற் கோபமூண்ட இராவணன் சீதையை அச்சுறுத்தி அவ்விடத்தை விட்டு அகல, பிராட்டியைச் சூழ்ந்திருந்த அரக்கியர் பிராட்டியை அச்சுறுத்தினர். திரிசடை என்பவள் அவர்களை விலக்கினள். அப்பொழுது அநுமன் பிராட்டியைக் காணத் தக்க சமயம் இதுவே என எண்ணிப் பிராட்டியின் பக்கத்திலுள்ள அரக்கியரைத் தனது மந்திர பலத்தால் உறங்கச் செய்



தான். அனைவரும் உறங்கத் தனியே இருந்த பிராட்டி கடந்த பல நிகழ்ச்சிகளையும் எண்ணி உயிர்விடுதலே தக்கதென நினைந்து ஒரு குருக்குத்திச் செடியண்டை சென்றாள்.

அநுமன் பிராட்டியின் முன் தோன்றல்

15. கண்டனன் அநுமனும் கருத்தும் எண்ணினன்
கொண்டனன் துணுக்கம்மெய் தீண்டக் கூசுவான்
அண்டர்நா யகன்அருள் தூதன் யானெனாத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினன்.

பிராட்டி 'இவன் யார்' என ஐயுற, அநுமன் கூறல்

16. ஐயுறல் உளதடை யாள மாரியன்
மெய்யுற உணர்த்திய உரையும் வேறுள
கையுறு நெல்லியங் கனியிற் காண்டியால்
நெய்யுறு விளக்கனாய் நினையல்வே றென்றான்.

பிராட்டியின் தீர்மானம்

17. என்றவன் இறைஞ்ச நோக்கி இரக்கமும் முனிவும் எய்தி
நின்றவன் நிருதன் அல்லன் நெறிநின்று பொறிக ளைந்தும்
வென்றவன் அல்ல னாகில் விண்ணவன் ஆக வேண்டும்
நன்றுணர் வுரையன் தூயன் நவையிலன் போலும் என்னா.

18. அரக்கனே யாக வேறோர் அமரனே யாக அன்றிக்
குரக்கினத் தலைவ னேதா னாகுக கொடுமை யாக
இரக்கமே யாக வந்திங் கெம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினன் உணர்வைத் தந்தான் உயிரிதின் உதவி உண்டோ!

என எண்ணி அநுமனை நோக்கி, "வீர! நீ யாவன்" என வினவினள். அப்பொழுது அநுமன் சீதையை நோக்கி நின்னைப் பிரிந்தபின் இராமன் ஒரு சிநேகனைப் பெற்றான். அவன் பெயர் சுக்கிரீவன். அவன் தமையன் வாலி. வாலி, தன் தம்பியாகிய சுக்கிரீவனுக்குப் பல துன்பங்கள் செய்தான்.

19. அன்னவன் தன்னை யுங்கோன் அம்பொன்றா லாவி வாங்கிப்
பின்னவற் கரசு நல்கித் துணையெனப் பிடித்தான் நங்கள்
மன்னவன் தனக்கு நாயேன் மந்திரத் துள்ளேன் வானின்
நன்னெடுங் காலின் மைந்தன் நாமமும் அநுமன் என்பேன்.

எனத் தன்னை அறிமுகம் செய்து இராமனால் தன்னிடம் அடையாளமாகக் கொடுக்கப்பட்ட கணையாழியைச் சீதையிடம் கொடுத்தான்.

### பிராட்டியின் மகிழ்ச்சி

20. இழந்தமணி புற்றர(வு) எதிர்ந்ததென லானாள்
பழந்தனம் இழந்தன படைத்தவரை ஒத்தாள்
குழந்தையை உயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்
உழந்துவிழி பெற்றதொ ருயிர்ப்பொறையும் ஒத்தாள்.

21. இருந்துபசி யாலிட ருழந்தவர்க ளெய்தும்
அருந்தும்அமு தாகிய தறத்தவரை யண்மும்
விருந்துமென லாகியது வீயுமுயிர் மீளும்
மருந்துமென லாகியது வாழிமணி யாழி.

இவ்வாறு மகிழ்ச்சி கொண்ட பிராட்டி அநுமனைப் புகழ்ந்து 'இப்பெருங் கடலை எவ்வாறு கடந்து இங்கு வந்தனை' என வினவினாள். அநுமன் தான்கொண்ட பேருருக்காட்டி 'இவ் வுருப்பூண்டு கடலைக் கடந்து வந்தேன்' எனவும் 'தாங்கள் என் தோள்மீது எழுந்தருளின் இக்கணமே இராமன் முன் னிலையில் தங்களைச் சேர்ப்பிப்பேன்' எனவும் கூறினான்.

### பிராட்டி அந்நிலைவை மறுத்துக் கூறுதல்

22. அரிய தன்றுநின் னாற்றலுக் கேற்றதே
தெரிய எண்ணினை செய்வதும் செய்தியே
உரிய தன்றென ஓர்கின்ற துண்டதென்
பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால்.

23. வேலை யின்னிடை யேவந்து வெய்யவர்
கோலி வெஞ்சர நின்னொடுங் கோத்தபோ
தால மன்னவர்க் கல்லையெற் கல்லையால்
சால வுந்தடு மாறுந்த னிமையோய்.

24. அன்றி யும்பிறி துள்ளதொன் றாரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றி யென்பதம் வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ.



25. பொற்பி றங்க லிலங்கை பொருந்தலர்
எற்பு மால்வரை யாகில தேயெனின்
இற்பி றப்பு மொழுக்கு மிழுக்கமில்
கற்பும் யான்பிறர்க் கெங்ஙனம் காட்டுகேன்.

26. வேறு முண்டுரை கேளது மெய்ம்மையோய்
ஏறு சேவகன் மேனியல் லாலிடை
ஆறு மைம்பொறி நின்னையு மாணெனக்
கூறு மிவ்வுருத் தீண்டுதல் கூடுமோ.

### அநுமன் அதை ஏற்று, இராமனிடம் யான் கூறவேண்டுவது யாது என வினவ, பிராட்டி கூறுதல் :

27. திங்க ளொன்றினென் செய்தவம் தீர்ந்ததால்
இங்கு வந்தில னேயெனின் யாணர்நீர்க்
கங்கை யாற்றங் கரையடி யேற்குத்தன்
செங்கை யாற்கடன் செய்கென்று செப்புவாய்.

28. ஈண்டு நானிருந் தின்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டி னாள்தொழு தென்று விளம்புவாய்.

எனக் கூறி அநுமனை அனுப்பினாள்.

**குறிப்புரை**

1. பக்கத்தேயுள்ள அழகிய பூவ்வயுடைய நீலமேனிபோலும் சோலையை அடைந்து பிராட்டியைத் தேடி இவ்விடத்துக் காண்பேனாயின் என் துன்பம் நீங்கும். இச்சோலையினாடு காணாதொழிவனேல் பின்னர் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. இலங்கையை இத்திரிகூட மலையில் அடித்து அழித்து, நானும் உயிர்விடுவேன் என்பது பொழிப்பு. சிறுமை (எழுவாய்) தீரும் (பயனிலை) நானும் (எழுவாய்) வீடுவேன் (பயனிலை). காண்பனேல், கண்டிலனெனில் – வினை எச்சங்கள் பின்னர் என்பதில் 'அர்' சாரியை.

2. வலிய இடையினையும் வாளினையுமுடைய அரக்கியர் பலர் அங்கிருந்தனர். அவர்கள் பிராட்டியை அச்சுறுத்தி வருத்தினார்கள். கல்லில் முளைத்து ஒருதுளி நீரையாவது பெறாத நல்ல சஞ்சீவி மருந்து விருட்சத்தைப்போல வருந்திய பிராட்டி இயல்பாகவே மெலிந்த தன் இடைபோன்று மற்றைய அவயவங்களும் மெலிந்தனள். மருங்குல் – இடை; துளி – மழை; நலன் – அழகு; அற – நீங்க;

உணங்கிய – வருந்திய ; அரக்கியராகிய அங்கிருந்தார் எனவும் – அங்கிருந்தார் நெருக்க எனவும் இயைக்க ; இருந்தார் – வினையாலணையும் பெயர் ; காணு – காணாத (ஈறுகுறைந்த எதிர் மறைப் பெயரெச்சம்); அங்கிருந்தார் என்பதனை முற்றெச்சமாக்கி அங்கிருந்தாராய் நெருக்க எனினுமாம்.

3. இமைத்தலும் முகிழ்த்தலும் – உறங்குதலாவது விழித்தலாவது; மயில் இயல் – மயில்போன்ற சாயலும் ; குயில்மழலை – குயிலது மொழி போன்ற இனிய மழலைமொழி ; ( மொழியினை உடையவளும் ஆகி ) வெயில் விடைத்தந்த – சூரிய ஒளியின்கண் உள்ள ; பேடை - பெண் ; அயில் எயிறு – அம்பு (வேல்) போன்ற கூரியபல். குழாம் – கூட்டம் ; [ தந்தவிவக்கு – தந்தத்தினால் செய்யப்பட்ட விளக்குமாம்.]

4. உற – மிகவும் : வெருவல் – பயப்படல் ; துளங்குதல் – நடுங்குதல் ; உயிர்த்தல் - பெருமூச்சுவிடல் ; அயல் - வேறு ; செய்குவது ; செய்வது ; ‘கு’ சாரியை. செய்குவது – தொழிற்பெயர்.

5. வன்கண் – கொடுமை ; இத்துணைப்பகல் – இத்தனைநாள் ; பகல் - நாள் ; தீர்ந்தானோ – தேடுவதைவிட்டானோ? தன் குலத்துக்கு இயல்பாக உடைய பொறுமையையே தன் விஷயத்திலும் கைக்கொண்டானோ? இராப்பகல் இல்லாள் - இரவுபகலென்ற வேறுபாடற்றவள் ; தூக்கமின்றிக் கவலையே உருவமானவள் என்றவாறு.

இல்லாள் – வினையாலணையும் பெயர் ; (இல்லாதவள்) என்னும் – என்பாள் ; செய்யுமென்முற்று ; பொறை = பொறு + ஐ ; பொறுத்தல் ; (‘ஐ’ தொழிற் பெயர்விகுதி)

பொறு + ஐ = பொறை (பொறுக்கப்படுவது ; ‘ஐ’ செயப்படுபொருள் விகுதி) = ஒரு குணத்தின் பெயர். பொறை – காரணம்பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தனக்குக் குற்றம் செய்தவிடத்து அதனை அவனிடத்துத் தானும் செய்யாது பொறுத்தல். ‘ஓ’ வினாப்பொருட்டு.

6. பெயர்த்தும் – திரும்பவும் ; கொற்றம் - வெற்றி ; மாநகர் – பெரியபட்டணம், என்றது அயோத்தியை ; கொண்டு இறத்தல் - கூட்டிச்செல்லுதல் : சொற்ற ஆண்டு - கூறப்பட்டகாலம் (பதினான்குவருடம்) துன்னான் – அடையான் ; உற்றது உண்டு – வனத்திலிருப்பதே உண்டு ; படர் - துன்பம் : உழந்து – வருந்தி ; உறுதநோய் - அநுபவிக்கமுடியாத துன்பம் ; அன்றி இதுவரை யாரும் அடைந்திராத துன்பம் எனினுமாம். ‘உம்’மைகள் எச்சப்பொருளன.

7. அம்பிகடாவிய – தோணியைச் செலுத்திய ; எம்பி நின் தம்பி – எனது தம்பி நின் தம்பியாவான் ; தோழன் – நண்பன் ; மங்கை – மனைவி ; கொழுந்தி – (நின்) மைத்துனி ; உன்னி – நினைந்து ; இவ்விதமாகக் குகனிடம் வார்த்தையாடி நண்புகொண்ட இராமன் தன்னை மறந்து போகமாட்டான் எனத் தேறினள்.



8. உருநிறத்து ஒரு தனிக்கொண்டல் ஊழியான் - திருமேனி நிறத்தினால் ஒப்பற்ற நீர்கொண்ட மேகம்போன்ற அழிவற்றவனான திருமால் ; இருநிறம் – பெரியமார்பு ; உற்ற – பொருந்திய ; எற்கு இயைந்த – என் பக்திக்கு இருப்பிடமாய ; (கவிக்கூற்று) காந்தம் – அழகினையுடையாள் ; மழைக்குலம் – மேகக்கூட்டம் ; மின் – மின்னல் ; குழு – கூட்டம்.

மேகக்கூட்டம் அரக்கியருக்கும், மின் பிராட்டிக்கும் உவமை ; (வண்ண உவமை).

9. வீடினது – அழிந்தது ; வீகலேன் – இறக்கமாட்டேன் ; உவகைத்தேன் – ஆனந்தமாகியதேன் ? (உருவகவணி) ஆண்டு, ஈண்டு : எதிர்ச்சொற்கள். ஆண்டு - அவ்விடம் ; ஈண்டு – இவ்விடம்.

10. மூவகை உலகம் – சுவர்க்க மத்திய பாதாள உலகங்கள் ; முறையின் நீக்கிய – நன்னெறியினின்றும் மாறச்செய்த ; முறையின் – இன் – ஐந்தாம் வேற்றுமை, நீக்கற்பொருள். பாவி என்றது இராவணனை ; உயிர் கொள்வான் - உயிர் கொள்ளப்படுவதற்காக ; கொள்வான் – வினை எச்சம் ; ‘வான்’ விகுதி ; செயப்பாட்டுவினை விகுதி (= படு) விரித்துரைக்கப்படும் ; இழைத்த பண்பு – செய்த செயல் ; ‘ஆவதே’ ‘செல்வியே’ என்பவற்றில் ‘ஏ’ தேற்றப்பொருட்டு. அரவின் நீங்கிய தேவன் – பாம்பணையைவிட்ட ஸ்ரீமந்நாராயணமூர்த்தி ; அவன் என்றது ஸ்ரீ இராமனை ; கமலச் செல்வி – தாமரையிலுள்ள செல்வி ; இலக்குமி.

11. புனை – புனைதல், அணிதல் ; புனை – முதல்நிலைத் தொழிற்பெயர். கழல் – வீரக்கழல் ; இராகவன் – ஸ்ரீ இராமன் ; வனிதையர் – பெண்கள் ; திலகம் – பொட்டு, பெண்களுட் சிறந்தவள் என்றவாறு. நெற்றிக்குத் திலகம் அழகு செய்தல்போல பெண்களுட் சிறந்தவள் சீதை என்றவாறு. மனத்தின் மாண்பு – கற்புநெறிச் சிறப்பு ; வனை – கட்டுதல் ; அரசரின் – அரசர்களது ; ‘இன்’ சாரியை. வண்மை – கொடை ; வீக்கிடும் – அழித்துவிடும் ; (அடக்கும்) தனது அளவற்ற கொடைச் சிறப்பினால் மற்றைய அரசர்களது கொடையை அழியச் செய்பவன். மற்றவர்களது கொடை ஜனகனது கொடையுடன் ஒப்பிடும்பொழுது மிகக்குறைந்ததாம் என்றவாறு. சாற்றுகேன் – புகழ்வேன். ‘கு’ சாரியை. பலபடப் புகழ்ந்தவாறு.

12. கனல்முழுகல் – தீக்குளித்தல் ; புலன்கள் வீக்கியும் - ஐம்புலன்களை அடக்கியும் ; நுங்குவ - பருகப்படுவன ; அருந்துவ – உண்ணப்படுவன ; நோற்றவர் – தவஞ் செய்தவர் ; சீதாபிராட்டியின் நிலையுடன் ஒப்பிடின் தவம் செய்வார்நிலை மிகக்குறைந்தது என்றவாறு. இல்லின் மாண்புடை – இல்லற ஒழுக்கங்களிற் சிறந்த ; மனத்தவம் – மன உறுதியாகிய தவம் (கற்பு); நவிலல் பாலதோ – சொல்லமுடியுந் தன்மையதோ ? ‘ஓ’ எதிர்மறை. கனல் + மூழ்கி = கனன்மூழ்கி.

13. இப்பிராட்டி தோன்றியமையால் உயர்குடிப் பிறப்பு, பெண்மை இவற்றைப்போல நாணமும் சிறப்புடைத்தாயிற்று. பிராட்டி இங்கே இவ்வாறு இருந்த தன்மையைக் காண ஸ்ரீ இராமன் தவம் செய்திலன் என்றவாறு. பேண – விரும்ப; நோற்றல் – தவஞ் செய்தல்; மனைப் பிறவி – உயர்குடிப்பிறப்பு; மாண – மாட்சிமைப்பட; கமலம் – தாமரை; கமலக்கண் – உவமையணி; பேணநோற்றது மனைப்பிறவி பெண்மை போல் – தன்னை யாவரும் விரும்பும்படி தவம்செய்து உயர்ந்தனவாகிய குடிப்பிறப்பு, பெண்மை என்பனபோல; குடிப்பிறப்பும் பெண்மையும் தவஞ்செய்து உயர்ந்தன. அவற்றைப்போல் இன்று நாணமும் சிறந்த தாயிற்று; அது சீதை தோன்றியமையால் சிறந்தது என்றவாறு.

14. வினைக்கருமம் – நல்வினைச்செய்கை; கற்பின்காவலோ – கற்பினதுகாவலோ? யார் ஆற்றுவார் – யார் இவ்வாறு செய்யவல்லார்; ஒருமையே - இவள் கற்பின் ஒருபகுதியையேனும்; உரைக்கற்பாலதோ - சொல்லமுடியுமோ? 'ஓ' எதிர்மறை. எம்மனோர் - எம்போலியர்; உரை + கு + அல் = உரைக்கல் 'கு' சாரியை 'அல்' தொழிற்பெயர் விகுதி.

15. கருத்து – சீதாபிராட்டியின் எண்ணம்; (தற்கொலை செய்ய விரும்பிய எண்ணம்) துணுக்கம் - நடுக்கம்; மெய்தீண்ட – பிராட்டியின் உடலைத் தொட்டுத்தடுக்க; கூசுவான் – கூசியவனாய்; அண்டர் நாயகன் என்றது ஸ்ரீ இராமனை; அருள் – அனுப்பியருளிய; தொண்டைவாய்– கொவ்வைப்பழம்போலும் சிவந்த அதரம். மயில் – மயில்போன்ற சாயலையுடைய பிராட்டி. பிராட்டியின் துக்கம் நீங்கும்வண்ணம் ஸ்ரீராம நாமமூலம் தன்னை அறிமுகம் செய்தான்.

16. ஐயுறல் - சந்தேகமுறுதீர்; ஐயுறு + ஆ + அல் = ஐயுறல்; 'ஆ' எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது. ஆரியன் – பெரியவன்; மெய்யுற – உண்மை உணரும்படி; உணர்த்திய - சொல்லி அனுப்பிய; உரையும் – அடையாள வார்த்தைகளும்; கையுறு நெல்லியங்கனியிற் காண்டி - உள்ளங்கை நெல்லிக்கனிபோல அறிவாயாக; நெய்உறு - நெய்பெய்யப்பட்ட; நினையல் – நினையாதீர்; நினை + ஆ + அல்; வேறு நினையல் என்றது இராவணனால் ஏமாற்றும்பொருட்டு அனுப்பப்பட்ட போலி வேஷக்காரன் என்று கருதற்க என்றவாறு.

17. இறைஞ்ச – வணங்க; நோக்கி – பிராட்டி அநுமனைப் பார்த்து; இரக்கமும் முனிவும் எய்தி – (இராமநாமம் சொன்னமையின்) இரக்கமும் (அரக்கனோ என எண்ணி) கோபமும் அடைந்து (பின்) நின்றவன் – அநுமன் (வினையாலணையும்பெயர்); நிருதன் - அரக்கன்; நெறி நின்று – நல்லொழுக்கத்தில் நின்று; பொறிகள் ஐந்தும் – மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் பஞ்சேந்திரியங்கள் ஐந்தும்; வென்றவன் – அடக்கித் தன்வழி நிறுத்தியவன்; (முனிவன்) விண்ணவன் – தேவன்; நன்றுணர்வு – நல்ல அறிவினையும்; உரையன் – இனிய சொற்களையுமுடையன்; தூயன் – பரிசுத்தமுடையவன்; நவை இலன் – குற்றம் அற்றவன்; 'ஐந்தும்' என்பதில் 'உம்' முற்றும்மை.



18. அமரன் – தேவன்; குரங்கு + இனம் = குரக்கினம்; ஆக – ஆகுக; (வியங்கோள்முற்று) ஆகு + அ = ஆக; 'அ' விகுதி; இரக்கமே ஆக – இரக்கமுடையவனாக; எம்பிரான் - எமது தலைவன். (ஸ்ரீ ராமன்); உணர்வு உருக்கினன் – அறிவை உருக்கினன்; உயிர் தந்தான் என மாற்றுக; இதின் உதவியுண்டோ – இதனிலும் சிறந்த வேறு உதவி உண்டோ; இதைப்போல என்னினுமாம்; இன், ஐந்தாமுருபு. 'ஓ' எதிர்மறை.

19. அன்னவன் – அந்தவாலியை; உம்கோன் – உமது கணவனாகிய ஸ்ரீராமன்; பின்னவன் – தம்பியாகிய சுக்கிரீவன்; துணை – சிநேகன்; எங்கள் மன்னவன் – எங்கள் அரசனாகிய சுக்கிரீவன்; நாயேன் – நாயேனாகிய நான்; மந்திரத்துள்ளேன் – மந்திரியாவேன்; வான் ஆகாயம்; 'இல்' 7-ம் வேற்றுமை இடப்பொருள் உருபு; கால் – காற்று (வாயு தேவன்); 'இன்' சாரியை; வாலியைக்கொன்றுனதலின் இராவணனையும் கொன்று நின்னைமீட்பன் என்னும் பொருள் தோன்றுமாறுகூறினான்.

20. தான் இழந்த மாணிக்கக்கல்லைத் திரும்பவும்பெற்ற புற்றிலுள்ள பாம்புபோன்றாள். தொன்றுதொட்டுவந்த செல்வத்தை இழந்திருந்தவர் மறுபடியும் பெற்றால் எத்தகையராவரோ அத்தகையளானாள். குழந்தையை இழந்தமையால் மலடித்தன்மையடைந்தவள் குழந்தை உயிர் பெற்றெழுந்தால் எத்தன்மையள் ஆவாளோ அத்தன்மையளானாள். கண்ணை இழந்து வருந்தி பின் கண்ணைப்பெற்ற ஒரு உடம்பையும்போன்றாள் பிராட்டி என்றவாறு. உயிர்ப்பொறை – உயிரைப் பொறுப்பது, (உடல்).

21. பசியால் இருந்து என மாற்றுக: இடர் உழந்தவர்கள் – துன்பம் அனுபவித்தவர்கள்; எய்தும் – பெற்ற; அருந்தும் அமுது – உண்ணும் உணவு; அறத்தவரை – இல்லொழுக்கம் தவறாதவரை; அண்மும் – வந்து சேர்கின்ற; விருந்து விருந்தினர்; வீயும் – அழியும்; மீளும் - திரும்பிவருவதற்குக் காரணமான; மணி ஆழி - அழகியமோதிரம்; மணி, இரத்தினமுமாம். உழந்தவர்கள் – வினையாலணையும்பெயர். மருந்து – அமிர்தம்:

22. அரியது அன்று – இச்செயல் உனக்கு அரியதன்று; ஆற்றலுக்கேற்றதே எண்ணினை – உன் வலிக்குத்தக்க செயலையே செய்ய நினைந்தாய்; செய்வதும் செய்தியே – செய்வதாகச் சொன்ன கருமமும் செய்யும் ஆற்றல் உள்ளாய்; உரியதன்று என – நீ சொன்னது தக்கதல்ல என்று; பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மை ஓர்கின்றது உண்டு – மிக்க அறியாமையையும் சிற்றறிவினையுமுடைய என் பெண்தன்மை நினைக்கிற இயல்பு பொருந்திற்று; பெண்மையால் என்பதில் 'ஆல்' அசை: 'ஏற்றதே' 'ஏ' தேற்றம்.

23. வேலை – சமுத்திரம்; வெய்யவர் – அரக்கர்; கோலி – நின்னை வளைத்து; வெஞ்சரம் கோத்தபோது – அம்பு விடும்போது; ஆலம் அன்னவர் – விஷத்தை ஒத்த அரக்கர்; அரக்கரை வெல்வதும் செய்ய

முடியாது என்னைக்காப்பதும் செய்யமுடியாது இருப்பாய்; ஆதலின் "ஆலம் அன்னவர்க்கல்லை" என்றாள். சால - மிகவும், (உரிச்சொல்) ஆலம் பிறரைக் கொல்லும் தன்மையாலும் கருநிறத்தாலும் அரக்கர்க்குவமை.

24. பிறிதுள்ளது - வேறும் காரணங்களும் உள; ஆரியன் - உயர்ந்தவன் (ஸ்ரீராமன்) வென்றி - வெற்றி; வெம்மை + சிலை = வெஞ்சிலை; சிலை - வில்; மாசுணும் - பழிப்படையும்; இனி வேறு நன்றி என் - இதனால் வேறு நன்மை யாது உளது; பதம் - பக்குவமான சோற்றை; வஞ்சித்த நாய்களின் - வஞ்சனை செய்து எடுத்துக்கொண்ட நாய்போன்ற இராட்சதரிடத்து; நின்ற வஞ்சினை - இருந்த வஞ்சனைத்தொழிலை; நீயும் நினைத்தியோ - நீயும் எண்ணினாயா?

நீயும் - 'உம்' உயர்வு சிறப்பு; இராவணன் என்னைப் பிறர்க்குத் தெரியாமல் வஞ்சித்து எடுத்ததுபோல நீயும் செய்வது இழிவு என்றவாறு. இச்சம்பவத்தை நாய் சோறு வஞ்சித்தல்மூலம் தெரியவைத்தார். பிறிது நவிற்சியணி; நீ இங்ஙனம் செய்யின், அது தன் மனைவியை மீட்க வலியற்றவன் என்னும் பழிப்பை ஸ்ரீ ராமனுக்குக் கொடுக்கும். இதனை வில்லின்மேல் ஏற்றிக் கூறினாள்.

25. பொன் பிறங்கல் இலங்கை - பொன்மயமான திரிகூடமலையின் ஒரு பகுதியாய இலங்கை; பொருந்தலர் என்பு - பகைவரது எலும்பு; எலும்புமால்வரை - எலும்புமலையாக; ஆகிலதே எனின் - ஆகாமற் போகுமானால்: இல் பிறப்பு - உயர்குடிப் பிறப்பு; ஒழுக்கு - ஒழுக்கம்; இழுக்கம் - குற்றம்; எங்ஙனம் - எவ்விதம்.

26. மெய்ம்மை - உண்மை; உரை வேறும் உண்டு - சொல்லத் தக்க காரணம் வேறும் உண்டு; ஏறு சேவகன் - ஆண் சிங்கம்போன்ற வீரன் (ஸ்ரீ ராமன்). மேனி - உடம்பு; அல்லால் - அல்லது; ஐம்பொறி ஆறும் நின்னையும் - ஐம்புல இன்பங்களை அடக்கிய நின்னையும; இஉரு - உலது இந்த உருவத்தை; தீண்டுதல் - ஸ்பரிசித்தல்: 'கூடுமோ: 'ஓ' எதிர்மறை.

27. திங்கள் ஒன்று - ஒருமாசம்; தவம் - விரதம்; யாணர் - புதுமை; அடியேற்கு - அடியாளாய எனக்கு; கடன் - இறந்தார்க்குச் செய்யும் கடன்; செம்மை + கை = செங்கை;

28. ஈண்டு - இவ்விடம்; மாயினும் - அழியினும்; தன்மேனி - அப்பிரானது உடம்பை; தீவினை தீர்வரம் - குற்றமற்ற வரத்தை; வேண்டினாள் - வேண்டிக்கொண்டாள்; தொழுது - வணங்கி; விளம்பு - சொல்லு; 'தீர்வரம்' வினைத்தொகை,

பயிற்சி

1. பொருள்கூறுக: மாடு, ஊடு, வீடுவேன், மருங்குல், மருந்து, முகிழ்த்தல், அயில், எயிறு, வெருவல், துளங்குதல், அம்பி, கடாவுதல், கொழுந்தி, காந்தம், வீடுதல், வீக்கல், வனிதையர், நுங்குவ, அருந்துவ, நோற்றல், தொண்டை, முனிவு, நிருதன், நவை, கால்



நிறம் (இருபொருள்) உழந்து அண்மல், வேலை, கோலி, மாசுணும், பொருந்தலர், திங்கள், யாணர்.

2. இப்பகுதியில் ஸ்ரீ ராமனையும் சீதாபிராட்டியையும் குறிப்பிடவந்த சொற்களை எழுதுக.
3. 'நாய்கள்' என்னும் சொல் இப்பகுதியில் எடுத்தாளப்பட்டதேன்?
4. எயிறு, புலி, வாய் இவற்றுடனியைந்துவந்த அடைமொழிகளெவை?
5. அரக்கியர் நடுவிலிருந்த பிராட்டி எவ்விதம் வர்ணிக்கப்பட்டாள்?
6. "மென்மருங்குல் போல்வேறுள அங்கமும் மெலிந்தாள்" இதில் தோன்றும் நயம் என்ன?
7. நங்கையர் மனத்தவம் நவிலற்பாலது ஏன்?
8. இராமன் அடையாதபேறு அநுமன் பெற்றான் எப்போது?
9. பிராட்டியின் கற்பை அநுமன் எவ்விதம் புகழ்ந்தான்?
10. மோதிரத்தைக்கண்ட பிராட்டியின் நிலை எவ்விதம் வர்ணிக்கப்பட்டது?
11. அநுமன் பிராட்டியை உடன் கொண்டுபோக எண்ணியது எவ்வகைகளிற் குற்றமுடையது?
12. பிராட்டி அநுமனிடம் சொல்லியனுப்பியவை யாவை?
13. "வெஞ்சிலை மாசுணும்" என்பதன் கருத்து யாது?
14. "இற்பிறப்பும ஒழுக்குமிழுக்கமில் ... ..... காட்டுகேன்" இக்கூற்றினால் நாம் அறிவது யாது?
15. உடன் கொண்டுபோவேன் என்று கூறிய அநுமன் வார்த்தையை "அரியதன்று" என மறுக்கத்தொடங்கிய முறையின் சிறப்பை விளக்குக.
16. பிராட்டியைக்கண்ட அநுமன் மகிழ்ச்சியை விபரிக்க.
17. பிறிது நவிற்சியணிக்கு உதாரணம் தருக,

இலக்கணம்

1. பிரித்தெழுதுக: எற்புமால்வரை, குரக்கிலம், எயிற்றுவெம்புலி, ஆற்றங்கரை, பழந்தனம்.
2. பதச்சேதம் செய்க: கடாவிய, கண்டிலன், வீட்டி, உணங்கிய, அன்று, வையார், ஆக.
3. இலக்கணம் கூறுக: கொள்வான், செய்குவது, துன்னன், ஆகுக.
4. இப்பகுதியில் வந்த இடைச்சொற்களை எழுதுக: 'ஏ' எப்பொருள்களில் வந்தன?

கட்டுரையாக்கம்

1. சீதை இராமனைப் பிரிந்திருந்த நிலையை வர்ணிக்க.
2. சீதையும் அநுமனும் சம்பாஷிப்பதுபோல எழுதுக.

## 3. குசேலோபாக்கியானம்

### குசேலர் மேல்கடலடைந்த அத்தியாயம்

குசேல + உபாக்கியாநம் = குசேலோபாக்கியானம்: வடமொழிச்சந்தி; உபாக்கியானம் — சரிதம்; குசேலரதுசரிதம் கூறும் நூல்; இஃது வல்லூர்த் தேவராசபிள்ளை என்பவரால் இயற்றப்பட்டது; வல்லூர்த் தேவராசபிள்ளை ஏறக்குறைய 100 வருடங்களின்முன் இருந்தவர்; மீனாட்சிசுந்தரம்பிள்ளை என்பவரின் மாணுக்கராவார்.

குசேலர் திருமாலிடம் பக்திபூண்ட அன்பர். சாந்தீபமுனிவர்பால் கண்ணபிரானுடன் உடன் கற்றவர். இவரது இயற்பெயர் சுதாமா என்பது. கிழிந்த சீலைகளைத் தைத்து உடுத்தியமையால் குசேலர் என்னும் பெயர் பெற்றார். குசேலரின் மனைவியின் பெயர் சுசீலை. குசேலருக்கு 27 பிள்ளைகள் இருந்தனர். வறுமைகாரணமாக அப்பிள்ளைகள் கஷ்டமுற்றனர். அவர்களது கஷ்டத்தைக் கண்டு சுசீலை மிகவும் வருந்தினள். கீழ்வரும் பாடல்கள் வறுமைகாரணமாகக் கஷ்டமுறும் அப்பிள்ளைகளின் நிலையைத் தெரிவிக்கும் :

1. ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு
கைநீட்டும் முந்தி மேல்வீழ்ந்
திருமகவுங் கைநீட்டும் மும்மகவும்
கைநீட்டும் என்செய் வாளால்
பொருமிஒரு மகவழும்கண் பிசைந்தழும்மற்
றொருமகவு புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமகவெங்
ஙனம்சகிப்பாள் பெரிதும் பாவம்.

2. அந்தோஎன் வயிற்றெழுந்த பசியடங்கிற்
றில்லைஎன அழுமா லோர்சேய்
சிந்தாத கஞ்சிவாக் கிலைஎனக்கன்
னையெனப்பொய் செப்பு மோர்சேய்,
முந்தார்வத் தொருசேய்மி சையப்புகும்போ
தினில்ஒருசேய் முடுகி யீர்ப்ப
நந்தாமற் றச்சேயும் எதிரீர்ப்ப
சிந்துதற்கு நயக்கு மோர்சேய்.



#### சுசீலை பிள்ளைகளை ஆற்றுதல்

3. இவ்வண்ணம் கலாம்விளைக்கும் மைந்தர்களை
நனிநோக்கி இரங்கி ஏங்கிச்
செவ்வண்ணக் கரதலத்தால் அணைத்துமடித்
தலத்திருத்திச் சிறப்புச் செய்து
மைவ்வண்ணக் கண்ணீரைத் துடைத்துமுகம்
வெரிந்புறம்தை வந்து மாம்பல்
அவ்வண்ண வாய்முத்தங் கொண்டுநயந்
தோர்விதத்தி லாற்றல் செய்வாள்.

4. அடுத்தமனைச் சிறுவொருவன் இன்றுநும
தகங்கறியென் அட்டா ரென்று
.தொடுத்துவினா யினனுலச் சொற்பொருள்யா
ததுதான்எச் சுவைத்தன் னாய்நீ
எடுத்துரையென் றிடுமழவுக் குரைக்கிலது
செய்யெனிலென் செய்வா மென்று
மடுத்தஅஃது அறிந்திலேன் எனமற்றொன்
றுரைத்ததனை மறக்கச் செய்வாள்.

5. வேறுமனைச் சிறுன்அயின்ற பக்கணம்கண்
டோடிவந்து விழிநீர் வாரச்
சீறுதலி லாதவனை முகம்பார்த்துஇன்
னுனின்ன தின்றான் என்வாய்
ஊறுதலா லிப்பொழுதே செய்தளித்தி
எனஉடுத்த உடைதொட் டீர்க்கும்
தேறுதலில் சிறுமகவை எடுத்துமார்
பிடைஅணைத்துச் சிந்தை நோவாள்.

6. குண்டலமோ திரம்கடகம் சுட்டிஅயல்
மனையார்தங் குழவிக் கிட்டார்
புண்டரிகக் கண்ணாய் எனக்குநீ
இடாதிருக்கும் பொருமை என்னே
கண்டெடுத்திப் போதிடெனக் கரைமதலைக்
கில்லாதான் கடன்தந் தானுக்கு
எண்தபச்சொல் வார்த்தையென நாளைக்கு
நாளைக்கென் றியம்பிச் சோர்வாள்.

7\. சிறியசித மணிப்பூணை யன்றிவே
றொருபூணச் சேய்கட் கில்லை
வறியமர நாருரியே யுடையன்றி
மற்றுடைகண் மருவ லில்லை
வெறியபொழில் தழைத்தஇலை உண்கலமல்
லாதுகலம் வேறொன் றில்லை
குறியமனை வயிற்புகுமோ ரெறும்பினுக்கும்
ஆங்குணவு கொடுத்தற் கில்லை.

**குறிப்புரை :**

1\. மகவு - குழந்தை ; அளித்திடும்போது - கொடுக்கும்போது ; உந்தி - வயிறு ; பொருமி - விம்மி ; வீழா - வீழ்ந்து ; செய்யா என்னும் வாய்பாட்டு வினை எச்சம்.

2\. அந்தோ - ஐயோ ! 'ஆல்' அசை. சிந்தாத - நிலத்தில் ஊற்றுததாகிய ; 'இல்லை' 'இலை' என மருவிற்று. அன்னாய் - தாயே ; சேய் - குழந்தை ; செப்பும் - சொல்லும் ; முந்து - முதலில் வாங்க வேண்டும் என்னும் ; ஆர்வத்து - ஆசையினால் ; மிசைய - உண்ண ; முடுகி - நெருங்கி ; ஈர்ப்ப - இழுக்க ; நந்தா - இளைக்காமல் ; எதிர் ஈர்ப்ப - எதிரே இழுக்க , சிந்துதற்கு - கீழே வீழ்ந்ததற்கு ; நயக்கும் - விரும்பும் ; சிந்தாத, எதிர்மறைப் பெயரெச்சம். நந்தா — நந்து + ஆ = ஈறுகுறைந்த எதிர்மறைப் பெயரெச்சம்.

3\. இவ்வண்ணம் - இவ்வாறு ; கலாம் - கலகம் ; மைந்தர் - புத்திரர்; நனி - மிகவும் ; (உரிச்சொல்) செம்மை + வண்ணம் = செவ்வண்ணம் ; வண்ணம் - நிறம் ; கரதலம் - கை ; மடித்தலம் - மடியாகிய இடம் ; மைவண்ணம் - கருநிறம் ; கண்ணுக்கு அஞ்சனம் தீட்டப்படுதலின் 'மைவண்ணக்கண்ணீரா'யிற்று. இவர்களுக்கு வறுமை காரணமாகக் கண்ணுக்கு மைதீட்டுதல் இல்லையாயினும் இயற்கை அடைகொடுத்துச் சொன்னார். ஆகவே கண்ணீர் என்னும் பொருள்மாத்திரையே கொள்க. மேலும் இவ்வாறு வருவனவற்றை உரைத்துக்கொள்க. முகம்தைவந்து - முகந்தடவி ; வெரிந்புறம்தைவந்து - முதுகுப்புறத்தைத்தடவி ; மாம்பல் - வருத்தம், வருத்தத்துடன் ; அவ்வண்ணம் - அழகிய ; நயத்து - ஆசை காட்டி.

4\. மனை - வீடு ; சிறுன் - குழந்தை ; அகம் - வீடு, வீட்டில் ; அட்டார் - சமைத்தார் ; தொடுத்துவினையினன் - அடிக்கடி கேட்டான் ; சுவைத்து - சுவையை உடையது ; (குறிப்புமுற்று) மழவு - குழந்தை ; மடுத்த - சமையல் செய்த.

அடுத்தவீட்டுப் பையன் உமது வீட்டில் இன்று என்ன கறி சமைத்தார் என்று வினவின் அதன் பொருளை அறியமாட்டாது



தாயிடம் சென்று கறியென்றால் என்ன ? அது எப்படிப்பட்ட சுவையை உடையது, எனத் தாயை ஒரு குழந்தை வினவும்; அக்குழந்தைக்கு அதை விளக்கிக்கூறின் அதனைச் செய்துதாவெனில் என் செய்வது என எண்ணி அறியேனென்று வேறொருகதை கூறி அதனை மறக்கச் செய்வாள்.

5\. அயின்ற - சாப்பிட்ட ; பக்கணம் - பட்சணம் ; விழி - கண் ; சீறுதல் இலாத - கோபிக்காத ; அன்னை [ அனை என மருவிற்று ] - தாய் ; அளித்தி - கொடு ; ஈர்க்கும் - இழுக்கும் ; தேறுதல்இல் - தேறாத ; சிந்தை - மனம் ; அயில் + ற் + அ = அயின்ற ; வர என்பது வார என நீண்டது.

6- குண்டலம் - காதணி ; கடகம் - காப்பு ; சுட்டி - கருதி ; அயல் + மனை = அயன்மனை - பக்கத்து வீட்டார் ; குழவி - குழந்தை ; புண்டரீகம் - தாமரை ; (போன்ற) : இடு - தா ; கரைமதலை - சப்தமிடும் குழந்தை ; வறியவன் கடன் கொடுத்தவனுக்கு (எண்தப - கால அளவு கெட) நாளைக்கு நாளைக்கு என்று தவணை சொல்வதுபோல குழந்தைகளுக்குச் சொல்லிவருவாள்.

7\. சிதமணி - வெண்மணி, கற்களால் ஆக்கப்பட்டமணி ; பூண் - ஆபரணம் ; சேய் - குழந்தை ; மரநாருரி - மரத்திலிருந்து எடுக்கப்படும் மரவுரி ; மருவல் - பொருந்துதல், அணிதல் ; வெறிய - வாசனையுடைய ; பொழில் - சோலை ; உண்கலம் - உண்பதற்கு ஆதாரமான பாத்திரம் ; குறிய - சிறிய ; மனை - வீடு ; வயின் - ஏழாம் வேற்றுமை உருபு.

**பயிற்சி**

1. பொருள்தருக : மகவு, சகித்தல், செப்பும், ஆர்வம், சேய், வெரிந், தைவந்து, அடுதல், அயின்ற, பக்கணம், குண்டலம், கடகம், பூண், சிதமணி, உண்கலம்.
2. இப்பகுதியில் வந்த குழந்தைப் பெயர்களை எழுதுக.
3. பின்வரும் சொற்களுக்குக் கொடுக்கப்பட்ட அடைமொழிகள் யாவை : கரம், வாய், கண்.
4. உணவின்பொருட்டு அழும் குழந்தைகளை சுசீலை எவ்விதம் ஆறச் செய்வாள் ?
5. 'கறி' என்பதன் பொருளை அறியேனெனச் சுசீலை கூறவேண்டுவதேன் ?
6. "கடன்தந்தானுக்கு எண்தபச் சொல்வார்த்தை" என்பதன் பொருள் யாது ? அது எதற்குவமையாயிற்று ?
7. குசேலரது பிள்ளைகளின் ஆபரணம், உடை, உண்கலம் எவை ?

**இலக்கணம்**

1. இலக்கணம் கூறுக : சுவைத்து, உரைக்கில், செய்வாம், பொருமி, முடுகி, ஈர்ப்ப, அளித்தி; விளைக்கும்,

2. பதச்சேதம் செய்க: வாக்கிலே, பொறுமை, நந்தா. நயக்கும், தேறுதல்.
3. தொகாநிலைகளாக்குக: உண்கலம், நாருரி, கரைமதலை.
4. பின்வரும் குற்றியலுகரங்கள் எவ்வகையைச் சார்ந்தன? இன்று, யாத்து, எடுத்து, மாது.
5. பின்வருவனவற்றிலுள்ள இடைச் சொற்கள் எப்பொருளன? பூணே, எறும்பினுக்கும், மனைவயின்.

கட்டுரையாக்கம்

1 பிள்ளைகள் உணவின் பொருட்டுச் செய்யும் கலகம் எத்தகையது என எழுதுக.
2. சுசீலையின் பொறுமை என்பதுபற்றி ஒருகட்டுரை எழுதுக

---

## 4. பாஞ்சாலி சபதம்

[பாஞ்சாலி – பாஞ்சாலன் மகள்; திரௌபதை பாஞ்சால அரசன் மகளாவள்].

இந்நூல் சுப்பிரமணிய பாரதியார் அவர்களாற் பாடப் பட்டது. அவர் வேறும் அநேக நூல்கள் பாடியவர்.

இவர் முப்பது வருடங்களுக்குமுன் வாழ்ந்தவர். தமிழ் நாட்டில் சுதந்திர ஆர்வத்தை உண்டாக்கிய கவிஞர். இவருடைய பாடல்களுள் பல இந்திய சுதந்தரத்தை அடிப்படையாகக் கொண்டவை. இவர் எட்டயபுரத்தில் பிறந்தவர்.

[பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தம் என்னுமிடத்தில் இருந்து அரசு செலுத்தும்பொழுது அவர்களது செல்வ வாழ்க்கையைக் கண்டு பொறுமையுற்ற துரியோதனன் சகுனியுடன் சூழ்ச்சி செய்து திருதராட்டிரன் உத்தரவுப்படி பாண்டவர்களைத் தனது நகராகிய அத்தனுபுரிக்கழைப்பித்தான்.

அவ்விடத்தில் திவினையின் சூழ்ச்சியால் சகுனியுடன் சூதாடத் தருமர் சம்மதித்தார். சூதாடி நாடு நகர் செல்வம் அனைத்தையும் தோற்றார். ஈற்றில் சகோதரர்களையும், தன்னையும், திரௌபதியையும் தோற்றார்.

தோற்றபின் திரௌபதியை (பாஞ்சாலி) அரசசபைக்கு இழுத்துவந்து அவளது துகிலை உரியும்படி துரியோதனன் துச்சாதனனுக்குக் கட்டளையிட்டான். உடனே,



1. 'துச்சா தனன்எழுந்தே—அன்னை
துகிலினை மன்றிடை உரிதலுற்றான்
'அச்சோ தேவர்களே!'—என்
றலறியவ் விதுரனும் தரைசாய்ந்தான்
பிச்சே றியவனைப்போல்—அந்தப்
பேயனும் துகிலினை உரிகையிலே
உட்சோ தியிற்கலந்தாள்;—அன்னை
உலகத்தை மறந்தாள் ஒருமையுற்றாள்.

2. 'ஹரி,ஹரி, ஹரிஎன்றாள்;—கண்ணா!
அபய மபயமுனக் கபயமென்றாள்
கரியினுக் கருள்புரிந்தே—அன்று
கயத்திடை முதலையின் உயிர்மடித்தாய்
கரியநன் னிறமுடையாய்—அன்று
காளிங்கன் தலைமிசை நடம்புரிந்தாய்
பெரியதோர் பொருளாவாய்—கண்ணா
பேசரும் பழமறைப் பொருளாவாய்.

3. 'ஆதியி லாதியப்பா—கண்ணா!
அறிவினைக் கடந்தவிண் ணகப்பொருளே!
சோதிக்குச் சோதியப்பா—என்றன்
சொல்லினைக் கேட்டருள் செய்திடுவாய்!
மாதிக்கு வெளியினிலே—நடு
வானத்திற் பறந்திடும் கருடன்மிசை
சோதிக்குள் ஊர்ந்திடுவாய்—கண்ணா
சுடர்ப்பொரு ளேபே ரடற்பொருளே.

4. '"கம்பத்தி லுள்ளானோ—அடா!
காட்டுன்றன் கடவுளைத் தூணிடத்தே!
வம்புரை செயுமூடா"—என்று
மகன்மிசை யுறுமியத் தூணுதைத்தான்
செம்பவிர் குழலுடையான்;—அந்தத்
தீயவல் லிரணிய னுடல்பிளந்தாய்!
நம்பிநின் னடிதொழுதேன்—என்னை
நாணழி யாதிங்கு காத்தருள்வாய்.

5. 'வையகங் காத்திடுவாய்!—கண்ணா!
மணிவண்ணா என்றன் மனச்சுடரே!
ஐய,நின் பதமலரே—சரண்
ஹரி,ஹரி, ஹரி', என்றாள்
பொய்யர்தம் துயரினைப்போல்—நல்ல
புண்ணிய வாளர்தம் புகழினைப்போல்
தையலர் கருணையைப்போல்—கடல்
சலசலத் தெறிந்திடும் அலைகளைப்போல்

6. பெண்ணொளி வாழ்த்திடுவார்—அந்தப்
பெருமக்கள் செல்வத்திற் பெருகுதல்போல்
கண்ண பிரானருளால்—தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணிபுதிதாய்
வண்ணப்பொற் சேலைகளாம்—அவை
வளர்ந்தன; வளர்ந்தன; வளர்ந்தனவே!
எண்ணத்தி லடங்காவே—அவை
எத்தனை எத்தனை நிறத்தனவோ!

7. பொன்னிழை பட்டிழையும்—பல
புதுப்புதுப் புதுப்புதுப் புதுமைகளாய்,
சென்னியிற் கைகுவித்தாள்—அவள்
செவ்விய மேனியைச் சார்ந்துநின்றே
முன்னிய ஹரிநாமம்—தன்னில்
மூழுநற் பயனுல கறிந்திடவே
துன்னிய துகிற்கூட்டம்—கண்டு
தொழும்பத்துச் சாதனன் வீழ்ந்துவிட்டான்.

8. தேவர்கள் பூச்சொரிந்தார்—'ஓம்
ஜெயஜெய பாரத சக்தி'என்றே
ஆவலோ டெழுந்துநின்று—முன்னை
ஆரிய வீட்டுமன் கைதொழுதான்
சாவடி மறவரெலாம்—'ஓம்
சக்திசக்தி சக்தி' என்று கரங்குவித்தார்
காவலி னெறிபிழைத்தான்,—கொடி
கடியர வுடையவன் தலைகவிழ்ந்தான்



### வீமன் செய்த சபதம்

9 வீம னெழுந்துரை செய்வான்—'இங்கு
விண்ணவ ராணை, பராசக்தி யாணை,
தாமரைப் பூவினில் வந்தான்—மறை
சாற்றிய தேவன் திருக்கழ லாணை
மாமகளைக்கொண்ட தேவன்—எங்கள்
மரபுக்குத் தேவன்கண் ணன்பதத் தாணை;
காமனைக் கண்ணழ லாலே—சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடி மீதில்

10. 'ஆணையிட் டிஃதுரை செய்வேன்—இந்த
ஆண்மையி லாத்துரி யோதனன் தன்னை
பேணும் பெருங்கன லொத்தாள்—எங்கள்
பெண்டு திரௌபதி யைத்தொடை மீதில்
நாணின்றி 'வந்திரு' வென்றான்—இந்த
நாய்மக னாந்துரி யோதனன் தன்னை
மாணற்ற மன்னர்கண் முன்னே—என்றன்
வன்மையி னால்யுத்த ரங்கத்தின் கண்ணே

11. 'தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன்—தம்பி
சூரத்துச் சாதனன் தன்னையு மாங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன்—அங்கு
கள்ளென ஊறு மிரத்தங் குடிப்பேன்
நடைபெறும் காண்பீ ருலகீர்!—இது
நான்சொல்லும்வார்த்தையென்றெண்ணிடல்வேண்டாம்
தடையற்ற தெய்வத்தின் வார்த்தை—இது
சாதனை செய்க, பராசக்தி!' என்றான்.

### அர்ஜுனன் செய்த சபதம்

12. பார்த்த னெழுந்துரை செய்வான்;—'இந்த
பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன்
தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு—எங்கள்
சீரிய நண்பன்கண் ணன்கழ லாணை;
கார்த்தடங் கண்ணிஎன் தேவி—அவள்
கண்ணிணும் காண்டிவ வில்லினு மாணை
போர்த்தொழில் விந்தைகள் காண்பாய்—ஹே
பூதலமே! அந்தப் போதினில்' என்றான்.

**பாஞ்சாலி சபதம்**

13. தேவி திரௌபதி சொல்வாள்—‘ ஓம்
தேவி பராசக்தி ஆணை உரைத்தேன் ;
பாவிதுச் சாதனன் செந்நீர்—அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை யிரத்தம்
மேவி இரண்டுங் கலந்து—குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான் ;—இது
செய்யுமுன் னேமுடி யேனென்’ னுரைத்தாள்.

14. ஓமென் றுரைத்தனர் தேவர்—ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்
பூமி யதிர்ச்சியுண் டாச்சு - விண்ணைப்
பூழிப டுத்திய தாஞ்சுழற் காற்று
சாமி தருமன் புவிக்கே—என்று
சாட்சி யுரைத்தன பூதங்க ளைந்தும்
நாமுங் கதையை முடித்தோம்—இந்த
நானில முற்றுநல் லின்பத்தில் வாழ்க.

**குறிப்புரை :**

1. துகில் – சேலை ; மன்று – சபை ; பிச்சு – பித்து ; உட்சோதி – மனத்துள் உள்ள கடவுளாகிய ஒளி.

2. ஹரி – விஷ்ணுவின் பெயர் ; அபயம் – அடைக்கலம் ; கரி – யானை (கஜேந்திரன்). கயம் – குளம் ; காளிங்கன் என்னும் பாம்பின் தலையில் கிருஷ்ணர் நடனம் புரிந்தார். மறை – வேதம்.

3. ஆதி – தொடக்கம் (முதல்வன்) ; விண்ணகம் – ஆகாயம் ; சோதி – ஒளி ; மா + திக்கு = பெரியதிக்கு ; சுடர் – ஒளி ; அடல் – வலி.

4. கம்பம் – தூண் ; வம்பு உரை – புதுமையானசொல். என்றது விஷ்ணு எங்குமிருப்பான் என்று கூறியதை உள்ளிட்டுச் சொன்னவாறு; மூடனென்றது பிரகலாதனை. செம்பு – தாமிரம் ; செம்பவிர் – தாமிரம்போல் விளங்குகின்ற ; என்றது தாமிரமபோன்ற நிறமுடைய என்றவாறு ; குழல் – மயிர் ; நாண் – நாணம் ; பெண்களின் நாற்குணங்களுள் ஒன்று. நாற்குணங்கள் – மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு.

5. வையகம் – பூமி ; மணிவண்ணு – நீலமணிபோலும் நிறமுடையவனே ; சரண் – அடைக்கலம் ; கருணை – இரக்கம்.

6. ஒளி – புகழ் ; தம்பி என்றது – துச்சாதனனை.



7. இழை – நூல் ; சென்னி – தலை ; முன்னிய – நினைத்த ; செவ்விய - குறிப்புப் பெயரெச்சம். துன்னிய - பொருந்திய ; துகில் – சேலை.

8. ஜெய - வெற்றி ; சாவடி - சத்திரம் ; மறவர் – வீரர் ; கரம் - கை ; காவல் – அரசு ; நெறி – முறை ; அரவு - பாம்பு ; (ஆகுபெயர்)

9. தாமரைப் பூவில்வந்தான்,மறைசாற்றியதேவன்-பிரமன், மறை–வேதம்; கழல்-பாதம்(ஆகுபெயர்)கழல்என்னும் ஆபரணம், அவ்வாபரணம் பூண்டகாலுக்காயிற்று; மாமகள்–இலக்குமி; தேவன் என்றதுவிஷ்ணுவை; பதம் - பாதம்; காமன் – மன்மதன் ; கண்அழல்–அக்கினிக்கண்; காலன் – யமன் ; [மார்க்கண்டேயமுனிவர் கதையை உள்ளடக்கியது.]

10. கனல் – அக்கினி; பேணும்கனல் - யாகாக்கினி ;

11. சாதனை – சாதித்தல்.

12. பாதகன் – கொடியவன் ; தீர்த்தன் – புண்ணியன் ; சீரிய – சிறந்த ; கார் – கரிய ; தடங்கண்ணி – விசாலமானகண்ணை உடையவள் ; தேவி என்றது பராசக்தியை. ( திரௌபதியெனினுமாம் ) பூதலம் - பூமி.

13. செந்நீர் – இரத்தம் ; ஆக்கை – உடல் ; குழல் – கூந்தல்.

14. நான்கு + நிலம் = நானிலம் – பூமி : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன ; ஐம்பூதங்கள்–பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்.

**பயிற்சி :**

1. பொருள் எழுதுக : மன்று, அபயம், கயம், குழல், வையகம், இரணியன், சாவடி, காலன், கழல், காமன், சாதனை, ஆக்கை, செந்நீர், நானிலம்.
2. திரௌபதியின் துகில் வளர்ந்தமைக்குக் காட்டப்பட்ட உவமானங்களைக் கூறுக.
3. ‘ மின்திரண்டனைய பங்கி ’ என்னும் இராமாயணப்பகுதி இப்பகுதியில் எவ்வரியுடன் ஒப்பிடத்தக்கது ? பங்கி – மயிர்.
4. திரௌபதி, ஸ்ரீ கிருஷ்ணன்: இவர்களைக் குறிப்பிட இப்பகுதியில் வந்துள்ள சொற்கள் யாவை ?
5. இப்பகுதியில் திரௌபதி கூறிய சபத வார்த்தையை மகாபாரதத்தில் இச்சம்பவச் செய்யுளுடன் ஒப்பு நோக்கி ஆராய்க.
6. திரௌபதி கண்ணபிரானை எவ்விதம் வேண்டினுள் ?
7. வீமன் கூறிய சபதவார்த்தை யாது ?
8. சபதம் செய்யும்போது யார்மீதாணையிட்டுக் கூறினர் ? ஏன் ?
9. துரியோதனன், துச்சாதனன் என்போர் எப்பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர் ?
10. திரௌபதியை வீட்டுமர் வணங்கியதேன் ? விதுரன் தரைசாய்ந்ததேன் ?
11. அர்ஜுனன் சபதவார்த்தை யாது ?

12. இப்பகுதியில் பெண்ணின் பெருமை எவ்வாறு புகழப்பட்டது?
13. 'சென்னியிற் கைகுவித்தாள்' என்னும் தொடரிலுள்ள நயம் யாது?
14. துரியோதனன் தொடைமுரிந்து இறந்தமைக்கும் இப்பகுதிக் கதைக்கும் தொடர்பு என்ன?

இலக்கணம்:

1. பிரித்தெழுதுக: மாதிக்கு, கார்த்தடங்கண்ணி, செந்நீர், நானிலம், வஃபுரை.
2. இப்பகுதியில்வந்துள்ள, இரட்டைக்கிளவிகள் யாவை? இவை போன்றன வேறு சில கூறுக? அவற்றை அமைத்து வசனம் ஆக்குக.
3. பதச்சேதம் செய்க: புரிந்தாய், தொழுதேன், அலறி, பிளந்தாய்.
4. உதாரணம் தருக: வினையாலணையும் பெயர், ஆகுபெயர், உவம உருபு, விளிவேற்றுமை.
5. இப்பகுதியில் வந்த இடைச்சொற்களியாவை?
6. இலக்கணம் கூறுக: கரிய, ஆக்கை, கலந்து, வாழ்க, செவ்விய.

கட்டுரை:

1. இரணியன் வரலாற்றைத் தருக.
2. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பதுபற்றி ஒரு கட்டுரை எழுதுக.
3. கஜேந்திரன் கதையை எழுதுக.
4. 'பெண்ணின் பெருமை' என்பதுபற்றி ஐந்து வசனம் எழுதுக.

# III. சங்கச் செய்யுள்கள்

பண்டைக்காலத்திலே தமிழ் நாட்டில் மூன்று சங்கங்கள் இருந்தன. அவை முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்பன. கடைச்சங்கம் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது. சங்ககாலத்துச் சான்றோரால் பாடப்பட்ட செய்யுள்கள் சங்கச் செய்யுள்கள் எனப்படும். சங்கச் செய்யுள்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என மூவகைப் படுத்தப்பட்டிருக்கின்றன.

பத்துப்பாட்டில் பத்துநூல்கள் இருக்கின்றன. எட்டுத்தொகையில் புறநானூறு, குறுந்தொகை, கலித்தொகை முதலிய எட்டு நூல்கள் உள்ளன. திருக்குறள், நாலடியார், திரிகடுகம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது முதலிய பதினெட்டு நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்வகையைச் சார்ந்தன.

## 1. புறநானூறு

புறம் + நானூறு = புறநானூறு; [இல்லறம் அகமெனவும், போர்செய்தல் முதலியன புறம் எனவும் அழைக்கப்படும்.] இது புறப்பொருள் நூலாகும். இந்நூலில் 400 பாடல்கள் உள. அவை பல புலவர்களாற் பாடப்பட்டன.

### ஆட்சியும் நல்வாழ்வும்

1. நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
அதனால், 'யான்உயி ரெ'ன்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே. — மோசிகீரனார்.

### சான்றாண்மை

2. யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர்என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே. — பிசிராந்தையர்.

வீரத்தாய்

3. ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி
களிறெறிந்துபெயர்தல்காளைக்குக்கடனே. —பொன்முடியார்.

## 2. கலித்தொகை

கலிப்பாட்டு என்னும் ஒருவகைப் பாவால் தொகுக்கப் பட்டமையால் கலித்தொகை என்றாயிற்று; இந்நூல் ஐந்து பகுதிகளையுடையது. 150 பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பகுதியும் ஒவ்வோர் புலவராற் பாடப்பட்டது. ஐந்து பகுதிகளும் முறையே பாலை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனப் படும். நெய்தற் கலியைப் பாடியவர் நல்லந்துவனார் என்னும் புலவர். நெய்தற் கலியில் 33 பாடல்கள் உள்ளன. அவற் றில் ஒரு செய்யுளின் ஒரு பகுதி கீழேதரப்படுகிறது:

குணங்களின் கருத்து

1. ஆற்றுதல் என்பதொன்று அலர்ந்தவர்க் குதவுதல்;
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்;
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை;
அறிவெனப் படுவது பேதையர்சொல் நோன்றல்;
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை;
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை;
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்;
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்.
— நல்லந்துவனார். கலி – 133; கூ — 1௯.

## 3. குறுந்தொகை

பலபுலவர்களாற் பாடப்பட்ட அகப்பொருள் நூல். 401 பாடல்களை உடையது.

இல்லற இன்பம்

1. முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்



தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே.
—கூடலூர்கிழார்

**குறிப்புரை: புறநானூறு.**

1. உயிர்த்து - உயிராகவுடையது; மலர்தலை – இடமகன்ற; தானை – சேனை; இடமகன்ற உலகத்திலுள்ளவர்க்கு உயிராகவிருப்பது நெல்லு மன்று நீருமன்று; மன்னனே உயிர். அதனால் "யானே இவ்வுலகத் துக்கு உயிர்" என்பதனை அறிதல் அரசருக்கு முறையாம். மன்னன் நல்லாட்சியின் பயனாகவே நெல்லும் நீரும் கிடைக்குமாதலின் இவ்வாறு கூறினார். அன்று, உயிர்த்து - குறிப்பு முற்றுக்கள். அறிகை – தொழிற் பெயர். 'யான் உயிர்' என்றது நேர்க்கூற்று. 'ஏகாரம்' அசைப் பொருள். உலகம் – ஆகுபெயர்.

2. யாண்டு – ஆண்டு; நரை - நரைத்த முதுமை; யாங்காகியர் – எவ் விதமாயினீர்; மாண்ட – மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய; நிரம் பினர் - அறிவு நிரம்பினர்; யான் கண்டனையர் – யான் கருதியதனையே தாமும் கருதுவர்; இளையர் – ஏவல் செய்வார்; அல்லவை – முறையல்லா தன; அதன்தலை - அதற்குமேல்; ஆன்று அவிந்து அடங்கிய கொள் கைச் சான்றோர் – (நற்குணங்கள்) அமையப் பெற்று (உயர்ந்தோரைப்) பணிந்து (ஐம்புல இன்பங்களையும்) அடக்கிய இயல்பினையுடைய பெரி யோர்; பலர் – பலருளர்.

வருடங்கள் பலவாயினும் முதுமையடையாமலிருந்தது எங்ஙன மெனில், என்னுடைய மனைவியும் மக்களும் அறிவு நிரம்பியிருக்கிறார். நான் எண்ணியதையே என் இளையர் செய்வர்; அரசன் நல்ல அரசாட்சி செய்கிறான். நான் இருக்கும் ஊரில் ஆன்று அவிந்து அடங்கிய சான் றோர் பலர் உளராதலின் என்றவாறு.

3. ஈன்று – புதல்வனைப் பெற்று; புறந்தருதல் – காப்பாற்றுதல்; என்தலை - எனது (உருபுமயக்கம்); சான்றோன் – பெருமையும் அறிவும் உடையவன்; வடித்து – செய்து; நல் + நடை = நன்னடை - நல்லொழுக்கம்; நல்கல் - கொடுத்தல்; ஒளிறுவாள் - பிரகாசிக்கும் வாளால்; அரும்சமம் முருக்கி – அரிய போரைவென்று; களிறு – யானை; எறிந்து – வெட்டி; பெயர்தல் – மீளல்; காளை – காளைபோன்ற புதல்வன், நல்நடை என்ப தற்கு நல்ல செலவினை உடையதாகிய யானை எனவும் பொருள் கொள்ள லாம். ஒரு தாய் தன் கடமையையும் மற்றையோர் கடமையையும் கூறியவாறு.

**கலித்தொகை:**

1. ஆற்றல் – வாழ்க்கை நடத்துதல்; போற்றுதல் – பாதுகாத்தல்; பண்பு – மனிதர் இயல்பு; செறிவு - உறவு; அலந்தவர் – வறுமைப்

பட்டவர்; செறுஅமை – கோபியாமை; முறை - நீதி; வாழ்க்கை செய்தல் என்பது வறுமைப்பட்டவருக்கு ஒன்றைக் கொடுத்தல்; பாது காத்தல் என்பது கூடினவர்களைப் பிரியாமலிருப்பது. மக்கள் தன்மை எனப்படுவது உலக நடைமுறை அறிந்து ஒழுகுவது; அன்பு என்பது சுற்றத்தவர்களைக் கைவிடாதிருத்தல்; அறிவு எனப்படுவது அறியாமை யுடையார் சொன்ன சொற்களைப் பொறுத்தல்; உறவு எனப்படுவது கூறியதை மறுது செய்வதால் உண்டாவது; நிறை எனப்படுவது இரகசியத்தை வெளிப்படுத்தாது வைத்திருப்பது; நீதி எனப்படுவது இனத்தவரிடத்தும் கண்ணோட்டமின்றி நீதியே செய்தல்; பொறுமை என்பது தம்மை இகழ்வாரையும் பொறுத்தல்.

குறுந்தொகை:

1. முளிதயிர் – கட்டித்தயிர்; கழுவுறு – (அடித்துத்துவைக்கின் பழுதுறுமாதலின்) கழுவுறும் தன்மை பொருந்திய; கலிங்கம் – சீலை; கழாஅது – கையைக் கழுவாது; உடீஇ – உடுத்து; உண்கண் – மை யுண்டகண் (அஞ்சனந் தீட்டிய கண்); குய்ப்புகை – தாளிதப்புகை; கமழ – பரக்க; துழந்து – துழாவி; அட்ட - சமைத்த; தீம் – இனிய; புளிப்பாகர் – புளிக்குழம்பு; நுண்ணிதின் – நுட்பமாக, அடக்கமாக; மகிழ்ந்தன்று – மகிழ்ந்தது; 'அன்' சாரியை.

விவாகம் நடந்து, மனைவி, கணவன் வீட்டுக்கு வந்திருக்கிறுள். குடும்பம் செல்வமானது எனினும் கணவன்மேற்கொண்ட பேரன்பு காரணமாக அவளே அவனுக்குரிய சமையலைச் செய்கிறுள். அவள் தயிர்க்குழம்பு சமைக்கிறுள். காந்தள் பூப்போன்ற மெல்லிய விரலால் கட்டித்தயிரைப் பிசைகிறுள். இச்சமையத்தில் உடுத்தியிருந்த விலை யேறப்பெற்ற ஆடை நெகிழ்கிறது; தயிர் பிசைந்த கையாலேயே உடுக்கிறுள். [கைகழுவிக் காரியம் பார்க்கின் குழம்பின் பதம் தப்பி விடுமென எண்ணி] மையுண்ட கண்களில் தாளிதப்புகை பரக்க குழம்பு சமைக்கிறுள். சமையல் செய்து முடிந்தது. கணவன் சாப்பிடு கிறுன். 'தயிர்க்குழம்பு மிகவும் இனியது' என்று சொல்லிச் சொல்லிச் சாப்பிடுகிறுன். அப்பொழுது மனைவியின் முகம் மிகவும் நுட்பமாக மகிழ்ச்சி அடைகிறது.

பயிற்சி:

1. பொருள் தருக: உயிர்த்து, தானை, யாண்டு, யாங்கு, மாண்ட, அல்லவை, புறந்தருதல், சான்றோர், வடித்து, நல்கல், ஒளிறு, சமம், முருக்கி, களிறு, காளை, ஆற்றுதல், அலந்தவர், போற்றுதல், பண்பு, பாடு, கிளை, செறுஅமை, பேதையர், நோன்றல், மறுஅமை, மறை, கண்ணோடாமை, வௌவல், போற்றுர், முளிதயிர், கலிங்கம், உண் கண், குய்ப்புகை, அட்ட.

2. பிரித்தெழுதுக: ஒண்ணுதல், துழந்தட்ட, பாடறிந்தொழுகல், நன்னடை.



3. சான்றோர், வேந்தன், மனைவி, சீலை, விரல், தயிர்: இவற்றிற்குக் கொடுக்கப்பட்ட அடைமொழிகள் எவை?

4. உலகத்துக்கு உயிர் யார்? ஏன்?

5. மூப்பின்றிப் பலகாலம் வாழ்வ தெங்ஙனம்?

6. தாய், தந்தை, அரசன், புதல்வன்: என்போரது கடமைகள் எவை யென இப்பகுதியிற் கூறப்பட்டிருக்கிறது?

7. உயர்ந்த குணங்களெவை? அக்குணங்களுண்மை எவ்வாறு அறி யப்படும்?

8. போற்றுர் எனப்படுபவர் யார்? ஏன் அப்பெயரால் அழைக்கப் படுகின்றனர்?

9. ஒரு அரசன் நீதி உடையவனென்பது எவ்வாறு தீர்மானிக்கப்படும்?

10. புளிப்பாகரைத் தானே செய்ய அப்பெண் துணிந்ததேன்?

11. கணவன் சாப்பிடும்போது மனைவியின் முகம் மலர்ந்தது; ஏன்?

12. புறநானூறு, குறுந்தொகை, கலித்தொகை என்பன கூறும் விஷ யங்களென்ன?

இலக்கணம்:

1. தல், கை, அல், மை என்னும் ஈற்றுத் தொழிற்பெயர்கள் ஒவ் வொன்று எழுதுக?

2. இலக்கணம் கூறுக: மாண்ட, அட்ட, உண்டலின்.

3. உதாரணம் தருக: இறுதிப்போலி, அளபெடை, குறிப்புமுற்று. 2-ம் 3-ம் வேற்றுமை உருபேற்ற சொற்கள்.

4. மகிழ்ந்தன்று, அனையர், வௌவல்: பகுதி விகுதி கூறுக.

5. தொடர்மொழி இலக்கணம் கூறுக: நன்னடை, ஒளிறுவாள். முளிதயிர், காந்தள் விரல்.

கட்டுரையாக்கம்:

1. 'இல்லற இன்பம்' என்னும் விஷயம்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

2. 'யான் உயிர்' என்னும் தலையங்கத்தில் அரசன் கூற்றுக ஒரு பந்தி எழுதுக.

## 4. திருக்குறள்

### செய்ந்நன்றி அறிதல்

திருக்குறள் திருவள்ளுவநாயனாராற் செய்யப்பட்டது. இதில் 1330 குறள் வெண்பாக்கள் உள. இந்நூல் ஓரதிகாரத்துக்குப் பத்துக் குறளாக 136 அதிகாரங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பகுதிகளை உடையது.

[ஒருவன் செய்த நன்மையை மறவாதிருத்தலே செய்ந்நன்றி அறிதல் என்பதன் பொருளாகும்.]

1. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

2. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது.

3. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

5. உதவி வரைத்தன் றுதவி ; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

6. மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

7. எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

8. நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

9. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.



குறிப்புரை :

1. யாம் ஒரு உதவியும் செய்யாதிருக்க நமக்கு ஒருவர் செய்த உதவிக்குப் பதிலாகப் பூமியையும் வானுலகத்தையும் கொடுத்தாலும் ஈடாகா; வையகமும் வானகமும் (எழுவாய்) ஆற்றல் அரிது (பயனிலை).

2. ஒருவனுக்கு இறுதிவந்த சமயத்து ஒருவர் செய்த நன்றி சிறிதாயிருப்பினும் அது பூமியிலும் பெரிதானதாக மதிக்கப்படும். மாண – மிகவும் (உரிச்சொல்); காலத்தினால், உருபு மயக்கம்; நன்றி (எழுவாய்) பெரிது (பயனிலை).

3. பதிலுபகாரத்தைக் கருதாமல் ஒருவர் செய்த உதவியின் நன்மையை ஆராய்ந்து பார்ப்பின், அந்நன்மை கடலினும் பெரிதாகத் தோன்றும். நன்மை (எழுவாய்) பெரிது (பயனிலை).

4. தினை அளவு நன்றியை ஒருவர் செய்தாலும் அதனைப் பனையளவினதாக மதிப்பர் அறிவுடையவர். பயன் தெரிவார் (எழுவாய்) கொள்வர் (பயனிலை).

5. ஒருவர் செய்த உதவியை அளவிடுவது அந்த உதவி அளவினதாக அன்று; அந்த உதவி யாருக்குச் செய்யப்பட்டதோ அவருடைய இயல்புடன் ஒப்பிடப்பட்டு அளவிடப்படவேண்டும். உதவியைப் பெற்றவர் அதனாலடைந்த நன்மையின் அளவைக்கொண்டு தீர்மானிக்க வேண்டுமென்றவாறு. உதவி (எழுவாய்) வரைத்து (பயனிலை).

6 மாசு - குற்றம்; கேண்மை – சிநேகம்; மறவற்க - எதிர்மறை வியங்கோள் முற்று. [மற + அல் + க] 'அல்' – எதிர்மறை இடைநிலை. 'க' வியங்கோள் விகுதி. துறவற்க என்பதுமத்தகையது. துறவற்க – விடாதிர்களாக; துப்பு – வலிமை (உதவி) நட்பு – சிநேகம், மறவற்க, துறவற்க (பயனிலை).

7. தனது துன்பத்தை நீக்கினவருடைய நட்பை அறிவுடையவர் ஏழேழு பிறவியிலும் நினைப்பர். அறிவுடையார் (தோன்றா எழுவாய்) உள்ளுவர் (பயனிலை) விழுமம் – துன்பம்; துடைத்தவர் – நீக்கினவர்.

8. ஒருவர் செய்த நன்றியை மறப்பது நன்றன்று; ஒருவர் செய்த தீமையை அன்றே மறந்து விடுவது நன்று. மறப்பது (எழுவாய்) நன்றன்று, நன்று (பயனிலை).

9. கொல்லுதல்போன்ற கொடுமையை ஒருவர் செய்தாலும் அவர் முன்செய்த நன்மை ஒன்றை நினைக்க அக்கொடுமை இல்லையாம். இன்னா (எழுவாய்) கெடும் (பயனிலை).

10. எந்த நன்றியை மறப்பினும்:பிராயச்சித்தம் உண்டு. ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்களுக்குப் பிராயச்சித்தம் இல்லை. உய்வு (எழுவாய்) உண்டு, இல்லை (பயனிலை).

**பயிற்சி**

1. பொருள் கூறுக: வையகம், வானகம், ஆற்றல், ஞாலம், தூக்கார், துணை, வரைத்து, கேண்மை, துறவற்க, துப்பு, உள்ளுவர், விழுமம், இன்னா.
2 பூமியும் ஆகாயமும் கூட ஈடாகாத உதவி எது?
3. பூமியிலும் பெரியது எது? காலத்தினால் செய்த நன்றியாவது யாது?
4 பயன் தூக்காது செய்த உதவி என்றால் என்ன?
5. உதவியை எங்ஙனம் அளவிடவேண்டும்?
6. யாருடைய நட்பை ஒரு பொழுதும் விடக்கூடாது?
7. ஒருவர் செய்த தீமையை மறத்தற்கு உபாயம் என்ன?
8. எழுபிறப்பும் நினைக்கப்படக்கூடிய உதவி எது?
9. மறக்கத்தக்கது எது? மறக்கத்தகாதது எது?
10. தினை அளவு நன்றி எங்ஙனம் பனை அளவினதாகும்?

**இலக்கணம்**

1. இலக்கணம் கூறுக: மறவற்க, மாண, தூக்கின், செயினும், வரைத்து, விழுமம், மறப்பது, நன்று, கெடும்.
2. உதாரணம் தருக: உருபு மயக்கம்; வினையாலணையும் பெயர், குறிப்புமுற்று.
3. பிரித்தெழுதுக: செய்ந்நன்றி, மறவற்க, வரைத்தன்று

**கட்டுரையாக்கம்**

செய்ந்நன்றியறிதல் என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.

## 5. நாலடியார்

இது சமணமுனிவர்களால் இயற்றப்பட்டது. பஞ்சம் காரணமாகப் பாண்டிநாட்டை அடைந்திருந்த முனிவர்கள், பஞ்சம் நீங்கியமையால் தங்கள் நாடுபோக விரும்பிப் பாண்டியனுக்கு அதனைத் தெரிவித்தனர். பாண்டியன் மனமிசைந்தானில்லை. ஆகவே சமணமுனிவர்கள் ஒவ்வோர் பாடலை எழுதிவைத்துவிட்டு இரவிலேயே தம்மூரை அடைந்தனர். மறுநாள் அரசன் அப் பாடல்களைக் கண்டு அவை ஒன்றோடொன்று இயைபுடையன வாய்க் காணப்படாமையின் அவற்றை ஆற்றில் எறிவித் தான். 400 பாடல்கள் கரைசேர்ந்தன. அவை நானூறும் நாலடியார் என்னும் பெயரால் ஒரு நூலாய் வழங்கப்பட்டுவரு கின்றன. அவற்றை அதிகாரத்துக்குப் பத்துப் பாடலாக 40 அதிகாரங்களாக வகுத்தவர் பதுமனார் என்பவர். இந்நூலும்



அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று விஷயங்களும் நுதலி வருவது. "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் சொற் றொடர் இந்நூற் பெருமையைத் தெரிவிக்கும்; நாலு – நாலடி யார்; இரண்டு – திருக்குறள்; நாலடி + ஆர் = நாலடியார்; 'ஆர்' சிறப்பு விகுதி.

**கல்வி**

1. கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரில்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு.

**குடிப்பிறப்பு:**

2. ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூம்—திங்கள்போல்
செல்லாமை செவ்வன்நேர் நிற்பினும் ஒப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார்.

**தாளாண்மை**

3. நல்லகுல மென்றும் தீயகுல மென்றும்
சொல்லள வல்லால் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வி ஆள்வினை
என்றிவற்றா லாகுங் குலம்

**அறிவின்மை**

4. கற்றறிந்த நாவினார் சொல்லார்தம் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர் பனையின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை ஒலி.

**குறிப்புரை:**

1. கனை – சப்திக்கும்; தண்கடல் சேர்ப்ப – குளிர்ந்த கடற்கரையை உடைய பாண்டியனே! கற்று அறிந்தார் கேண்மை – கற்றறிந்தோ ரது சிநேகம்; நுனியில் கரும்புதின்று அற்று – நுனியிலிருந்து அடி நோக்கிக் கரும்பைச் சாப்பிடுவதுபோல வரவர இனிக்கும்; நுனி நீக்கி – நுனியிலிருந்து தின்னுதலை விட்டு; தூரில்தின்று அன்ன தகைத்து – அடியிலிருந்து தின்பதுபோன்ற தன்மையையுடையது; ஈர மிலாளர் தொடர்பு – அன்பில்லாதவரது சிநேகம்.

தகைத்து - குறிப்பு முற்று. அற்று - குறிப்பு முற்று. கேண்மை (எழுவாய்) தின்றற்று (பயனிலை); தொடர்பு (எழுவாய்) தகைத்து (பயனிலை) 'ஏ' 'அரோ' அசைகள்.

2. ஒருபுடை பாம்பு கொளினும் - ஒருபக்கம் பாம்பினாற் பிடிக்கப் பட்டாலும்; ஒருபுடை - மற்றொரு பகுதியால்; அங்கண்மா ஞாலம் - அழகிய இடமகன்ற பூமியை; விளக்குறூஉம் - விளக்கம் செய்யும் (ஒளி தரும்); திங்கள்போல் - சந்திரனைப்போல; குடிப்பிறந்தார் - நற் குடியிற் பிறந்தார்; செல்லாமை செவ்வன் நேர் நிற்பினும் - வறுமை கடுமையாகத் தாக்கினாலும்; ஒப்புரவிற்கு ஒல்கார் - உபகாரம் (தருமம்) செய்தலில் தளரார்; (உயர்குடி மக்கள் சந்திரனை ஒப்பர். அவரை அடையும் வறுமை கிரகணத்தை ஒக்கும் என்றவாறு.) ஒரு பகுதியைப் பாம்பு பிடிக்க மற்றைப் பகுதியால் உலகுக்கு ஒளி கொடுக்கும் சந்திரன். அதுபோல நல்லோர் வறுமைப்படினும் தருமம் செய்வர் என்றவாறு. குடிப்பிறந்தார் (எழுவாய்) ஒல்கார் (பயனிலை).

3. சொல் அளவல்லால் - சொல்லளவன்றி; பொருள் இல்லை - பொருள் அளவில் பேதமில்லை; தொல் சிறப்பு - பழமையான சிறப் பினையுடைய; பொருள், தவம், கல்வி, முயற்சி இவற்றாலே நல்ல குலம் தீயகுலம் தீர்மானிக்கப்படும். ஆள்வினை - முயற்சி; குலம் (எழு வாய்) ஆகும் (பயனிலை). 'ஒன்றோ' எண்ணிடைச் சொல்; தவம், கல்வி முதலியவற்றுடன் கூட்டி எண்ணுக.

4. படித்து அறிந்த நாவினையுடையவர் அதிகம் பேசினாற் குற்றம் வருமென்று எண்ணி அதிகம் பேசார். அறிவீனர் இதனை எண்ணாது பலவாறு கூறுவர். இந் நிகழ்ச்சி எதுபோன்றதெனின் பச்சோலை ஒலி செய்யாதிருக்கக் காவோலை ஒலி செய்வது போன்றிருக்கும் என்றவாறு. பச்சோலை, அறிவுடையோர்க் குவமானம். பசுமை + ஓலை = பச்சோலை; கலகலக்கும் - இரட்டைக்கிளவி; நாவினார் (எழுவாய்) சொல்வார் (பயனிலை), மற்றையவராவர் (எழுவாய்) பகர்வர் (பயனிலை).

**பயிற்சி :**

1. கனை, சேர்ப்ப, கேண்மை, அற்று, தூர், தகைத்து, ஈரம், தொடர்பு, புடை, ஞாலம், செல்லாமை, ஒப்புரவு செவ்வன், ஒல்கார், பகர் வார், ஆள்வினை : பொருள்தருக.
2. சத்தம் என்னும் பொருளில் இரண்டு சொற்கள் எழுதுக.
3. கற்றோர் கேண்மை, அன்பிலார் கேண்மை, இவற்றிற்கு உவமான மாகக் கூறப்பட்டன யாவை? பொதுத்தன்மை எது?
4. சந்திரனைப் பாம்பு பிடித்தல் எதற்குவமை? அது எங்ஙனம் பொருந்தும்?
5. உயர்குலம் எதனால் தீர்மானிக்கப்படும்?
6. 'சொல்லளவல்லால் பொருளில்லை' என்பதை விளக்குக.
7. பச்சோலை யாருக்கு உவமானம்? ஏன்?



**இலக்கணம்**

1. இலக்கணம் கூறுக: கேண்மை, தொடர்பு, பண்பிலா, அல்லால், ஆகும், சொல்லார், அஞ்சி.
2. பிரித்தெழுதுக: பச்சோலை, எஞ்ஞான்றும்.
3. பகுதி விகுதி கூறுக: பகர்வர், வற்றிய, அஞ்சி, ஒல்கார், அற்று, தகைத்து, இல்லை, சோர்வு.
4. உதாரணம் கூறுக: குறிப்பு முற்று இரண்டு, அளபெடை, இரட் டைக்கிளவி.
5. தொகாநிலையாக்குக: கனைகடல், ஈரமிலாளர் தொடர்பு, குடிப் பிறந்தார்.
6. இடைச் சொற்களை எழுதுக.

## 6. இன்னா நாற்பது

இந் நூலாசிரியர் கபிலர். பத்துப் பாட்டுள் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டு 'எட்டுத் தொகையுள் ஒன்றாகிய கலித்தொகை யில் குறிஞ்சிக்கலி என்பனவும், இவராலேயே இயற்றப்பட்டன. இந்நூலில் இன்னாதன (கூடாதன) யாவை என்பதை 40 பாட்டு களிற் கூறியிருக்கிறார். கபிலர் ஒரு சிறந்த புலவர். இன்னா நாற்பதிலிருந்து சில பாடல்கள் வருமாறு:

1. கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா; இன்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு.

2. பொருளுணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா
இருள்கூர் சிறுநெறி தாம்தனிப் போக்கின்னா
அருளிலார் தங்கட் செலவின்னா; இன்னா
பொருளில்லார் வண்மை புரிவு.

3. உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாகப் பகைவர் புணர்ச்சி நனியின்னா
கண்ணி லொருவன் வனப்பின்னா; ஆங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு.

4. நெடுமரம் நீள்கோட் டுயர்பாய்த லின்னா
கடுஞ்சின வேழத் தெதிர்சேறல் இன்னா
ஒடுங்கி அரவுறையும் இல்லின்னா; இன்னா
கடும்புலி வாழும் அதர்.

**குறிப்புரை :**

1. கொடுங்கோல் – கொடுங்கோல் செலுத்தும்; மறம் – கொலைத் தொழிலையுடைய; மன்னர்கீழ் – அரசரது ஆட்சியின்கீழ்; வாழ்தல் – வாழ்வது; இன்னா - துன்பமாம்; நெடுநீர் – மிக்கநீரை; புணை இன்றி – தெப்பம் இல்லாமல்; நீந்துதல் – கடந்து செல்லுதல்; இன்னா – துன்பமாம்; கடுமொழியாளர் - வன்சொற் கூறுவோரது; தொடர்பு – நட்பு; இன்னா – துன்பமாம்; தடுமாறி – மனத் தடுமாற்றமடைந்து; வாழ்தல் – வாழ்வது; உயிர்க்கு – உயிர்களுக்கு; இன்னா – துன்பமாம்.

2. பொருள் உணர்வார் – (பாட்டின்) பொருளை அறியும் அறிவுடையார்; இல்வழி - இல்லாதவிடத்தில்; பாட்டு உரைத்தல் - செய்யுள் இயற்றிக் கூறுதல்; இன்னா – துன்பமாம்; இருள்கூர் - இருள் மிகுந்த; சிறுநெறி - சிறிய வழியிலே; தனிப்போக்கு - தனியே போதல்; இன்னா—; அருளிலார்தம்கண் - தண்ணளியில்லாதவரிடத்தில்; செலவு - (யாசகர்) செல்லுதல்; இன்னா—; பொருள் இல்லார் – பொருளில்லாதவர்; வண்மைபுரிவு - ஈதலை விரும்புதல்; இன்னா—;

தாம் - அசை; தம் - சாரியை; புரிவு, செலவு :— "உ" தொழிற் பெயர் விகுதி.

3. உண்ணாது வைக்கும் – அநுபவியாது வைக்கும்; பெரும் பொருள் வைப்பு - பெரிய பொருளின் வைப்பானது; (தேட்டம்) இன்னா—; நண்ணா – மனம் பொருந்தாத; பகைவர் - பகைவரது; புணர்ச்சி - சேர்க்கை; நனி – மிகவும்; இன்னா—; கண் இல் ஒருவன் – கண் இல்லாத ஒருவனது; வனப்பு - அழகு; இன்னா—; ஆங்கு - அவ்வாறே; எண் இலான் - கணிதநூல் பயிலாதவன்; செய்யும் கணக்கு – இயற்றும் கணக்கு; இன்னா—;

புணர்ச்சி, சேர்க்கை, தொழிற் பெயர்கள்; சி, கை, விகுதிகள்.

4. நெடுமரம் - நெடிய மரத்ினது; நீள்கோட்டு – நீண்டகிளையின்; உயர் - உயரத்திலிருந்து; பாய்தல் – கீழே குதித்தல்; இன்னா—; கடு சினம் – மிக்க கோபத்தினையுடைய வேழத்து எதிர் - யானையின் எதிரே; சேறல் – செல்லுதல்; இன்னா—; அரவு – பாம்பு; ஒடுங்கி உறையும் – மறைந்து வசிக்கின்ற; இல் – வீடானது; இன்னா—; கடும்புலி – கொடிய புலிகள்; வாழும் அதர் - வாழ்கின்ற வழிகள்; இன்னா —.

இப்பாடல் பிறிது நவிற்சியணியெனினும் பொருந்தும்; (1) தம்மிலும் வலியார்மேற் பகைகொள்ளல்; (நெடுமரம் நீள்கோட்டுயர் பாய்தல்) (2) வலியார்க்கு மாறுசெய்தல்; (கடுஞ்சின வேழத்தெதிர் சேறல்). (3) உட்பகையுடன் வாழ்தல்; (அரவு ஒடுங்கி உறையும் இல்). (4) நெறியில்லா நெறியிற் சேறல்; (கடும்புலி வாழுமதர்). என்பன தீமை எனப் பொருள் கொள்ளின்.



**பயிற்சி :**

1. பொருள் கூறுக: புணை, கடுமொழியாளர், சிறுநெறி, செலவு, வண்மை, வைப்பு, வனப்பு, எண்ணிலான், கோடு, சின வேழம், அரவு, அதர்.
2. வேழம், சிறுவழி : இவற்றிற்குச் சேர்க்கபட்ட அடைமொழிகள் எவை?
3. "கொடுங்கோல் மன்னர் வாழு நாட்டில் கடும்புலி வாழும் காடு நன்று" என்னும் பாடற் பகுதிப் பொருள் இப்பகுதியில் எவ்வாறு கூறப்பட்டிருக்கிறது?
4. "நெடுநீர்" என்பது யாது? அதனை நீந்தப் புணை வேண்டுவதேன்?
5. நாம் குற்றஞ் செய்யுங்கால் கடுமொழி கூறிக் கண்டிப்போர் கடுமொழியாளரா?
6. வறுமையாலாகிய மனத்தடுமாற்றம் வாழ்வுக்குத் துன்பம் தருதலை விளக்குக?
7. "கல்லாதவரிடைக் கட்டுரையின் மிக்கதோர் பொல்லாததில்லை" என்னும் பழமொழிச் செய்யுளுடன் ஒப்பிடக் கூடிய இப்பகுதியில் வந்த பாடல் எது?
8. பொருளிலார் வண்மைபுரிவு ஏன் தீது?
9. "உடாதும் உண்ணாதும் தம் முடம்பு செற்றும் வைத்தீட்டினார் இழப்பர்" என்னும் நாலடியார்ச் செய்யுளுடன் ஒப்பிடக்கூடிய பாடல் எது?
10. பிறிதுநவிற்சியணிக்கு உதாரணம் தருக.

**இலக்கணம் :**

1. இப்பகுதியிலுள்ள தொழிற் பெயர்களை எழுதி விகுதிகளைக் கூறுக.
2. பகுதி கூறுக: வரவு, புரிவு, தொடர்பு, போக்கு, புணர்ச்சி, சேறல்.
3. இப்பகுதியிலுள்ள உரிச் சொற்களெவை?
4. நண்ணா, வண்மை, உண்ணாது: இலக்கணம் கூறுக.

## 7. இனியவை நாற்பது

இந்நூலாசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் என்றழைக்கப்படும் பூதஞ்சேந்தனார் ஆவர். இவர் பெயர் சேந்தனார். தந்தையார் பெயருடன் சேர்க்கப்பட்டு பூதஞ் சேந்தனார் என்றழைக்கப்பட்டார். இந்நூலில் இனிய விஷயங்கள் பலவற்றை 40 வெண்பாக்கள் தெரிவிக்கின்றன. அவற்றிலிருந்து நாலுபாடல்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன.

1. ஏவது மாறா இளங்கிளைமை முன்னினிதே
நாளும் நவைபோகான் கற்றல் மிகவினிதே
ஏருடையான் வேளாண்மை தானினி தாங்கினிதே
தேரின்கோள் நட்புத் திசைக்கு.

2. கடமுண்டு வாழாமை காண்டல் இனிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண் பிலாதாரை அஞ்சி அகறல்
எனைமாண்புந் தானினிது நன்கு.

3. கற்றார்முன் கல்வி யுரைத்தல் மிகவினிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்னினிதே
எட்டுணை யானு மிரவாது தானீதல்
எத்துணையும் ஆற்ற இனிது.

4. நட்டார்ப் புறங்கூறான் வாழ்தல் நனிஇனிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகல் முன்னினிதே
முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால் மற்றது
தக்குழி ஈத லினிது.

**குறிப்புரை :**

1. ஏவதுமாறா இளங்கிளைமை – ஏவலை மறாது செய்யும் மக்கள் உடைமை (வேலையாளர் எனினுமாம்); நவைபோகான் நாளும் கற்றல் – குற்றம் பொருந்தாதவனாய் தினந்தோறும் கற்றல்; ஏர் உடையான் வேளாண்மை – தனதெனை உழவு மாடுகளை உடையானது பயிர்த் தொழில்; ஆங்கு - அதுபோல; தேரின் – ஆராயின்; நட்புக்கோள் – நட்புக்கொள்ளுதல்; ஏவது=ஏவு+அது; ‘அது’ பகுதிப் பொருளில் வரும் விகுதி; ஏவுவது என்னும் சொல் குறைந்து ஏவது என்றாயிற்று எனினுமாம். ஏவியது என்னும் வினையாலணையும் பெயர் ஏவது எனக் குறைந்தது எனினுமாம். திசைக்கு – திசையில்; (உருபு மயக்கம்).



2. கடமுண்டு வாழாமை காண்டல் – கடன்பட்டு உண்டு வாழாதிருத்தலைக் காணல், (கடன்படாது வாழ்தல்); நிறைமாண்பு இல் பெண்டிரை - கற்பாகிய உயர்குணமில்லாத பெண்களை; மனம் மாண்பு இலாதாரை – மனப்பண்பு இல்லாதவரை; அஞ்சி அகறல் – பயந்து நீங்கல்; எனை மாண்பும் இனிது – எல்லா மாட்சிமைகளிலும் சிறந்தது; எனை மாண்பிலும் என வர வேண்டுவது ‘எனை மாண்பும்’ என தொக்கு வந்தது.

3. கற்றார்முன் கல்வி உரைத்தல் - கற்றவர்களுக்குமுன் தமது கல்வியைச் சொல்லுதல்; மிக்காரைச் சேர்தல் – அறிவுடையவர்களை அடைதல்; மாண – மாட்சிமைப்பட; எள்துணை ஆனும் – எள்ளளவேனும்; இரவாது – பிறரிடம் யாசியாது; தான் ஈதல் – தான் பிறர்க்குக் கொடுத்தல்; எத்துணையும் ஆற்ற இனிது – எல்லாவிதத்திலும் மிக இனிது.

4. நட்டார் புறங்கூறான் வாழ்தல் – நட்புக் கொண்டவரைப் பின் வெறுப்புக் காரணமாகப் புறங்கூறாது வாழ்தல்; நனி – மிகவும் (உரிச் சொல்); பட்டாங்கு – உண்மை; பேணி – கைக்கொண்டு; பணிந்து ஒழுகல் – அடங்கி நடத்தல்; முன் – முற்பட; முட்டில் பெரும் பொருள் ஆக்கியக்கால் - குறைவில்லாத பெரிய பொருளைச் சம்பாதித்தால்; அது – அப்பொருளை; தக்குழி ஈதல் இனிது – தகுந்தவருக்குக் கொடுத்தலே நன்று; புறங்கூறான்: முற்றெச்சம்; மற்று: ‘அசை’.

**பயிற்சி**

1. பொருள் தருக: ஏவது, கிளை, நவை, ஏர், கடம், மாண்பு, புறங்கூறான், பட்டாங்கு.
2. பிரித்தெழுதுக: எட்டுணை, தக்குழி, முட்டில்.
3. ‘ஏவதுமாறா இளங்கிளை’ என்னும் பொருள் தரும் வேறொரு பாடல் பகுதி கூறுக.
4. நட்புக்கோள் திசைக்கு எங்ஙனம் இனிதாகும்?
5. ‘கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான்’ என்னும் பகுதியோடு ஒப்புமையுடைய பகுதி கூறுக.
6. ‘துற்சனர்தம் கண்ணில் தெரியாத தூரத்து நீங்குவதே நல்லநெறி’ என்னும் பொருள் தரும் பாடற்பகுதி கூறுக.
7. நாம் யாருடன் சேர்ந்து ஜீவித்தல் நன்று?
8. நாம் எவ்வித வாழ்க்கை வாழவேண்டும்? ‘ஆவிற்கு நீரென்றிரப்பினும் இரப்பின் இழிவந்ததில்’ என்னும் பொருள் தரும் பாடற் பகுதி எழுதுக.
9. நாம் சம்பாதித்த பொருளை மறுமைக்கும் உதவுமாறு இட்டுவைக்கக்கூடிய இடம் எது?

**இலக்கணம்**

1. இலக்கணம் கூறுக: தேரின், இரவாது, வாழாமை, மாறா.
2. சில உரிச் சொற்கள் எழுதுக.
3. உதாரணம் தருக: குறிப்புமுற்று, உருபு மயக்கம், இடைச்சொல், முற்றெச்சம்.
4. பகுதிகள் கூறுக: நட்டான், காண்டல், கோள், ஆக்கு.

## IV. ஈழமண்டலச் சிறப்பு

இப்பாடற் பகுதி **பருளை விநாயகர் பள்ளு** என்ற பிரபந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது. அந்நூலைப் பாடியவர் சின்னத் தம்பிப் புலவர். அவர் நல்லூரில் 150 ஆண்டுகளுக்குமுன் இருந்த ஒரு சிறந்த கவிஞர். அவர் தந்தையார் பெயர் வில்லவராய முதலியார் என்பது.

சின்னத்தம்பிப் புலவராற் பாடப்பட்ட நூல்கள் பருளை விநாயகர் பள்ளு, கரவைவேலன் கோவை, மறைசை அந்தாதி, கல்வளை அந்தாதி என்பன. கீழே காட்டப்படும் செய்யுள்கள் இலங்கையின் வளத்தைத் தெரிவிக்கின்றன.

### சிந்து

(கடல்)

1. பைப்ப ணிப்பகு வாய்ப்பட்ட திங்களிற்
 பாயு மோதக் கடற்கரை தோறும்
இப்பி வாயிலின் முத்த மிலங்கிய
 ஈழ மண்டல நாடெங்க ளூடே.

(மலை)

2. வளமை சேர்ந்திடு மூப்பிய லான்முது
 மந்தி தாவி மலையிடைப் பாய
இளமை மந்தி உருவடி வாய்விடும்
 ஈழ மண்டல நாடெங்க ளூடே.

(ஆறு)

3. கருவ லம்புரிச் செங்கதிர் மாவலி
 கங்கை ஆறு பெருகிக் கரையின்
இரும ருங்கினு முத்தம் கொழித்திடும்
 ஈழ மண்டல நாடெங்க ளூடே.

(வேறு)

4. மஞ்ச ளாவிய மாடங்கள் தோறும்
 மயில்கள் போல்மட வார்கணம் சூழும்
அஞ்ச ரோருகப் பள்ளியில் வான்சிறை
 அன்ன வன்னக் குழாம்விளை யாடும்



துஞ்சு மேதி சுருக்களைச் சீற
 சுருக்க ளோடிப் பலாக்கனி கீறி
இஞ்சி வேலியின் மஞ்சலிற் போய்விழும்
 ஈழ மண்டல நாடெங்க ளூடே.

**குறிப்புரை**

1. பைப்பணி – படத்தையுடைய பாம்பு; (2–ம் வேற்றுமை உருபும் பயனும் தொக்கதொகை). பகுவாய் – பிளவுபட்டவாய்; வாய்ப்பட்ட – வாயில் அகப்பட்ட; திங்களில் – சந்திரனைப்போல; ஓதம் – திரை; இப்பி – சிப்பி; இப்பிவாயில் இன்முத்தம் என்க; இன்முத்தம் – உடம்புக்கு இனிதாகும் முத்து; பாம்பின் வாயிலகப்பட்ட சந்திரன்போல சிப்பியினிடையில் முத்து விளங்கும் என்றவாறு.

2. வளமை – செழிப்பு, என்றது நிறைவை. மூப்பு இயல் – முதுமைத் தன்மை; முதுமந்தி – முதுமையுள்ள மந்திக் குரங்கு; உருவடிவு – அழகிய வடிவம்; [மலையிலுள்ள மூலிகைகளின் சிறப்புக் கூறியவாறு].

3. கருமை – பெருமை; வலம்புரிச் செங்கதிர் – வலம்புரியின் செவ்விய கதிர்கள்; மருங்கு – பக்கம்; முத்தம் – முத்து; கொழித்தல் – வீசுதல்.

4. மஞ்சு – மேகம்; அளாவிய – பொருந்திய; மடவார் – பெண்கள்; கணம் – கூட்டம்; அம் – அழகு; சரோருகம் – தாமரை; வான்சிறை – பெருமைமிக்க சிறகு; [சிறகுக்குப் பெருமையாவது மென்மை]. அன்ன வன்னக்குழாம் – வன்ன அன்னக்குழாம் என மாற்றி, நிறம் விளங்கிய அன்னத்தொகுதி என உரைக்க; துஞ்சு – (நீரில்) நிலைபெற்ற; மேதி – எருமை; இஞ்சி வேலியின் மஞ்சல் – இஞ்சியின் வேலியாகிய மஞ்சள்; [இஞ்சியை வேலியாகவுடைய மஞ்சள் எனினுமாம்]. சிறை – சிறகு.

**பயிற்சி**

1. பதவுரை தருக: பை, பணி, பகுவாய், ஓதம், மந்தி, மருங்கு, கொழித்தல், மஞ்சு, சரோருகம், மேதி, பள்ளி, சிறை, குழாம், கணம்.
2. பின் வருவனவற்றிற்கு உவமையாகக் கூறப்பட்டவை யாவை? அவற்றில் வந்த உவம உருபுகள் யாவை?: இப்பிவாயில் முத்து, பெண்கள்.
3. முதுமந்தியின் உடல் இளமையுற்ற தெங்ஙனம்?
4. இலங்கை ஒரு செல்வ நாடென்பதை விளக்கச் சில மேற்கோள்கள் தருக.
5. எருமைகளுக்கும் சுருக்களுக்குமிடையே நடந்த நிகழ்ச்சி யாது?

**இலக்கணம்**

1. பிரித்தெழுதுக: நாடெங்கணுடே, முதுமந்தி, செங்கதிர், மஞ்சளாவிய, அஞ்சரோருகம், கடற்கரை.
2. பின் வருவனவற்றிற்கு உதாரணம் தருக:
   i 'இன்' உருபாய் (5-ம் உருபு) வர:
   ii 'இன்' சாரியையாய் வர:
   iii 'அம்' சாரியையாய் வர:
   iv 7-ம் உருபு:
   v பண்புத்தொகை:
   vi 7-ம் வேற்றுமைத்தொகை:
   vii 6-ம் வேற்றுமைத்தொகை:
   viii வினைத்தொகை:
3. எதிர்ச்சொல் தருக: உரு, இளமை, வலம்புரி, பெருக்கு (பெருகி), குழாம், இரு (இரண்டு).
4. இலக்கணம் கூறுக: தோறும், இலங்கிடும், தாவி, சீற.

**கட்டுரை**

ஈழமண்டலச் சிறப்பைக் கூறும் ஒரு கட்டுரை எழுதுக.



## ஆங்கிலப் பயிற்சி

பாரதியார் அக்கால ஆங்கிலப் படிப்பின் இயல்பைப் பற்றியும் தாம் எவ்விதம் ஆங்கிலம் கற்ருர் என்பதைப் பற்றியும் தெரிவிப்பதைக் கீழ்வரும் பாடல்கள்மூலம் அறியலாம்.

√1. கம்ப னென்றெரு மானிடன் வாழ்ந்ததும்
காளி தாசன் கவிதை புனைந்ததும்
உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்
ஓர்ந்த ளந்ததொர் பாஸ்கரன் மாட்சியும்
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞால மீதிலி லக்கணம் கண்டதும்
இம்பர் வாழ்வி னிறுதிகண் டுண்மையின்
இயல்பு ணர்த்திய சங்கர னேற்றமும்

2. சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்,
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்ததும் தர்மம் வளர்த்ததும்
பேரருள் சுடர் வாள்கொண் டசோகனர்
பிழைப டாது புவித்தலம் காத்ததும்
வீரர் வாழ்த்த மிலேச்சர்தம் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்

3. அன்ன யாவு மறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்;
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறும் பெற்றியும் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்;
என்ன கூறிமற் றெங்ங னுணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ள மெரிவதே.

4. செலவு தந்தைக்கோ ராயிரம் சென்றது;
தீதெ னக்குப்பல் லாயிரம் சேர்ந்தன;
நலமோ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரம் கோயிலிற் சொல்லுவேன்.

சிலமுன் செய்நல் வினைப்பய னுலுநம்
தேவி பாரதத் தன்னை யருளினும்
அலைவு றுத்துநும் பேரிருள் வீழ்ந்துநான்
அழிந்தி டாதொ ருவாறு பிழைத்ததே.

குறிப்புரை :

1. உம்பர் – மேலிடம்; கோள் – கிரகம்; மீன் – நட்சத்திரம்; ஓர்ந்து – ஆராய்ந்து, (கணித்து); மாட்சி – சிறப்பு; திறல் –வலி; பாணி – வடமொழி இலக்கணம் (பாணினீயம்) செய்த முனிவர்; ஞாலம் – பூமி; இம்பர் – இவ்வுலகம்.

2. 'சேரன் தம்பி – சேரன் செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோ'; சிலம்பு – சிலப்பதிகாரம், (ஆகுபெயர்); வான் – சிறந்த; மறை – வேதத்தை ஒத்த திருக்குறள்; பார் – பூமி; 'இல்' 7–ம் உருபு; இசை – புகழ்; அருள் – இரக்கம்; 'இரக்கம் என்னும் ஒளிபொருந்திய வாள்' என்றவாறு; புவி – பூமி; தலம் – இடம்; மிலேச்சர் – அறிவீனர்.

3. பாரதம் – இந்தியா; 'போகுநர்' – வினையாலணையும் பெயர்; தேர்கிலர் – அறியார்; உழல் – வருந்துகின்ற.

4. எட்டுணை = எள் + துணை – எள்ளளவு; அலைவுறுத்து – துன்புறுத்துகின்ற.

பயிற்சி

1. பொருள் கூறுக: ஞாலம், கவிதை, கோள், மீன், ஓர்ந்து, திறல், இம்பர், மறை, மிலேச்சர்.
2. நூலியற்றி உலகிற்கு நன்மை புரிந்தோர் யார்? அவரியற்றிய நூல்களியாவை?
3. தமிழ் நாட்டின் சிறப்பியல்புகளைக் கூறுக.
4. தாம் ஆங்கிலக் கல்வி நன்கு கல்லாமையைப் பாரதியார் ஏன் பெரும் பேறாகக் கொண்டார்? இதுபற்றி உமது அபிப்பிராயமென்ன? ஆங்கிலங் கற்றவர்களிடமிருந்து நீங்கவேண்டிய பெருங்குறை யாது?
5. பாரதியார் ஆங்கிலக் கல்வியுள் அமிழாது தப்ப உதவியன யாவை?

இலக்கணம் :

1. குற்றியலுகர மொழிகள் 3 எழுதுக:
2. சுட்டுப் பெயர்கள் இரண்டு எழுதுக.
3. உதாரணம் தருக: எதிர்மறை வினைமுற்று. வினையாலணையும் பெயர், விளிப்பெயர், ஆகுபெயர், உம்மை இடைச்சொல்.
4. பிரித்தெழுதுக: எட்டுணை, பல்லாயிரம், ஓராயிரம், பேரிருள்.

கட்டுரை :

'ஆங்கிலமும் சுயமொழியும்' என்பதுபற்றி ஒரு கட்டுரை எழுதுக.

4087.

# வசனபாகம்

## 1. கல்வி

[ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்]

[இவர் யாழ்ப்பாணத்து நல்லூரில் கார்காத்த வேளாளர் குடியில் கந்தப்பு என்பவருக்கு ஆறுவது புத்திரராக 1822–ம் ஆண்டுக்குச் சமமான சித்திரபானு வருடம் மார்கழி மாதம் 5–ந் திகதி திருவவதாரம் செய்தருளினர். இவர் தேகவியோகமடையும் போது இவருக்கு வயது 56. 1876–ம் ஆண்டுக்குச் சமமான பிரமாதி வருடம் கார்த்திகைமாசத்தில் தேகவியோகமடைந்தார்.

நாவலர் அவர்கள் வரலாறு, இந்நூலில் இரண்டாம்பாடமாக உள்ளது]

மனிதர்களாலே தேடற்பாலனவாகிய பொருள்கள் கல்விப் பொருள் செல்வப் பொருள் என இரண்டாம். கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றல். கல்வியெனினும் வித்தையெனினும் பொருந்தும். கற்றற்குரிய நூல்களாவன: அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை அறிவிக்கும் நூல்களும், அந்நூல்களை அறிவிக்கும் கருவிகளாகிய நிகண்டு, இலக்கணம், கணக்கு முதலிய நூல்களுமாம். அறமெனினும் தருமமெனினும் பொருந்தும். வீடெனினும், முத்தியெனினும், மோக்ஷமெனினும் பொருந்தும்.

செல்வப் பொருள் பங்காளிகள், கள்வர், வலியவர், அரசர் என்னும் இவர்களாலே கொள்ளப்படும்; கல்விப் பொருளோ ஒருவராலும் கொள்ளப்படமாட்டாது. செல்வப்பொருள் வெள்ளத்தாலாயினும், அக்கினியாலாயினும் அழியும்; கல்விப் பொருளோ ஒன்றாலும் அழியமாட்டாது. செல்வப் பொருள் பிறருக்குக் கொடுக்குந்தோறும் குறைந்துகொண்டே வரும்; கல்விப் பொருளோ பிறருக்குக் கொடுக்குந்தோறும் பெருகிக் கொண்டேவரும். செல்வப் பொருள் சம்பாதித்தல், காப்பாற்றல், இழத்தல் என்னும் இவைகளாலே துன்பஞ் செய்து, பலரையும் பகையாக்கும். கல்விப் பொருளுடையவர், இம்மையிலே சொற்சுவை, பொருட்சுவைகளை அனுபவித்தலாலும்,

புகழும் பொருளும் பூசையும் பெறுதலாலும், பின்னே தருமத்தையும் முத்தியையும் அடைதலாலும், இடையறாத இன்பத்தை அனுபவிப்பர். இப்பெரியவரைச் சேர்ந்து அறியாதவைகளையெல்லாம் அறிந்தோம் என்று உலகத்தார் பலரும் அவரிடத்து அன்புடையவராவர். ஆதலினாலே, செல்வப் பொருளிலும் கல்விப் பொருளே சிறப்புடையது.

உயர் குலமும், அழகும், செல்வமும் உடையவராயினும், கல்வியில்லாதவர் முருக்கம் பூவுக்குச் சமமாவர். இராசாக்களுக்கு அவர் தேசத்தின் மாத்திரம் சிறப்புண்டாம். கற்றறிந்தவருக்கு அவர் சென்ற சென்ற தேசங்களிலெல்லாம் சிறப்புண்டாகும். ஆதலின் இராசாக்களினும் கற்றறிந்தவரே சிறப்புடையவர். ஆதலினால் யாவரும் கல்வியைச் சிறிதும் அவமதியாது வருந்திக் கற்றல் வேண்டும்.

அழுக்குப்படியாத சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்கும்; அழுக்குப்படிந்த சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்கமாட்டாது. சிறுபிராயத்திலே கற்ற கல்வி புத்தியிலே நன்றாகப் பதியும். புத்தி சமுசாரத்திலே விழுந்து வருத்தத்தை அடைந்துகொண்டிருக்கின்ற முதிர்ந்த பிராயத்திலே கற்றாலும், கல்வி நன்றாகப் புத்தியிலே பதியமாட்டாது. ஆதலினாலன்றோ ஔவையார் “இளமையிற் கல்” என்று அருளிச் செய்தார்.

கல்வியை நல்லாசிரியரிடத்தே சந்தேகமும் விபரீதமும் அறக் கற்றல் வேண்டும். சந்தேகமாவது இதுவோ அதுவோ என ஒன்றிலே துணிவு பிறவாது நிற்றல். விபரீதமாவது ஒன்றை மற்றொன்றாகத் துணிதல். வியாதி வறுமைகள் இல்லாமையும், பொருள் இளமை முதலியவைகள் உண்மையும், கல்வி கற்றற்குச் சிறந்த கருவிகள். மிகச் சிறந்த கருவி ஆசிரியருடைய உள்ளத்திலே, அருள் உண்டாகும்படி நடத்தல். ஆதலினாலே, கல்வி கற்கும் மாணாக்கர் ஆசிரியரை விதிப்படி சிரத்தையோடு வழிபட்டே கற்றல் வேண்டும். வழிபாடாவது, இன்சொற் சொல்லல், வணங்குதல், உற்றவிடத் துதவுதல் முதலாயின.

கல்வியிலே தேர்ச்சியடைய வேண்டுமாயின் இடைவிடாது கற்றல்வேண்டும். ஒருநாள் ஊக்கமாகவும், மற்றொருநாள் சோம்பலாகவும் இராமல், எப்பொழுதும் தங்கள் தங்கள்



சத்திக்கு ஏற்பக் கல்வியிலே பயிலல்வேண்டும். சோர்வு அடையாமல் நாடோறும் கிரமமாகச் சிறிதாயினும் நன்றாகக் கற்கின்றவர் எப்படியும் அறிவுள்ளவராவர். தாம் அதிக சமர்த்தர் என்று நினைத்து ஒவ்வொரு வேளையில் மாத்திரம் கற்கின்றவர் அதிகமாகத் தேர்ச்சி அடையமாட்டார். மணற்கேணியைத் தோண்டுந்தோறும் ஊற்றுநீர் சுரந்து பெருகிக்கொண்டே வருதல்போல, கல்வியைக் கற்குந்தோறும் அறிவு வளர்ந்துகொண்டேவரும். ஆதலினால், கல்வியைச் சிறிது கற்ற மாத்திரத்தால் அமையாது மேன்மேலும் கற்றல்வேண்டும்.

தாம் கேட்ட பாடங்களை நாடோறும் போற்றலும், தாங் கேட்ட பொருள்களைப் பலதரமுஞ் சிந்தித்தலும், ஆசிரியரை அடுத்து அவைகளைக் குறைவுதீரக் கேட்டலும், ஒருசாலை மாணாக்கர் பலருடனும் பலதரமும் பழகுதலும், தாம் ஐயுற்ற பொருளை அவரிடத்து வினாவுதலும், அவர் வினாவியவைகளுக்கு உத்தரம் கொடுத்தலும், தாம் கேட்டறிந்ததைப் பிறருக்கு அறிவித்தலும் ஆகிய இவைகளெல்லாம் கல்வி பயிலும் மாணாக்கருக்குக் கடன்களாம்.

நூல்களிலே சிலநாட் பழகினால் விவேகிகளாயினும், சிலவற்றில் வல்லராதலும் அரிது. பலநாட் பழகினால், மந்தர்களாயினும் பலவற்றிலும் வல்லவராவர். நூற்பொருளை விரைவினாலே பார்த்தால், விவேகிகளாயினும், ஒன்றுந் தெரியாது. விரையாது அமைவுடனே பார்த்தால், மந்தர்களாயினும், கருகாது தெரியும்.

பெரும்பாலும் எல்லாருக்குங் கற்பதிற் கருத்திறங்கும். கற்றதிற் கருத்து இறங்காது. அது நன்மையன்று. கருத்தைக் கற்பதிலே மட்டுப்படுத்தி, கற்றதிலே சிந்தாமல் இறக்கல்வேண்டும். வருந்திக் கற்ற நூலை மறக்கவிட்டு வேறு நூலைக் கற்றல், கையிலே கிடைத்த பொருளை எறிந்துவிட்டு, வேறு பொருளை அரிப்பரித்துத் தேடல்போலும். பசி முதலிய வருத்தத்தாலாவது, அன்ன முதலியவற்றின்கண் அவாவினாலாவது, யாதாயினும் வேறொரு நிமித்தத்தாலாவது, கருத்து மயங்கினால் அப்பொழுது கல்வியிற் பழகுதலொழிந்து, அம்மயக்கந் தீர்ந்த பின்பு பழகல்வேண்டும்.

கல்வியுடையவர் தாம் கற்றறிந்தபடி நல்வழியிலே ஒழுகுதலும், நன் மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பித்தலும், எல்லாருக்கும் உறுதியைப் போதித்தலுமாகிய இம் மூன்றையும் எந்நாளும் தமக்குக் கடனாகக் கொள்ளல்வேண்டும். இவ்வியல்புடையவரே கல்வியாலாகிய பயனை அடைந்தவராவர். இம் மூன்று மில்லாவிடத்துக் கல்வியினாற் பயனில்லை.

சரீரசுகத்துக்கு ஏதுவாகிய அன்ன வஸ்திர முதலியவற்றையும், ஆன்ம சுகத்துக்கு ஏதுவாகிய ஞானத்தையும் கொடுப்பது வித்தையேயாதலின், எல்லாத் தானங்களினும் வித்தியாதானமே சிறந்தது. ஒருவருக்கு அன்ன வஸ்திரங் கொடுத்தால், அவை அவருக்கு மாத்திரமே பயன்படும். பயன்படுவதும் சிறிது பொழுது மாத்திரமே. ஒரு விளக்கேற்றுதல், அவ்வொரு விளக்கிலே பல விளக்கும், அப் பல விளக்கினுள்ளும் ஒவ்வொரு விளக்கிலே பற்பல விளக்குமாக எண்ணில்லாத விளக்கு ஏற்றப்படுதற்கு ஏதுவாதல்போல; ஒருவருக்குக் கல்வி கற்பித்தல், அவ்வொருவரிடத்திலே பலரும், அப் பலருள்ளும் ஒவ்வொருவரிடத்திலே பற்பலருமாக, எண்ணில்லாதவர் கல்வி கற்றுக் கொள்ளுதற்கு ஏதுவாகும். அவர் கற்ற கல்வியோ அப்பிறப்பினன்றி மற்றைப் பிறப்புக்களினும் சென்று சென்று உதவும். ஆதலின் வித்தியாதானத்துக்குச் சமமாகிய தருமம் யாதொன்றுமில்லை. தாம் கற்ற கல்வியை நன் மாணாக்கர்களுக்குக் கருணையோடு கற்பியாதவர் காட்டிலே நச்சு மாமரமாவர்.

குறிப்புரை :

தேடற்பாலன — தேடப்படக் கூடியன ; உறுதிப் பொருள் — நிலையான பொருள் ; இழத்தல் — இழந்து விடுதல் ; பூசை — வணக்கம் ; இடையறாத — நீங்காத ; அவமதியாது — புறக்கணியாது ; சமுசாரம் — உலக வாழ்வு ; துணிவு - நிச்சயம் ; சத்தி — வலிமை ; உத்தரம் — விடை ; நிமித்தம் — காரணம் ; எண்ணில்லாத - அளவற்ற ; ஏது — காரணம்.

பயிற்சி :

1. ஒரு மனிதன் கற்றறிதற்குரிய நூல்களியாவை ?
2. கல்வி, செல்வத்திலும் ஏன் சிறந்தது ?
3. கல்வியுடையார் இன்பத்திலே திளைத்தலெங்ஙனம் ?
4. கல்வி கற்றற்குரிய சாதனங்களெவை ?
5. மன்னனில் கற்றோன் சிறப்புடையனாதலெங்ஙனம் ?



6. கல்வியிற் தேர்ச்சியை அடைய யாது செய்யவேண்டும்?
7. வித்தியாதானமேஎல்லாத்தானங்களிலும் சிறந்ததாதல்எங்ஙனம் ?
8. மாணாக்கர் கடமை எது ?
9. ஆசிரியரை வழிபடும் முறை யாது ?

இலக்கணம் :

1. 1-ம் பந்தியில் வந்துள்ள குற்றியலுகரங்களை எழுதி எத்தொடரெனக் கூறுக ?
2. 2ம் பந்தியிலுள்ள தொழிற் பெயர்களையும், இடைச் சொற்களையும் எழுதுக.
3. எதிர்ச்சொல் : இளமை, சோம்பல், விவேகி, நல் மாணாக்கர், நல் மரம்.
4. இலக்கணம் கூறுக : இல்லை, சிறந்தது, அவமதியாது

கட்டுரையாக்கம் :

1. செல்வமும் கல்வியும் ஒரு சம்பாஷணை எழுதுக.
2. 'வித்தியாதானச் சிறப்பு' என ஒரு கட்டுரை எழுதுக.

---

# 2. நான் கேட்டபடி

[மகாமகோபாத்தியாய தாட்சிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்]

['தமிழ்த் தாத்தா' என அழைக்கப்பட்ட மகாமகோபாத்தியாய தாட்சிணாத்ய கலாநிதி டாக்டர் சாமிநாதையர் அவர்கள் திருவாவடுதுறை யாதீன மகாவித்துவான், திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் மாணாக்கர் ஆவார். கும்பகோணம் அரசினர் கல்லூரியிலும், சென்னை இராஜதானிக் கல்லூரியிலும் தமிழ்ப் போதகாசிரியராயிருந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் சிலகாலம் தமிழ்ப்பேராசிரியராய்ப் பணியாற்றியவர். பல தமிழ் நூல்களை இன்று நாம் காண்பதற்குக் காரணஸ்தர் ஆனவர்களுள் ஐயர் அவர்கள் முதலிடம் பெறத் தக்கவர்கள். ஏட்டுச்சுவடிகளாயிருந்த பத்துப் பாட்டு, எட்டுத் தொகையுள் பெரும்பாலன ஆகிய சங்க இலக்கியங்களையும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை பெருங்கதை முதலிய பிற்கால இலக்கியங்களையும், நன்னூல், (மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர்) உரைகளையும் வேறு பல நூல்களையும் அச்சிற் பதிப்பித்தவர்.

'கண்டதும் கேட்டதும்,' 'என் சரித்திரம்,' 'மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம்,' 'உதயணன் கதை' முதலிய சில வசன நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். தமது தள்ளாப் பராயம் வரை தமிழ்த்தொண்டு புரிந்தவர். இத் தமிழ்த் தொண்டுக் கறிகுறியாக சென்னைச் சர்வகலாசாலையினரும் பிறரும் மகாமகோபாத்தியாய, தாட்சிணாத்ய கலாநிதி, டாக்டர் முதலிய பட்டங்களை வழங்கினர். இவர், உத்தமதானபுரம் என்னும் ஊரிலே 1855–ம் ஆண்டு பெப்ருவரி மாதம் இரண்டாந் தேதி பிறந்தார். தமது 87–வது வயதில் திருக்கழுக்குன்றத்தில் தங்கியிருக்கும்போது உயிர் நீத்தார்.]

தமிழ் நாட்டில் எவ்வளவோ நாவலர்கள் இருப்பினும் நாவலரென்று கூறிய மாத்திரத்தில் அச்சொல் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ: ஆறுமுகநாவலரையே குறிக்கும். இதற்குக் காரணம் அவர் நாவலர்களுக்குள் சிறந்து விளங்கியமையே யாகும்.

நாவலரை நான் பார்த்துப் பழகுவதற்குரிய சமயம் நேர்ந்ததில்லை. ஆயினும் அவரோடு பழகியவர்களிடத்தும், அவரிடம் பாடம் கேட்டவர்களிடத்தும் அவரைப் பற்றிய பல செய்திகளைக் கேட்டிருக்கிறேன். அவற்றைக்கொண்டு என் அகக் கண்ணில் ஓர் உருவத்தை அமைத்துப் பார்ப்பது என் வழக்கம்.

அவரை நினைக்கும்போதெல்லாம் அவரது வாழ்க்கைநெறி என் உள்ளத்தைக் கவரும். கல்வியறிவு மிகச் சிறந்ததே; ஆயினும் அவ்வறிவு ஒழுக்கத்தோடு இயையும்போது அதற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டாகின்றது.

நாவலருடைய தூய்மையான வாழ்க்கை யாவராலும் பாராட்டுதற்குரியது. பொருள் வருவாயையே தலைமையாகக் கருதி அவர் வாழ்வு நடத்தவில்லை. சைவமும் தமிழும் தழைத்து ஓங்கும் பொருட்டு அவர் மனமொழி மெய்களால் தொண்டு புரிந்து வந்தார். "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் அப்பர் திருவாக்குக்கு இலக்கியமாக அவரைக் கூறலாம். அவர் நிறுவியுள்ள சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியா சாலையும், யாழ்ப்பாணத்தில் அமைத்துள்ள நிலையங்களும் இதற்குப் போதிய சாக்ஷிகளாகும்.



அவருடைய பிரசங்க சக்தி அவருக்குப் பெரும் புகழை உண்டாக்கிற்று. நாவலர் என்னும் பெயரும் அதனாலே வந்ததுபோலும். "வார்த்தை பதினாயிரத்தொருவர்" என்பது ஒரு தமிழ்ச் செய்யுள் பகுதி. "படைகளோடு சென்று போர் புரிந்து சாவார் எளியர்; சபையிலே போய்த் தைரியமாகப் பேசுவோர் மிகச் சிலர்," என்று திருவள்ளுவரும் கூறினார். அத்தகைய அரிய பிரசங்க வன்மை நாவலரிடத்திலே நன்று அமைந்திருந்தது.

அக்காலத்துக்கு முன்பு பெரும்பாலும் புராணப் பிரசங்கங்களும் வாதங்களுமே சபைகளில் நடைபெற்று வந்தன. பொதுவாக ஒரு விஷயத்தை மேற்கொண்டு முறைப்படுத்தி காரண காரியங்களைக் காட்டி, ஆக்ஷேப சமாதானங்களோடு பேசும் வழக்கம் தமிழ் நாட்டில் மிகக் குறைவாக இருந்தது. கிறீஸ்தவ சமயப் பாதிரிமார் செய்த உபந்யாசங்களின் முறை தெளிவாகவும், எளிதிலே யாரும் அறிந்து சுவைப்பதற்குரியதாகவும் இருந்தது. அந்த முறையை நாவலர் பயின்று அதிற் பேராற்றல் அடைந்தார்.

தமிழ் வளர்ச்சியின் பொருட்டு அவர் செய்த அருஞ் செயல்களுக்கு அடையாளங்களாக அவர் பதிப்பித்த நூல்கள் விளங்குகின்றன. அவருடைய பதிப்பு முறை தமிழ் நாட்டாரால் பெரிதும் மதிக்கப்படுவது. நூலாசிரிய முறையில், நாவலர் எழுதிய நூல்கள் இந் நாட்டில் உலவுகின்றன. பாலபாடங்கள் ஒழுக்கத்தையும் சைவசமய உணர்ச்சியையும் உண்டாக்குவன. நன்னூலுக்கு அவர் ஒரு காண்டிகை உரை எழுதியிருக்கிறார். இலக்கணச் சுருக்கம் முதலிய சிற்றிலக்கண நூல்கள் சிலவற்றையும் இயற்றி வெளியிட்டிருக்கின்றார். இவை தமிழிலக்கணம் பயிலும் மாணவர்களுக்கு மிகப் பயன்படுவனவாகும்.

சில இலக்கிய நூல்களுக்கும் அவர் உரை எழுதியிருக்கின்றனர். அவருடைய வசனநடை எளியது. வட சொற்களோடு கலந்து அழகு பெறுவது; பாலர் முதல் பண்டிதர் ஈறாகவுள்ள யாவருக்கும் பயன் தரத்தக்கது. அக் காலத்தில் தமிழில் அழகிய வசனநடை எழுதுவோர் மிக அரியராக இருந்தனர்.

பிறரிடம் குறை காணின் கண்டிப்பது நாவலர் இயல்பு. பொது நிலையங்களிலும், தர்ம ஸ்தாபனங்களிலும் நிகழும் தவறுகளை யாருக்கும் அஞ்சாது வெளியிட்டார். அவர் எழுதிய கண்டனப் பத்திரங்கள் பல. அவற்றை ஆராய்ந்தால் ஒவ்வொரு ஸ்தாபனமும் நெறிவழாமல் நடைபெற்று வர வேண்டுமென்பதில் அவருக்கு இருந்த ஊக்கம் புலப்படும்.

நாவலர் வாழ்க்கையில் ஒழுக்கத்தின் உயர்வும், கல்விப் பெருமையும், சைவசீலத்தின் சிறப்பும் கமழ்ந்தன. அவர் சமயத்தொண்டராகவும், நாவன்மை மிக்கவராகவும், நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் விளங்கினர்.

என்னுடைய தமிழாசிரியரான திரிசிரபுரம் மஹாவித்துவான். ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களும் நாவலரும் ஒரு காலத்தினரே. இருவரும் நெருங்கிப் பழகியதுண்டு. நாவலருடைய குணாதிசயங்களைப் பிள்ளையவர்கள் அடிக்கடி பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்பொழுது தமிழ் நாட்டினருக்குத் தமிழினிடத்தில் அன்பு வளர்ச்சி பெற்றுவருகின்றது. அதற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் ஒரு காரணம் ஆவர். அவர் என்றும் தமிழ் நாட்டினரது நினைவில் இருப்பவராதலின் அவருடைய புகழுடம்பு என்றும் மறைதலின்றி நிலவி ஒளிரும் என்பதில் ஐயம் இல்லை.

குறிப்புரை:

அகக்கண் – மனக்கண்; நெறி – முறை; தூய்மை – பரிசுத்தம்; தலைமை – சிறப்பு; அப்பர் – திருநாவுக்கரசுநாயனார்; வார்த்தை பதினாயிரத்தொருவர் – பதினாயிரவருள் ஒருவரே இனிய பிரசங்கம் செய்யும் ஆற்றல் பெற்றிருப்பர். படை – ஆயுதம், போர்வீரர்; ஆக்ஷேபம் – மறுப்பு; பொதுநிலையம் – பொதுஸ்தாபனம்; சீலம் – ஒழுக்கம்.

பயிற்சி:

1. இப்பகுதியில் வந்துள்ள வடசொற்களை எழுதுக: அவற்றின் பொருள் தரும் தமிழ்ச் சொற்களை எழுதுக.
2. நாவலர் பெருமான் சிறப்பியல்புகளெவை?
3. நாவலர் காலத்திருந்த அறிஞர் சிலரின் பெயர் தருக.
4. நாவலரால் பதிப்பிக்கப்பட்ட, உரைவகுக்கப்பட்ட, யாக்கப்பட்ட நூல்கள் எவை?
5. நாவலர் பிரபந்தத்திரட்டு என்னும்நூலால் நாம் அறியக் கிடப்பது என்ன?



இலக்கணம்;

1. பின்வரும் வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக்கி எழுதுக
   i. நாவலருடைய குணாதிசயங்களைப் பிள்ளையவர்கள் அடிக்கடி, பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.
   ii. நன்னூலுக்கு அவர் ஒரு காண்டிகை உரை எழுதியுள்ளார்.
   iii. மாம்பழத்தைத் தின்றான்.
2. பின்வரும் வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாக்குக:
   i. அவருடைய பதிப்புமுறை தமிழ் நாட்டவரால் பெரிதும் மதிக்கப்படுவது.
   ii. என்னால் படிக்கப்பட்டது.
3. எதிர்ச்சொல் தருக: ஆக்ஷேபம், தெளிவு, தைரியம், தொண்டர், அகக்கண், பெரும்பாலும்.

---

# 3. மாணவருக்கு

[மகாத்மா காந்தியடிகள்]

[உலகில் தோன்றிய பெரிய மகான்களில் 'காந்திஜி' ஒருவர். இந்திய சுதந்தரத்தின் தந்தை. அஹிம்சையையும் சத்தியத்தையும் ஆயுதங்களாகக்கொண்டு சகல காரியங்களையும் சாதிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். அநாத மக்களின் இரட்சகர். தீண்டாமையை ஒழிக்க அரும்பாடுபட்டவர். வகுப்பு ஒற்றுமைக்காக தமது உயிரையும் பொருட்படுத்தாது, பல தொண்டு புரிந்தவர். இதனாலேயே தம் உயிரையும் தியாகஞ் செய்தவர்.

இவர், இந்தியாவிலுள்ள பம்பாய் மாகாணத்தில் போர்பந்தர் என்னும் ஊரில் 1869–ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2–ந் திகதி பிறந்தார். 1948–ம் ஆண்டு ஜனுவரி மாதம் 30–ந் திகதி மாலைப்பிரார்த்தனையின்போது வகுப்பு வெறிபிடித்த ஒருவனின் செயலால் அவரது ஆன்மா சோதியுட் கலந்தது.

இவரது சுய சரித்திரத்தைத் தெரிவிக்கும் சத்திய சோதனை என்னும் நூலையும், மாணவர்களுக்கு, மாணவிகளுக்கு, பெண்களுக்கு என்னும் நூல்களையும், வாசிப்பின் மாணவர் பெரும் பயனடையலாம்.

'காந்திஜி' அவர்கள் 1927-ம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தபோது காலியிலுள்ள மகிந்தாக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவு.]

மனதிற்கினிய இந்த வைபவத்தில் கலந்துகொள்ள நேர்ந்தமைக்காக, நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அநேக மாணவர்களுடன் கலந்து பழகவும், இங்கே நடக்கிற நிகழ்ச்சி முறைகளைக் கண்டு களிக்கவும் அனுமதி தந்து, நீங்கள் என்னை மிகவும் கௌரவப்படுத்தி விட்டீர்கள். உண்மையில் இது எனக்கு மிகுந்த புகழுரையாகும்.

இந்த நிலையானது படிப்படியாக முன்னேறி, விரிவடைய விரும்புகிறேன். அவ்விதம் விரிவடைவதற்கு இந்த நிலையம் தகுதியுடையதேயாகும். இந்த அழகிய தீவிற்கு வந்து, இந்தத் தீவைப்பற்றியும் இங்குள்ள மக்களைப்பற்றியும் நான் போதுமான அளவு தெரிந்து கொண்டுள்ளேன் எனலாம். இந்த நிலையத்தை மட்டுமல்ல இதைப்போன்ற இன்னும் பல நிலையங்களையும் ஆதரிப்பதற்குப் போதுமான பௌத்தர்கள் இந்தத் தீவில் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். எனவே இந்தப் பள்ளிக்கூடத்திற்குப் பணத்தைப்பற்றிய கவலை இராதென்றே நம்புகிறேன். தென் ஆபிரிக்கா, இந்தியா இரண்டிலுமே கல்வி நிலையங்கள் சம்பந்தமாய் எனக்குச் சிறிது அனுபவமுண்டு.

## உண்மையான கல்வி நிலையங்கள்

கல்லும் சாந்தும் கொண்டு கட்டிய கட்டிடங்கள் மட்டும் கல்வி நிலையங்கள் ஆகா. உண்மையான சிறுவர் சிறுமியரே நாள்தோறும் இத்தகைய நிலையங்களைக் கட்டுபவர்கள் ஆவர். பள்ளிக்கூடங்கள் என்னும் பெயரால் மிகப் பெரிதாகவும் சிற்பநூல் முறைப்படியும் கட்டப்பட்ட அநேக கட்டிடங்களை நான் பார்த்திருக்கிறேன். அவை யாவும் சுண்ணாம்படித்த வெறும் கல்லறைகளேயன்றி வேறில்லை. இதற்கு நேர்மாறாக உள்ள சில பள்ளிக்கூடங்களும் உண்டு. அவை தினந்தோறும் பணமின்றிக் கஷ்டப்படுவதைக் காணலாம். பணத்தேவை இருப்பதன் காரணமாகவே அந்த நிலையங்கள் நாள்தோறும் ஆன்ம நெறியில் முன்னேறிச் செல்கின்றன. எவரை நீங்கள் இதய கமலத்தில் வைத்துப் பேரரசர் என்று



போற்றுகிறீர்களோ, எவரை உலகத்து மக்கள் பெரிய மகான்களில் ஒருவராக மதிக்கிறார்களோ, அவர், தாம் செய்த உபதேசங்களையெல்லாம் மனிதனாற் கட்டப்பட்ட மாளிகையிலிருந்து செய்யவில்லை; மகிமை பொருந்திய மரத்தின் நிழலில் இருந்துகொண்டு தான் உபதேசித்தார். இலங்கையிலுள்ள எந்தச் சிறுவனும் எத்தச் சிறுமியும் வந்து படிப்பதற்குத் தகுந்த விதமாகவும் ஏற்ற விதமாகவும் இதைப்போன்ற கல்வி நிலையங்களின் குறிக்கோள் அமையவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

## சுயபாஷைமூலம் கற்றல்

மிகவும் ஏழைகளாயுள்ள குழந்தைகள் வந்து படிக்க இயலாதவாறு பள்ளிக்கூடச் செலவுகள் நாள்தோறும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. இந்தியாவிலோ, செலவு ஏற்கனவே அதிகமாகிவிட்டது. இந்த நாட்டிலும் அப்படியே செலவு அதிகமாகி வருவதைக் காண்கிறேன்.

பயங்கரமான இத்தகைய தவறு நேராதவாறு நாம் எல்லாரும் கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல், வருங்கால சந்ததியாரின் நியாயமான வெறுப்புக்கு நாம் ஆளாக நேரும். அவ்விதம் நேராதவாறு செய்ய விரும்பினால் ஆரம்ப முதல் கடைசிவரை யாவற்றையுமே பிள்ளைகளுக்குச் சுயமொழி மூலம் கற்பிக்கவேண்டும். இதை நான் வற்புறுத்திக் கூறுகிறேன். ஒரு நாட்டைச் சேர்ந்த குழந்தைகள் அந்த நாட்டுக்குரிய தாய்மொழியிற் கல்வி பயிலாமல், வேறு ஓர் அந்நிய மொழியிற் கல்வி பயிலுவார்களேயானால், கல்வியைப்பற்றிய வரையிலே நிச்சயமாக, அது தற்கொலைக்கு ஒப்பாகும். அந்நிய மொழியிற் கல்வி கற்பது பிறப்புரிமையையே பறித்து விடுகிறது. இளம் பிள்ளைகளுக்கு அளவில்லாத வருத்தத்தைக் கொடுப்பதோடு அவர்களிடம் காணப்படும் நூதன இயல்புகளையெல்லாம் பாழாக்கி விடுகிறது; அவர்களுடைய வளர்ச்சியைக் குன்றச் செய்துவிடுகிறது; குடும்ப வாழ்க்கையைத் தொடர்பு அற்றதாக்கிவிடுகிறது. இப்படிப்பட்ட போக்கினால் நாட்டுக்கு முதல்தரமான பெருத்த கேடு விளையும் என்று நான் கருதுகிறேன். இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். சமஸ்கிருதத்தை இந்தியாவில் தாய்மொழியாக

நான் கருதுகிறேன். உங்களுடைய சமயக் கல்வி யெல்லாம் இந்தியர்களுக்குள்ளே இந்தியராய் விளங்கிய ஒருவர்மூலம், நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். அவருடைய உணர்ச்சிக்குத் தூண்டு கோலாய் இருந்தவை சமஸ்கிருத நூல்களேயாகும். ஆகையால் சமஸ்கிருத பாஷைக்கும் இங்கு இடங்கொடுத்து, உற்சாகத்துடன் படிப்பதற்கு ஏற்பாடு செய்வது உங்கள் கடமை. இலங்கையில் வாழும் பௌத்த சமூகத்தினருக்குத் தேவைப்படும் பாடப் புத்தகங்கள் அனைத்தையும் சிங்கள மொழியில் வழங்க இத்தகைய ஸ்தாபனங்கள் முன்வரவேண்டும்; அதோடு கூட, புராதன நூல்களிற் காணப்படும் சிறந்த அம்சங்களையும் எடுத்து வழங்க முன்வரவேண்டும்.

ஏதோ, அடையமுடியாத ஒரு இலட்சியத்தை நான் குறிப்பிடுவதாக நீங்கள் எண்ணமாட்டீர்களென நம்புகிறேன். தாய் மொழியின் சிறப்பையும், மறந்துபோகும் தறுவாயிலிருந்து வந்த புராதன அரிய நூற்கருவூலங்களையும், திருப்பி நடைமுறைக்குக் கொண்டுவந்து, அவற்றின் கண்ணியத்தைக் காப்பாற்ற அநேக ஆசிரியர்கள் அரும்பாடுபட்டு முயன்றிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். சரித்திரத்திலிருந்தே, இதற்குச் சான்று நான் காட்ட முடியும்.

### சுதேச விளையாட்டுக்கள்

உடற் பயிற்சி விஷயத்திலும் நீங்கள் போதிய கவனம் செலுத்தி இருப்பதைக்கண்டு உண்மையில் எனக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. விளையாட்டுக்களிலும் கலந்துகொண்டு அதிற் புகழ் அடைந்திருப்பதற்காக நான் உங்களை வாழ்த்துகிறேன். உங்கள் நாட்டில் சுதேச விளையாட்டுகள் இருக்கின்றனவோ என்னவோ அதை நான் அறியேன். 'கிரிக்கெட்' (Cricket), 'புட்போல்' (Foot-ball) போன்ற விளையாட்டுகள் இந்தப் புனித பூமியிலே காலெடுத்து வைப்பதற்குமுன் பிள்ளைகள் விளையாடத் தகுந்த விளையாட்டுகள் வேறு எதுவும் இந்த நாட்டில் இருந்ததில்லை எனச் சொல்லுவீர்களாயின், அதைக்கேட்டு நான் மிகவும் ஆச்சரியமடைவேன்; அந்த ஆச்சரியம், வருத்தம் தரத்தக்கதாகவே இருக்கும். இங்கே சுதேச விளையாட்டுக்கள் இருந்தனவென்றே வைத்துக்கொள்ளுவோம். அப்படியாயின்



அவற்றை மீண்டும் புதுப்பித்து வழிகாட்டவேண்டிய பொறுப்பு இந்த நிலையத்தைச் சார்ந்தது. எங்கள் நாட்டிலும் உயர்ந்த சுதேச விளையாட்டுக்கள் உண்டு. 'புட்போல்,' 'கிரிக்கெட்' ஆகிய விளையாட்டுக்களைப்போன்று உற்சாகம் ஊட்டுவனவாயும் விநோதமானவையாயும் அவை இருக்கும். 'புட்போல்' விளையாட்டைப்போன்று, இவற்றிலும் அபாயம் நேருவதற்கு இடமுண்டு. மேலும் வேறு தனியான சிறப்பு இயல்பும் எங்கள் நாட்டு விளையாட்டுகளுக்கு உண்டு. அவற்றினுற் செலவு அதிகமாவதில்லை; செலவே இல்லை என்றுகூடச் சொல்லிவிடலாம்.

### புராதனமும் நவீனமும்

புராதனம் என்பதற்காக அனைத்தையுமே நான் வேறுபாடு இன்றிக் கண்மூடித்தனமாய்க் கொண்டாடுகிறவன் அல்லன்! எவ்வளவு புராதன முடையனவாய் இருப்பினும், நல்லொழுக்கத்திற்குப் புறம்பானவையாயும் தீயனவாயும் இருக்கின்றவற்றை அழிக்க முயல்வதில் நான் சிறிதும் தயங்குவதில்லை. புராதனமாய் உள்ள நிலையங்களைக் கொண்டாடுகிறவன்தான் நான். சிலர் அவ்விதம் கொண்டாடாது இருப்பது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. நவீன நாகரீகம் என்னும் மோகத்திலே மயங்கி, புராதன பழக்க வழக்கங்கள் யாவற்றையுமே அவர்கள் இகழ்ந்து ஒதுக்குகிறார்கள்; வாழ்க்கை முறையிலும் கடைப்பிடிக்காது தவறிவிடுகிறார்கள்.

நமது முன்னோரின் நடையுடை பாவனைகள் யாவும் மூடப் பழக்க வழக்கங்களின் குவியல்களைத் தவிர வேறில்லை என, கீழை நாட்டினராகிய நாம் அவசரப்பட்டு எண்ணிவிடுகிறோம். கீழை நாட்டில் மதிப்பிடமுடியாத பொக்கிஷங்கள் இருக்கின்றன. அவற்றிலே மூடப் பழக்க வழக்கங்களும் இருக்கலாம். அளவிடமுடியாத சிறந்த அம்சங்களும் உண்டு. மூடப் பழக்கங்கள் அல்லாதவற்றை நன்கு புரிந்துகொண்டு, அவற்றை நடைமுறையில் அனுஷ்டிப்போமேயானால், அவை ஒருவனுக்கு, நல் வாழ்வைத் தந்து, அவனை மேன்மைப்படுத்துகின்றன. நீண்ட காலமாக எனக்குள்ள சொந்த அனுபவத்தினால் ஏற்பட்ட முடிபு இது. மயக்கந் தருகிற மேலைநாட்டு வெளிப் பகட்டைக் கண்டு நாம் ஏமாந்துபோகாமல் இருப்போமாக!

மறுபடியும் இன்னொரு எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன். மேலைநாட்டில் இருந்து வருபவை யாவற்றையுமே பகுத்துணர்ந்து பாராது வெறுத்து ஒதுக்குகிற பேர்வழி என்று நீங்கள் என்னை எண்ணிவிடவேண்டாம். மேலை நாட்டிலிருந்து அனேக விஷயங்களை என் வாழ்க்கையிலே நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். எது விரும்பத்தக்கது, எது விரும்பத்தகாதது, எது சரி, எது தப்பு என்று மனிதன் வேறுபடுத்திப் பார்க்கும் தன்மையை அழுத்தமாகக் குறிப்பிடுவதற்குச் சமஸ்கிருத மொழியில் ஒரு சொல் உண்டு; 'விவேகம்' என்பதே அந்தச் சொல்லாகும். இந்தச் சொல்லுக்குச் சரியான ஆங்கிலச் சொல், 'டிஸ்கிரிமினேஷன்' (Discrimination) என்பது. இந்தச் சொல்லை பாளிமொழியிலும் சிங்கள மொழியிலும் நீங்கள் சேர்த்துக்கொள்வீர்களென நம்புகிறேன்.

## தொழிற் கல்வி

உங்கள் பாடத்திட்டம் சம்பந்தமாகச் சிறிது சொல்ல விரும்புகின்றேன். அந்தத் திட்டத்தில் கைத்தொழிலுக்கு இடம் இருக்குமென நினைத்தேன். உங்களுடைய மேற்பார்வையில் இருக்கிற பிள்ளைகளுக்குக் கைத்தொழில் கற்பிக்கப்படவில்லையென்றால், காலதாமதமின்றி விரைவிலேயே இந்தத் தீவிற்கு ஏற்றதான ஒரு கைத்தொழிலைக் கற்பிப்பது அவசியம் ஆகும். இந்த நிலையத்திற் கல்வி கற்று வெளியேறிய சிறுவர்கள் அனைவருமே அரசாங்க உத்தியோகத்தில் இலிகிதர்களாகவோ, வேலைக்காரர்களாகவோ ஆவதை விரும்பமாட்டார்கள் என்பது நிச்சயம்; இதை எதிர்பார்த்தே படித்திருக்கவும் மாட்டார்கள். அவர்களுக்கு இந்த நாட்டின் பலத்தைப் பெருக்க விருப்பம் இருப்பின் சகல சுதேசக் கைத்தொழில்களையும் மிகத் தேர்ச்சியோடு அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஏழைகளுக்கு ஏழைகளாயிருப்பவர்களுடன் ஒன்றிக் கலப்பதற்கு ஒரு அடையாளம் ஆகவும், அதோடன்றி, கலைப் பயிற்சி ஆகவும் உள்ள தொழில் என்னைப் பொறுத்தவரை நூல் நூற்பதைத் தவிரச் சிறந்தது வேறு எதுவும் இல்லை. நூல் நூற்பது எளிதான தொழில்; எனவே அதைக் கற்றுக்கொள்ளுவதும் எளிது. நம் தேவையின் பொருட்டாய் நூல் நூற்கிறோம் என்ற எண்ணமின்றி, நாட்டின், ஏழை எளியவர்களுடன் ஒன்றிக் கலப்பதற்காகவே நூல் நூற்கிறோம் என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டுவிட்டால், சிறப்புடைய, புனிதமான ஒரு தொழிலாக நூல் நூற்பது ஆகிவிடுகிறது. இந்தப் புனிதமான தொழிலோடு வேறு ஏதாவது ஒரு தொழிலைச் சிறுவன் கற்றுக்கொண்டுவிடுவானேயானால், அதைக்கொண்டு வாழ்க்கை நடத்தமுடியும். இந்த எண்ணம் சிறுவனுக்கு உதிக்கும் வரையில் அந்தத் தொழில் அமைவது அவசியம்.



## சமயக் கல்வி

உங்கள் பாடத்திட்டத்திற் சமயக் கல்விக்கும் இடம் இருக்கிறது. இது சரியான காரியமே. சமயக் கல்வியைச் சிறுவர்களுக்குச் சிறந்த முறையிற் போதிப்பது சம்பந்தமாகப் பல மாணவர்களை வைத்து நான் ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். புத்தகத்தின்மூலம் போதிப்பது சிறிது உதவியாய் இருக்கிறது; எனினும் அது ஒன்றினால் மட்டும் பயனில்லை என்பதை நான் கண்டேன். ஆசிரியர்களும் சமய வாழ்க்கை வாழ்ந்து சமயத்தைப் போதிப்பதே சரியான நெறி என்று கண்டேன். ஆசிரியர்களின் சொந்த வாழ்க்கையிலிருந்து அதிகமாகக் கிரகித்துக் கொள்ளுகிறார்களேயன்றி, ஆசிரியர்கள் படித்துக் காட்டும் புத்தகங்களிலிருந்தோ, அல்லது அவர்கள் புரிகிற பிரசங்கங்களிலிருந்தோ சிறுவர்கள் அதிமாகக் கிரகித்துக்கொள்ளுவதில்லை. தம்மை அறியாமலே கூர்ந்து கவனிக்கும் சக்தி சிறுவர் சிறுமியரிடம் உண்டு. இதன் உதவிகொண்டு, அவர்கள் தமது ஆசிரியர்களின் எண்ணங்களை எல்லாம் அறிந்துகொண்டு விடுகிறார்கள். இந்த உண்மையைக் கண்டபோது நான் அடைந்த ஆனந்தத்திற்கு ஒரு எல்லையே இல்லை. வாயினால் ஒன்றைப் போதித்து, மனதில் ஒன்றை வைத்துக் கொண்டிருக்கிற ஆசிரியர் ஒருநாளும் உருப்படமாட்டார்.

## மாணவருக்குரிய குண இயல்புகள்

மாணவர்களுக்கு மட்டும் இரண்டொரு வார்த்தை சொல்லி, எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். சிறுவர் சிறுமியர் பலருக்கு — ஏன் நீங்கள் சொல்ல விரும்புவதைப்போல — ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமியருக்குத் தந்தை என்ற முறையில்,

சிறுவர்களே! நான் உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். உங்கள் தலை எழுத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு உங்கள் கைவசந்தான் இருக்கிறது. இரண்டு நிபந்தனைகளை மட்டும் அனுசரித்து நீங்கள் வாழ்க்கை நடத்திவந்தால், பள்ளிக்கூடத்தில் எதைப் படிக்கிறீர்கள், எதைப் படிக்கவில்லை என்பதுபற்றி நான் ஆராயமாட்டேன். எவ்விதக் கொடிய சோதனைகளுக்கு நீங்கள் உட்பட நேரிடினும் சரி, சகல சந்தர்ப்பங்களிலும் ஒரு சிறிதும் அச்சமின்றி, உண்மையே பேச வேண்டும். இது ஒரு நிபந்தனை. உண்மையான மாணவன், தைரியமுள்ள மாணவன், புழுவிற்குக்கூடத் தீங்குசெய்ய எப்போதுமே எண்ணமாட்டான். தான்படிக்கிற பள்ளிக்கூடத்திலும் மெலிந்த மாணவர்களைப் பாதுகாக்க முன்வருவான். பள்ளிக்கூடத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவனுடைய உதவியை நாடி இருப்பவர்களுக்கு உதவி செய்வான். இதயம், உடல், செயல் ஆகிய மூன்றிலும் பரிசுத்தமாய் இராத மாணவனை எந்தப் பள்ளிக்கூடத்திலிருந்தும் துரத்தியடிக்க வேண்டியது அவசியம். பிறருக்கு உதவ விருப்பமுள்ளவனது மனம் எப்பொழுதுமே பரிசுத்த முடையதாயிருக்கும்; பார்வை நேரானதாயிருக்கும்; அவனுடைய கைகள் கெட்ட காரியங்களைச் செய்யா; வாழ்க்கையின் அடிப்படையான நல்லொழுக்கங்களையும் நியதிகளையும் கற்பதற்குப் பள்ளிக்கூடப் படிப்பு அவசிய மன்று. மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றிலும் நீங்கள் பரிசுத்த முடையோராக விளங்கினால், உங்களது வாழ்க்கை பலமான ஒரு அடிப்படையின்மீதே நடைபெறுகிறது என்று எண்ண இடம் உண்டு.

உண்மையான அஹிம்சையும், தூய்மையும் உங்கள் வாழ்க்கையைப் பாதுகாக்கும் கேடயங்களாக விளங்கட்டும்! உங்களது மேன்மையான உயர்ந்த எண்ணங்களும் ஆசைகளும் நிறைவேறக் கடவுள் உதவி செய்வாராக.

பயிற்சி

1. கல்வி நிலையங்கள் ஆன்மநெறியில் முன்னேறிச் செல்வதற்கு அநுகூலமான காரணம் எது? உதாரணம் தருக.
2. கல்வி நிலையங்களின் குறிக்கோள் எதுவாக அமையவேண்டும்?

* இது காரைக்குடி புதுமைப் பதிப்பகத்தாரின் அனுமதியுடன் வெளியிடப்பட்டது.



3. மாணவர்கள் அந்நிய மொழியிற் கல்வி கற்பதனால் அடையக்கூடிய தீமைகளியாவை?
4. நம் நாட்டுச் சுதேச விளையாட்டுக்கள் யாவை? இவ் விளையாட்டுக்களையும் உதைபந்து (Foot-ball), 'கிரிக்கெட்' (Cricket) முதலிய விளையாட்டுக்களையும் ஒப்பிட்டுப் பார்க்க.
5. 'பழமையும் புதுமையும்' என்பதுபற்றிக் காந்திஜீயின் அபிப்பிராயம் யாது?
6. இலங்கைப் பாடத்திட்டத்திலுள்ள குறையெதுவென 'காந்திஜீ' குறிப்பிடுகிறார்? அக் குறைபாடு நீங்கின் அடையக்கூடிய நன்மைகளியாவை?
7. சமயக் கல்வி போதிக்கும் ஆசிரியர் எத்தகையராய் இருத்தல் வேண்டும்?
8. மாணவர்களிடத்துக் காணப்படவேண்டிய இரண்டு முக்கிய இயல்புகளெவை?
9. ஒருவனது வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கு உதவுவன யாவை?
10. பொருள் தருக: கேடயம், குறிக்கோள், கருவூலங்கள், சான்று, புனிதம், அபாயம், நெறி, அஹிம்சை, தூய்மை, நிபந்தனை, இதயகமலம், பகட்டு.
11. இப் பாடத்துள் வந்துள்ள வடசொற்களை எழுதுக. அம்மொழி பற்றி காந்திஜீயின் கருத்து யாது?

இலக்கணம்:

1. பின்வரும் சொற்களை அமைத்து வசனம் எழுதுக: வைபவம், தற்கொலை, தூண்டுகோல், ஸ்தாபனங்கள், அம்சங்கள், இலட்சியம், விநோதம், பொக்கிஷங்கள், எச்சரிக்கை, காலதாமதம், அனுசரித்து.
2. எதிர்ச்சொல் எழுதுக: கௌரவம், புகழுரை, சுயமொழி, உற்சாகம், புராதனம், சுதேசம், அஹிம்சை.
3. இலக்கணம் கூறுக: செய்வாராக, அன்று, உண்டு, நாடி, விளக்கினால், மெலிந்த, செய்வான், மாறு, வாழ்வு.

கட்டுரை:

1. 'மாணவர் கடன்' என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.
2. 'ஆசிரியரும் வாழ்க்கையும்' என்பதுபற்றி ஒரு பந்தி எழுதுக.

# 4. சிட்டுக் குருவி

[ஸ்ரீ சுப்பிரமணியபாரதியார் அவர்கள்]

[இவர் எட்டயபுரம் என்னும் சமஸ்தானத்தில் 1882-ம் ஆண்டு கார்த்திகை மாதம் மூலநட்சத்திரத்திற் பிறந்தார். இவர் இறக்கும்போது இவருக்கு வயது 39. இவர் 1921-ம் ஆண்டு புரட்டாதி மாதம் பதினொராந் தேதி தேகவியோகமடைந்தார். இவரது வரலாற்றுச் சுருக்கத்தைச் செய்யுட்பகுதியிற் காண்க.]

சிறிய தானியம் போன்ற மூக்கு; சின்னக் கண்கள்; சின்னத் தலை; வெள்ளைக் கழுத்து; அழகிய மங்கல்-வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு; கருமையும், வெண்மையும் இவை கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப்போன்ற முதுகு; சிறிய தோகை; துளித் துளிக் கால்கள்.

இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப் பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண். மற்றொன்று பெண். இவை தம் முள்ளே பேசிக்கொள்கின்றன. குடும்பத்துக்கு வேண்டிய உணவு தேடிக்கொள்கின்றன. கூடு கட்டிக்கொண்டு, கொஞ்சிக் குலாவி மிக இன்பத்துடன் வாழ்ந்து, முட்டையிட்டுக் குஞ்சு களைப் பசியில்லாமற் காப்பாற்றுகின்றன.

சிட்டுக் குருவி பறந்து செல்வதைப் பார்த்து எனக்கு அடிக்கடி பொறாமை யுண்டாகும். ஆஹா! உடலை எவ்வளவு இலாகவத்துடன் சுமந்து செல்கின்றது. இந்தக் குருவிக்கு எப்போதேனும் தலைநோவு வருவதுண்டோ? ஏது எனக்குத் தோன்றவில்லை. ஒருமுறையேனும் தலைநோவை அனுபவித்த முகத்திலே இத்தனை தெளிவிருக்க நியாயமில்லை. பயமும் மானமும் மனிதனுக்குள்ளது போலவே குருவிக்கும் உண்டு.

இருந்தபோதிலும், க்ஷணந்தோறும், மனிதனுடைய நெஞ்சைச் செல்லரிப்பதுபோலே அரிக்கும் கவலைத்தொகுதியும், அதனால் ஏற்படும் நோய்த்திரளும் குருவிக்கு இருப்பதாகத் தெரியவில்லை.



தெய்வமே, எனக்கு இரண்டு சிறகுகள் கொடுக்க மாட்டாயா? பாழ்பட்ட மனிதர் கூட்டத்தையும், இதன் கட்டுக்களையும், நோய்களையும், துன்பங்களையும், பொய்களையும் உதறி எறிந்துவிட்டு, நான் இச்சைப்படி வானத்திலே பறந்துசெல்ல மாட்டேனோ? ஆஹா! எத்தனை தேசங்களைப் பார்க்கலாம்? எத்தனை காடுகள்; எத்தனை பூக்கள்; எத்தனை மலைகள்; எத்தனை சுனைகள்; எத்தனை அருவிகள்; எத்தனை நதிகள்; எத்தனை கடல் வெளிகள்; வெயில், மழை, காற்று, பனி இவையெல்லாம் என் உடம்புக்கு நன்றாய் வழக்கப்பட்டு, இவற்றால் நோய்கள் உண்டாகாமல், எப்போதும் இன்ப உணர்ச்சிகளே உண்டாகு மிந்த நிலை, எனக்கு அருள்புரிய லாகாதா? குருவிக்குப் பேசத் தெரியும்; பொய் சொல்லத் தெரியாது; குருவியில் ஆண், பெண் உண்டு; தீராத கொடுமைகள் இல்லை. குருவிக்கு வீடுண்டு; தீர்வை கிடையாது. குருவிக்கு உணவுண்டு; உழைப்புண்டு. நாயகமில்லை; சேவகமில்லை

தெய்வமே, எனக்கு இவ்விதமான வாழ்க்கை தரலாகாதா? குருவிக்கில்லாத பெருமைகள் எனக்கும் சில அருள்செய்திருக்கிறாய் என்பது மெய்தான். ஆராய்ச்சி, பக்தி, சங்கீதம், கவிதை முதலிய இன்பங்கள் மனிதனுக்குக் கைகூடும். குருவிக்கு இவ்வியல்பில்லை. ஆனாலும் இந்த இரண்டுவித இயல்பும் கலந்து பெற்றால் நான் பரிபூரண இன்பத்தை அடைய மாட்டேனோ?

**பயிற்சி:**

1. பொருள் தருக: துளித்துளி, இலாவகம், க்ஷணம், செல், இச்சை, சுனை, நாயகம், சேவகம், கைகூடும், பரிபூரணம்.
2. "சின்னஞ் சிறுகுருவி போலே நீ திரிந்து பறந்துவா பாப்பா" என்னும் பாரதியார் பாடலடியின் விளக்கமே, இக் கட்டுரை என்பதை ஆராய்க.
3. பறவையாக வாழ பாரதியார் விரும்பியதேன்?
4. பாரதியார் சிட்டுக்குருவியை வர்ணித்திருப்பதுபோல நீர் விரும்பிய ஒன்றை வர்ணித்து ஒரு பந்தி எழுதுக.
5. மனிதர்களுக்கும் சிட்டுக்குருவிக்கும் பாரதியார் காணும் பேதம் யாது?

# 5. தமிழ் வளர்த்த தாமோதரன்

['ராவ்சாகிப்' S. வையாபுரிப்பிள்ளை அவர்கள் B. A., B. L.]

[சென்னைச் சர்வகலாசாலையில் (1936—1946) தமிழாராய்ச்சித்துறைத் தலைவராயிருந்தவர். 'லெக்சிக்கன்' தமிழ் அகராதி வெளியீட்டில் உழைத்தவர். சங்க இலக்கியம் (சமாஜ வெளியீடு), தொல்காப்பியப் பொருள் அதிகாரம் ஆதிய நூல்களின் பதிப்பாசிரியர். புறத்திரட்டு, இலக்கியச் சிந்தனை, தமிழ் மறுமலர்ச்சி, தமிழ்ச் சுடர்மணிகள் முதலிய நூல்களின் ஆசிரியர். தமது ஆங்கிலப் புலமையைத் தமிழாராய்ச்சித்துறையிற் புகுத்தியவர். பல புதிய ஆராய்ச்சிகளைத் தமிழ் நாட்டவர்க்கு நல்கியவர். இவரது ஜனன ஊர் திருநெல்வேலி.]

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலே நமது தமிழ்மொழி ஒரு நூதன சக்தியால் இயக்கப்பட்டது. மேலைநாட்டுப் புதிய நாகரீகமும், பயிற்சிப் பண்பும் (Culture) நமது நாட்டினரையும் தாக்கத் தொடங்கின. மேலைநாட்டு இலக்கிய நயங்களிலே கவர்ச்சி உடையராய் அதன் நலங்களைத் துய்த்து இன்புறத் தொடங்கினர். பெரும்பாலோர் அதன் புதுமை மோகத்தில் தம்மைப் பறிகொடுத்தும் விட்டனர். "புதியன கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்போர்?" என்று கம்பன் கூறியது பொய்படுமா? இவர்கள் அந்நிய மொழிகளைத் தாய்மொழி போலவே கருதினர்; தமது தாய் மொழியைப் புறக்கணித்தல் செய்தனர். ஆனால் ஒரு சிலர் இவர்களுக்கு விலக்காய் அமைந்து தாய்மொழியாகிய தமிழையும், அதன் இலக்கியங்களையும் போற்றி வரலாயினர். இச் சிலருள் ஒருவர் ராவ்பஹதூர் ஸ்ரீ. சி. வை. தரமோதரம்பிள்ளை அவர்கள்.

* * * *

யாழ்ப்பாணத்தில் கல்வி முடிந்து தாமோதரனார் தமிழ் நாட்டிற்கு வந்து, சென்னைப் பல்கலைக் கழகத்திற் பட்டங்கள் பெற்று, தமிழ் நாட்டிலே உயர்தர அலுவலில் அமர்ந்து, இறுதியிற் புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்து நீதிபதியாக விளங்கினர். இம் மகிழ்ச்சி நிரம்பிய வாழ்வில் அவர் தம்மை மறந்துவிடவில்லை. அவரது தமிழார்வம் அவர் உள்ளத்திலே மங்கா ஒளியாகத் திகழ்ந்து ஒருகாலைக் கொருகால் வளர்ந்து முடிவிற் பேரொளிப் பிழம்பாகச் சுடர்விட்டு எரிந்தது.



ஒரு நாட்டில் இலக்கிய வுணர்ச்சியும், பயிற்சிப் பண்பின் நலமும் பெருகவேண்டுமாயின், அந்நாட்டுப் புராதன இலக்கியங்களால்தான் அது கூடுவதாகும். புதிய இலக்கியங்களும் புராதன இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டுதான் பிறத்தல் இயலும். தேசியப் பற்றும் இப்பண்டை இலக்கியக் கல்வியினாலும், பயிற்சிப் பண்பினாலும் உண்டாவதேயாம். இதனை நன்குணர்ந்த பிள்ளையவர்கள், "தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானம் என்றிவை இல்லாதார் பெருமையும் ஒரு பெருமையா" என்று ஓரிடத்துக் கூறியிருக்கிறார்கள். இதனால் அவர்கள் உள்ளப்பாங்கு நன்கு விளங்குகிறது. நமது நாட்டில் மொழிப்பற்று மிகுதியாக உண்டு. ஆனால் இம் மொழிப்பற்றுச் சுயநலத்தோடு கலந்தது; விரிந்து இடம் பரந்த நெறியிற் செல்லாது, சுருங்கி இட்டிகையாகிய குறு நெறியிற் சென்றது. புராதன இலக்கிய நலன்களின் உணர்ச்சிச் சார்பாகத் தோன்றாது கேவலம் பெருமிதவுணர்ச்சியில் தோன்றி, அறைகூவிப் போரிடுதற்கு மாத்திரம் துணையாக அமைந்திருந்தது. இப் பொய்மையான மொழிப்பற்று வளர்ந்து, பெருக, உண்மையான மொழிப்பற்று ஒளித்து வந்தது. இதனிடையிற் பண்டையிலக்கியங்களும் பேணுவாரற்று அழிந்து வந்தன. ஏட்டுச் சுவடிகள் நீர்வாய்ப்பட்டும், தீவாய்ப்பட்டும், சிதல்வாய்ப்பட்டும் மறைந்தவண்ணமாய் இருந்தன. இந்நிலையைக் கண்டு பிள்ளையவர்களுடைய உள்ளங் கொதித்தது. கலித்தொகையின் பதிப்புரையிலே:

'ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது; கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது; ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி, எழுத்துக்களோவென்றால், வாலுந் தலையுமின்றி நாலு புறமும் பாணக் கலட்டை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது..........."

"பழைய சுவடிகள் யாவுங் கிலமாய் ஒன்றொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதிவைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதின்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்துவான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாரில்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாட்டவறினால் பின்பு தவம் புரிந்தாலும்

ஒருதரம் அழிந்த தமிழ் நூற்களை மீட்டல் அரிது. யானை வாய்ப்பட்ட விளம்பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்துமென்? ஓடன்றே கிட்டுவது! காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினும் கம்பையும், நாராசமுந்தான் மீளும். அரைக்காசுக் கழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வாராது. சங்கமரீஇய நூல்களுட் சில இப்போது தானும் கிடைப்பது சமுசயம் ...... எத்தனையோ திவ்ய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்!! அயலான் அழியக் காண்கினும் மனம் தளம்புகின்றதே! தமிழ் மாது நுந் தாயல்லவா? இவள் அழிய நமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்களா? தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானமென்று இவையில்லாதார் பெருமையும் ஒரு பெருமையா? இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக" என்று எழுதி அடயமிட்டார்கள். இச் சொற்கள் இன்றும் நமது உள்ளத்தைக் கொதித்தெழச் செய்யும் பேராற்றல் வாய்ந்தன. இவ்வாறு உளங்கொதித்திருந்த பிள்ளையவர்களுக்கு அமைதியுண்டா? இவர்கள் காலம் வரையில் ஒருவரும் எட்டிப் பாராத இப்பணியில் உழைத்துவரமுற்பட்டனர்.

**குறிப்புரை :**

நூதனம் – புதுமை; துய்த்து - அநுபவித்து; அலுவல் – தொழில்; புராதன - பழைய; பாங்கு – இயல்பு; இட்டிகை - இடுக்குவழி; குறுநெறி – சிறுவழி; கேவலம் – தனிமை; பெருமிதம்–இறுமாப்பு; சுவடி–பிரதி; அறை கூவி - போருக்கு அழைத்து; பேணுவார் – காப்பாற்றுவார்; சிதல் – கறையான்; பாணக்கலப்பை என்றது – இராமபாணப் பூச்சியை; கிலம் – அழிவு; துரைத்தனத்தார் – அரசாங்கத்தினர்; சரஸ்வதியின் மாமி – இலக்குமி; இலண்டம் – ஆனைமலம் (இலத்தி); கம்பை – ஓரம்: நாராசம் – எழுத்தாணி; மீளும் - மிஞ்சும்; வாளா – சும்மா (வீணே); அபயம் – ஓலம்; போற்றி - பாதுகாத்து; மதுர - இனிமையான; கிரந்தம் – நூல்.

**பயிற்சி :**

1. பொருள் கூறுக: இலண்டம், நாராசம், இட்டிகை, சிதல், புராதன.
2. ஆங்கில மொழியினால் தமிழுக்கு ஏற்பட்ட நஷ்டம் யாது?



3. "மகிழ்ச்சி நிரம்பிய வாழ்வில் அவர் தம்மை மறந்துவிடவில்லை" என்பதை விளக்குக.
4. ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டிற்கு ஆதாரமாய் இருப்பன யாவை?
5. 'இக்காலத்து மொழிப்பற்று எத்தகையது' என இக் கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது?
6. சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் நூல் பதிப்பித்த காலத்து ஏட்டுச் சுவடிகளின் நிலை எவ்வாறிருந்தது? அவ்வாறான காரணங்கள் யாவை?
7. "சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்துவான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை" என்பதன் பொருள் யாது?

**இலக்கணம் :**

1. பிரித்தெழுதுக: மதாபிமானம், பாஷாபிமானம், தமிழார்வம், விளம்பழம், காலாந்தரம்.
2. இப்பாடத்துள் வந்த வடமொழிச் சொற்களை எழுதி அப்பொருள் தரும் தமிழ்ச் சொற்களை எழுதுக.
3. பின் வரும் சொற்களை அமைத்து வசனம் ஆக்குக: புறக்கணித்தல், விலக்கு, போற்றி, கேவலம், துரைத்தனத்தார்.
4. தொடர்மொழி இலக்கணம் கூறுக: பாஷாபிமானம், விளம்பழம், தவம்புரிந்தார்.
8. இலக்கணம் கூறுக: சிந்திப்பீர்களாக, கொதித்து, அமைதி, அழிய.

**கட்டுரை :**

'தமிழின் அக்கால நிலையும் பிள்ளையவர்களின் மன நிலையும்' என்பதுபற்றி ஒரு கட்டுரை வரைக.

# 6. சத்தியவேதம் [புதிய உடன்படிக்கை]

## மத்தேயு சுவிசேஷம்

### யேசுநாதரின் மலைப்பிரசங்கம்

ஆவியில் எளிமையுள்ளவர்கள் வாழ்வுடையவர்கள்: பரம இராச்சியம் அவர்களுக்கே உரியது. — துக்கப்படுகிறவர்கள் வாழ்வுடையவர்கள். அவர்கள் ஆறுதலை அடைவார்கள். — தாழ்ந்த சிந்தையுள்ளவர்கள் வாழ்வுடையவர்கள்: அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். — நீதியின்மேல் பசிதாகமுடையவர்கள் வாழ்வுடையவர்கள்; அவர்கள் திருப்தி அடைவார்கள். — இரக்கமுள்ளவர்கள் வாழ்வுடையவர்கள்: அவர்கள் இரக்கத்தைப் பெறுவார்கள். — சுத்தமான இருதயமுள்ளவர்கள் வாழ்வுடையவர்கள்: அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். — சமாதானத்தை நடப்பிக்கிறவர்கள் வாழ்வுடையவர்கள்: அவர்கள் தேவனுடைய புத்திரரெனப்படுவார்கள் — நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் வாழ்வுடையவர்கள்: பரம இராச்சியம் அவர்களுக்கே உரியது. — என்னிமித்தம் மனுஷர் உங்களை நிந்தித்து, துன்பப்படுத்தி, சகலவித தீமொழிகளையும் உங்கள்மேல் பொய்யாய்ச் சொன்னார்களானால் நீங்கள் வாழ்வுடையவர்கள். — சந்தோஷப்பட்டு மிகவுங் களிகூருங்கள்: பரமண்டலத்தில் உங்களுக்கு மிகுந்த பலன் கிடைக்கும்: பூருவகாலத்திலுள்ள தீர்க்கதரிசிகளையும் இவ்விதமாய்த் துன்பப்படுத்தினார்கள்.

2. நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்: உப்பானது சாரமற்றுப்போனால், திரும்ப யாதினால் சாரமாக்கப்படும்: இனி அது வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமேயன்றி, வேறொன்றுக்கு முதவாது. — நீங்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள். மலையின் மேலுள்ள நகரம் மறைந்திருக்கமாட்டாது.— மனுஷர் விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வையாமல் தண்டின்மேல் வைப்பார்கள்; அதனால் அது வீட்டிலுள்ள யாவருக்கும் ஒளி கொடுக்கும். அப்படியே மனுஷர், உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரமண்டலத்திலுள்ள உங்கள் பிதாவின் மகிமை பிரகாசிக்கப்பண்ணும் பொருட்டு, உங்கள் ஒளி அவர்களுக்குமுன் பிரகாசிக்கக்கடவது.



3. நியாயப் பிரமாணத்தையும, தீர்க்க தரிசன வாக்கியங்களையும் ஒழிப்பதற்கு நான் வந்தேனென்று நீங்கள் நினைக்க வேண்டாம்: அவைகளை ஒழிக்கிறதற்கல்ல நிறைவேற்றுவதற்கே வந்தேன். — வேதப்பிரமாணம் முழுவதும் நிறைவேறுவதேயன்றி வானமும் பூமியும் ஒழியும் வரைக்கும் அதில் ஒரு சிறு எழுத்தாயினும், ஒரு எழுத்தின் உறுப்பாயினும் ஒழிந்துபோவதில்லையென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன். — ஆதலால், இந்தக் கட்டளைகளில் மிகவும் சிறிய ஒரு கட்டளையையாயினும் மீறி, அவ்வண்ணமே மனுஷருக்குபதேசிக்கிறவனெவனோ அவன் பரம இராச்சியத்தில் மிகவுஞ் சிறியவனென்றெண்ணப்படுவான்; அவைகளின்படி செய்தும், உபதேசித்தும் வருகிறவனோ, பரம இராச்சியத்தில் பெரியவனென்றெண்ணப்படுவான். — வேத பாரகரும், பரிசேயருமானவர்களின் நீதியிலும் உங்கள் நீதி அதியுத்தமமல்லாதிருந்தால், நீங்கள் பரம இராச்சயத்தில் ஒரு பொழுதும் பிரவேசிக்க மாட்டீர்களென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

4. கொலை செய்யாயாகவென்றும், கொலை செய்பவன் நியாயத் தீர்ப்புக்குப் பாத்திரனென்றும் பூருவத்தாருக்குச் சொல்லிய வாக்கைக் கேள்விப்பட்டீர்கள். — நியாயமில்லாமல் தன் சகோதரன்மேல் கோபங் கொள்பவன் எவனோ, அவன் நியாயத் தீர்ப்புக்குப் பாத்திரனாவான்: தன் சகோதரனைப் புத்தியீனன் என்பவன் எவனோ, அவன் பெரிய சங்கத் தீர்ப்புக்குப் பாத்திரனாவன்: அவனை மூடன் என்பவன் எவனோ, அவன் நரக அக்கினிக்குப் பாத்திரனாவான் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். — ஆதலால் நீ வேதிகையினிடத்தில் உன் காணிக்கையைக் கொண்டுவந்த சமையத்தில், உன்மேல் உன் சகோதரனுக்கு விரோதமுண்டென்று அங்கே நினைவு கொள்வாயாகில், அந்த வேதிகைக்குமுன் உன் காணிக்கையை வைத்துவிட்டு, போய், முன்பு உன் சகோதரனுடனே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்துவாயாக.— உன் எதிராளி உன்னை நியாயாதிபதியிடத்தில் ஒப்பியாமலும் அந்த நியாயாதிபதி உன்னைத் தலையாரியிடத்தில் ஒப்பியாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலிருக்கும்படி, நீ சீக்கிரமாய் உன் எதிராளியுடனே வழியிலிருக்கிறபொழுது அவனுடன் இணங்கிக் கொள்வாயாக. — இல்லாவிட்டால் நீ ஒரு

காசாகிலும் குறையாமல் முழுமையும் செலுத்தும் வரைக்கும், அவ்விடத்தை விட்டுத் திரும்பிவர மாட்டாயென்று மெய்யாக உனக்குச் சொல்லுகிறேன்.

*   *   *   *

5. பொய்யாணை இடாதிருப்பாயாகவென்றும், உன் ஆணைகளைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாகவென்றும் பூருவத்தாருக்குச் சொல்லப்பட்டதென்று கேள்விப்பட்டீர்கள். — நானே உங்களுக்கு இவ்வாக்குச் சொல்லுகிறேன், நீங்கள் எவ்விதத்திலும் சத்தியம் பண்ணலாகாது; வானத்தைக் கொண்டு சத்தியம் பண்ணலாகாது; அது தேவனுடைய சிங்காசனம்; பூமியைக்கொண்டு சத்தியம் பண்ணலாகாது; அது அவருடைய பாதபீடம். — யெருஷலேமைக்கொண்டு சத்தியம் பண்ணலாகாது; அது மகா இராசாவின் நகரம். — உன் சிரசைக்கொண்டு சத்தியம் பண்ணலாகாது; அதன் மயிரில் ஒன்றையாவது வெண்மையாக்கவாயினும், கருமையாக்கவாயினும் உனக்கு வல்லமையில்லை.—உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்; இவைகளுக்கு அதிகமானது தீமையிலிருந்து விளைகின்றது.

6. கண்ணுக்குப் பிரதியாகக் கண்ணும், பல்லுக்குப் பிரதியாகப் பல்லுமென்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்: நானோ உங்களுக்கு இவ்வாக்குச் சொல்லுகிறேன், தீமை செய்தவனுடனே நீங்கள் எதிர்த்து நிற்கலாகாது: ஒருவன் உன் வலக்கன்னத்தில் அடித்தால், மறு கன்னத்தையும் அவனுக்குத் திருப்பிச் சாய். ஒருவன் உன் வஸ்திரத்தை எடுக்க உன்னுடனே வழக்காடினால், அவனுக்கு உன் மேல் அங்கியையும் விட்டுவிடு. — ஒருவன் உன்னை ஒரு நாழிகைவழி வரும்படி வலாற்காரம் பண்ணினால், அவனுடனே இரு நாழிகை வழி நடந்துபோ. — உன்னிடத்தில் வேண்டிக் கொள்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்குப் பராமுகம் பண்ணாதே.

7. நீ பிறனை நேசித்து, உன் சத்துருவைப் பகைக்கக்கடவாயென்று சொல்லிய வாக்கைக் கேள்விப்பட்டீர்கள். — நானோ உங்களுக்கு இவ்வாக்கைச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களை நேசியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்



வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்தித்து, உங்களைத் துன்பப்படுத்துகிறவர்கள் நிமித்தம் வேண்டுதல் பண்ணுங்கள். — அதினால் நீங்கள் பரமண்டலத்தில் உள்ள உங்கள் பிதாவுக்குப் பிள்ளைகளாவீர்கள்; அவர் தீயவர்கள் மேலும், நல்லவர்கள் மேலும் தமது சூரியன் உதிக்கவும், நீதியுள்ளவர்கள் மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும் மழை பெய்யவும் பண்ணுகிறார். — உங்களை நேசிக்கிறவர்களை மாத்திரம் நீங்கள் நேசிப்பீர்களாகில், உங்களுக்கென்ன பலன் வரும்; ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்களல்லவா. — உங்கள் சகோதரரை மாத்திரம் நீங்கள் வாழ்த்துவீர்களாகில், நீங்கள் செய்கிற விசேஷமென்ன, ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்களல்லவா. — ஆதலால் பரமண்டலத்திலுள்ள உங்கள் பிதா பூரண சற்குணமுள்ளவராய் இருக்கிறதுபோல், நீங்களும் பூரண சற்குணமுள்ளவர்களாவீர்களாக.

குறிப்பு:

1. ஆவி – உயிர்; எளிமை – தாழ்மை; ஆவியில் எளிமையாவது - தாழ்மைத் தன்மை உயிருடன் கலக்கப் பெற்றவர்கள்; பரம இராச்சியம் – மோக்ஷ சாம்பிராச்சியம்; சுதந்தரித்தல் – உரிமையாக்குதல்; நீதியின்மேல் பசி தாகம் உடைமையாவது - நீதியை உண்ணும் பொருளாகவும், பருகும் பொருளாகவும் கருதுதல்; திருப்தி – நிறைவு; நிந்தித்தல் - இழிவுபடுத்தல்; களி – மகிழ்ச்சி; கூர்தல் – மிகுதல்; (கூர் – உரிச்சொல்) பூருவகாலம் – பழையகாலம்; தீர்க்கதரிசி – எதிர்கால நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள்.

2. உப்பு – உப்புப்போல பயனுடைமை; நகரம் – பட்டணம்; மரக்கால் – தானியம் அளக்கும் கருவி; தண்டு – விளக்கு வைக்கும் உயரமான பீடம்; கிரியை - செயல்.

3. நியாயப்பிரமாணம் – நியாயமாகிய கட்டளை; வாக்கியம் – வசனம்; வேதபாரகர் - வேதத்தைத் தாங்குவோர்; பரிசேயர் – பரிசுத்தமானவர்கள்; பிரவேசிக்க – உட்புக.

4. பாத்திரன் – தகுதியுள்ளவன்; நரக அக்கினி – நரகமாகிய நெருப்பு; (பண்புத்தொகை), வேதிகை - பலிபீடம்; காணிக்கை – தட்சணை; விரோதம் – மாறுபாடு; ஒப்புரவு - சமாதானம்; தலையாரி – காவற்காரன்.

6. ஆணை – சத்தியம்; ஆசனம் – இருப்பிடம்; சிங்காசனம் – அரச இருப்பிடம்; வல்லமை – சக்தி, பெலம்.

6. கண்ணுக்குக்கண், பல்லுக்குப்பல் என்றது பழிக்குப்பழி செய்தலை: அங்கி – உடை; நாழிகை 24 நிமிஷம்; பராமுகம் – அசட்டை; வலாற்காரம் – கட்டாயம்.

7. நேசித்தல் – அன்பு கூர்தல்; சத்துரு – பகைவன்; சபித்தல் – சாபமிடல்: நிமித்தம் – பொருட்டு; (4-ம் வேற்றுமைச் சொல்லுருபு). வேண்டுதல் – கடவுளை வணங்குதல்; ஆயக்காரர் – வரிபெறுவோர்; சற்குணம் – நல்லகுணம்; பூரணம் – முழுமை.

**பயிற்சி**

1. பொருள் தருக: களிகூர்தல், தீர்க்கதரிசி, வேதபாரகர், பரிசேயர், வேதிகை, காணிக்கை, தலையாரி, அங்கி, ஆயக்காரர், விரோதம்.
2. மோக்ஷ இராச்சியத்துக்கு உரிமையுள்ளார் யார்? யார்?
3. 'உப்பு' இப்பாடத்தில் எதற்கு உவமானமாயிற்று? பொதுத் தன்மை யாது?
4. 'தீமைக்கு நன்மை செய்யவேண்டும்' என்பதை விளக்க இப்பாடத்துள் வந்த சில வசனங்கள் எழுதுக.
5. எவன் பரம இராச்சியத்தில் பெரியவனாக மதிக்கப்படுவான்? விளக்குக.
6. பாவமான பத்துச் செயல்கள் கூறுக.
7. ஆணையிடுதலைப்பற்றிக் கூறப்படுவனவற்றைச் சுருக்கி எழுதுக.
8. 'பகைவனுக் கருள்வாய்', என்னும் சொற்றொடர்ப் பொருள் இப்பாடத்தில் அமைந்த பகுதியைக் கூறுக.
9. கடவுளுடைய புத்திரர் யார்?
10. பழமையை அழிக்க நமக்கு உரிமையில்லை என்பதற்கு இப்பாடத்திலிருந்து மேற்கோள் காட்டுக.

**இலக்கணம்**

1. எதிர்ச்சொல் எழுதுக: தீயவர்கள், நீதி, சற்குணம், தீமொழி, வாழ்வு, திருப்தி, நற்கிரியை, மூடன், பாத்திரன்.
2. செயப்பாட்டு வினையாக்குக:
   i. மனுஷர் விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வையாமல் தண்டின்மேல் வைப்பார்கள்.
   ii. ஒருவன் உன் வலக்கன்னத்தில் அடித்தால், மறுகன்னத்தையும் அவனுக்குத் திருப்பிச் சாய்.
3. அயற்கூற்று வாக்கியங்களாக்கு:
   i. நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்.
   ii. ஒருவன் உன் வலக்கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தையும் அவனுக்குத் திருப்பிச் சாய்.
   iii. உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.

**கட்டுரை**

'மனித குணங்கள்' எனபதுபற்றி ஒரு கட்டுரை வரைக.

# 7. காவலனும் கண்ணீரும் *

[திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் B. A., B. L.]

[இவர் திருநெல்வேலியில் பிறந்தவர். அண்ணாமலைச் சர்வகலாசாலையிலும், சென்னைச் சர்வகலாசாலையிலும் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராகப் பதவி வகிக்கின்றார்.

இவர், திருவள்ளுவர் நூல் நயம், சிலப்பதிகார நூல் நயம், வீரமாநகர் முதலிய நூல்களின் ஆசிரியர். இவரால் எழுதப்பட்ட 'ஊரும் பேரும்' என்னும் ஆராய்ச்சி நூலுக்குச் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் பரிசளித்துக் கௌரவித்தனர். இவரது வசனநடை, ஒருவகையில், செய்யுள் நடையைத் தழுவியது. படிப்போர்க்கு மிகவும் சுவை பயக்கும் இயல்புடையது.]

அரசியலைக் குறித்துத் திருவள்ளுவர் கூறும் அறிவுரை எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் ஒத்ததாகும். இவ்வுலகில் ஆசை பிடித்த அரசர் எந்நாளும் உண்டு. "ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல்லாம் கட்டி ஆளினும் கடல் மீதிலே ஆணை செலவே நினைவர்" அதற்குமேல் ஆகாயத்தையும் கட்டியாள ஆசைப்படுவர். இது படைச்செருக்குற்ற மன்னர் இயற்கை.

இவ்வாறு ஆசைவெறி பிடித்தலையும் அரசர்க்கு, திருவள்ளுவர் ஒன்று கூறுகின்றார். நெறியல்லா நெறிச்சென்று, பிறர் கதறக் கதறக் கைப்பற்றிய நாடும் செல்வமும் வந்த வழியே போய்விடும் என்பது அவர் வாக்கு.

'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்" என்ற அருமைத் திருக்குறள், ஓர் அரசியல் மந்திரம். அழுகையில் வந்தது, அழுகையிற் போகும் என்பது வள்ளுவர் வாய்மொழி. பிறர் வடிக்கும் கண்ணீரில் ஓர் அரசன் பெற்ற நாடு, அவன் வடிக்கும் கண்ணீரில் அகன்று போய்விடும் என்பது அதன் கருத்து. இன்னும் நாடாளும் அரசன் தன் குடிகளின் கருத்தைத் தழுவியே ஆளவேண்டும்; குடிகளின் இணக்கத்தைப் பெற்ற

* 'திருவள்ளுவர் நினைவு மல'ரிலிருந்து எடுக்கப்பட்டது.

அரசுதான் நெடுங்காலம் நிற்கும் என்பது திருவள்ளுவர் கொள்கை.

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."

என்பது அவர் வாக்கு. இதற்கு மாறாக நாட்டில் வாழும் குடிகள் அரசன் கொடுமையால் அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர் வடிப்பார்களேயானால் அரசன் நிலை குலைந்து அழிவான். குடிகள் வடிக்கும் கண்ணீர் கூரிய வாளாக நின்று அரசனது ஆக்கத்தை அறுக்கும்; செல்வத்தைத் தேய்க்கும்.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை."

என்றார் திருவள்ளுவர். இதற்குச் சான்றாகச் சிலப்பதிகார ஆசிரியர் கண்ணகி வடித்த கண்ணீரைக் காட்டுகின்றார். மதுரைமாநகரில் கணவனாகிய கோவலன் கொலையுண்டு இறந்தான். குற்றம் ஒன்றும் செய்யாத கோவலனைப் பாண்டிய மன்னன் அநியாயமாகக் கொன்றானே என்று கண்ணகி கொதித்தாள்; துடித்தாள்; கண்ணீர் வடித்தாள். இவ்வாறு அழுது அலறிய கண்ணகியைக் கண்ட மதுரைமாநகரத்தார் அஞ்சினார்கள். அவள் கொண்ட கோலம் நெஞ்சத்தை உருக்கியது. அவர்கள் மனம் பட்டபாட்டைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது:

"கள்வனோ அல்லன் கணவன், என்காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டால் கொன்றாரே" என்று
அல்லல்உற்று ஆற்றாது அழுவாளைக் கண்டேங்கி
மல்லல்மூதூர் மதுரையார் எல்லோரும் தாம்மயங்கி
"களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது."

என்று வருந்தினார்கள். இத்தகைய கண்ணகி பாண்டியன் முன்னே வழக்காடப் போந்தாள். மாசடைந்த மேனியோடு ஒற்றைக் காற்சிலம்பைக் கையிலேந்தி, தாரை தாரையாகக் கண்ணீர் வடித்துக்கொண்டு பாண்டியன் முன்னே சென்று நின்றாள். இக்கோலத்தைச் சிலப்பதிகாரம் ஒரு சித்திரமாக எழுதிக் காட்டுகின்றது.



"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்,"

என்றார் சிலப்பதிகார ஆசிரியர். கண்ணகியின் கண்களினின்று வடிந்த கண்ணீர், பாண்டியன் ஆவியை அறுக்கும் படையாயிற்று. அவன் ஆயுளை முடித்தது. அந்நிலையில் அரியாசனத்தினின்றும் மன்னவன் மயங்கி விழுந்தான்; உயிர் துறந்தான். இவ்வாறு உயிர் கொடுத்து நீதியை நிலை நிறுத்திய பாண்டியனை வாழ்த்தப் போந்த இடத்தும், கண்ணகி வடித்த கண்ணீர் குறிக்கப்படுகின்றது.

"தொல்லைவினையால் துயர்உழந்தாள் கண்ணின் நீர்
கொல்ல உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ"

என்று நல்லார் வாழ்த்தினார்கள். ஆகவே குடிகள் அழுத கண்ணீர் அரசனது ஆக்கத்தை அறுக்கும் என்று திருவள்ளுவர் அருளிய வாய்மை கண்ணகியின் சரித்திரத்தால் விளங்குகின்றது.

**குறிப்புரை :**

அகிலம் - பூமி; செருக்கு - இறுமாப்பு; நெறி - முறை, வழி; கதற - அழ; வாய்மொழி - வாயிலிருந்து வந்த உண்மை வார்த்தை; இணக்கம் - அன்பு; குடிதழீஇ - குடிமக்களைத் தழுவிக்கொண்டு; கோல் - அரசு; ஓச்சும் - செலுத்தும்; மன்னன் அடி - மன்னனது அடி; தழீஇ - தழுவி; 'உலகு' ஆகுபெயர். ஆக்கம் - செல்வம்; அல்லற்பட்டு - துன்பப்பட்டு; ஆற்றாது - பொறுக்கமாட்டாது; செல்வம் - அரசச் செல்வம்; படை - ஆயுதம்.

கொள்ளும் விலைப்பொருட்டால் கொன்றாரே - எனது கணவன் காற்சிலம்பைப் பொருள் கொடுத்துப் பெறமாட்டாது கள்வனெனப் பெயர்சூட்டிக் கொன்று பெற்றனரே? அல்லல் - துன்பம்; மல்லல் - வளப்பம்; மூதூர் = முதுமை + ஊர் = பழையதாகிய ஊர்; களையாத - நீக்கமுடியாத; காரிகை - பெண்; கிட்டி - கிடைத்து; மாசு - அழுக்கு; தாரை - ஒழுக்கு; பொடி - தூசி; குழல் - கூந்தல்; அரியாசனம் - சிங்காசனம்; தொல்லை - பழைய; உயிர் கொடுத்த - உயிர்விட்ட.

**பயிற்சி :**

1. அரசர் படையினால் மற்றைய நாடுகளை வெல்லும் வெற்றி நிலையற்றது; எங்ஙனம்?
2. 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்' என்னும் பழமொழிக் கிணங்கும் திருக்குறள் எது? அதற்குப் பொருந்தும் சம்பவம் எது?

3. மன்னன் எவ்விதம் குடிமக்களைப் பாதுகாத்தல் வேண்டும்.

4. கருத்தெழுதுக: மூதூர், மல்லல், கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே, காரிகை.

**இலக்கணம்**

1. பிரித்தெழுதுக: மூதூர், கருங்குழல், அரியாசனம்.
2. உதாரணம் தருக: அன்மொழித்தொகை, ஆகுபெயர், அளபெடை, ஆறும்வேற்றுமைத்தொகை.
3. இலக்கணம் கூறுக: தமீஇ, போம், தேய்க்கும்.
4. 'நல்ல அரசு' என்னும் ஒரு கட்டுரை வரைக.

---

## 8. நோபெல் பரிசு *

[பெ. நா. அப்புஸ்வாமி B. A., B .L.]

[ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய முப்பாஷைகளிலும் ஆற்றல் பெற்றவர். நியாயவாதத் தொழிலை மேற்கொண்டவர். விஞ்ஞானக் கலையைத் தமிழுக்கு உதவிய பேருபகாரி. விஞ்ஞானக் கட்டுரைகளும், பல இலக்கியக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். 'மின்சாரத்தின் விந்தை' என்னும் இவரது விஞ்ஞான நூலுக்குச் சென்னைச் சர்வகலாசாலையார் ஆயிரம் ரூபாய் பரிசளித்துக் கௌரவித்தனர். 'அற்புத உலகம்' என்னும் நூலும் இவ்வாசிரியரால் எழுதப்பட்ட விஞ்ஞான நூலாகும்.

'வானொலியும் ஒளிபரப்பும்' என்னும் நூல் இவ்வாசியராலும் ஸ்ரீ பெ. மாணிக்கம் என்பவராலும் எழுதப்பட்ட விஞ்ஞான நூல். இந்நூலும் முதற் பரிசுபெற்ற நூலாகும். இவரது வசன நடை, சிறந்த தனி இயல்புடையது.]

"இன்றைக்கு என் பேச்சு எப்படி இருந்தது?" "நேற்று நான் இராகம் பாடினது எப்படி!" "அன்று நான் பந்து ஆடினது எப்படி?" என்றெல்லாம் பிரசங்கிகளும் பாடகர்களும் பந்தாடுபவர்களும் ஆவலோடு கேட்கிறார்கள். "பேஷ்! வெகு நன்றாயிருந்தது." என்று சொல்லும் பதிலானது அவர்கள் காதில் தேவாமிர்தம்போல் படுகிறது. அப்படிப் புகழ்பவன் அறிவாளியா யிருக்கவேண்டும் என்பதில்லை. மக்களுடைய மனமானது பிறருடைய நன் மதிப்பை அவ்வளவு நாடுகிறது;

* அகில இந்திய 'ரேடியோ' நிலையத்தாரின் அனுமதி பெற்றது.



சாமானியன் ஒருவனுடைய வெறும் பேச்சுக்கூட மனத்துக்கு அத்தனை ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்கிறது.

சாமானியர்களுடைய வெறும் பேச்சே இத்தனை பாராட்டப்படுமானால், சிறந்த அறிவாளிகள் பலர் ஒன்றாகக்கூடி, "உலகம் அனைத்திலும் ஓர் ஆண்டு முழுவதிலும் செய்த செயல்கள் யாவற்றிலும் இன்னார் செய்த செயல்தான் தலை சிறந்தது" என்று ஏகோபித்து முடிவு செய்து, நற்சாட்சிப் பத்திரம் ஒன்றையும், பொற்பதக்கம் ஒன்றையும் சுமார் லக்ஷ ரூபாய் பெறுமான பொற்குவை ஒன்றையும் பரிசாக அளித்தால், எவனுடைய மனந்தான் குளிர்வடையாது? எவன்தான் ஊக்கமும் உற்சாகமும் பெறமாட்டான்?

இவ்வாறு ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு, உலகத்தார் அனைவராலும் 'எல்லாப் பரிசுகளிலும் தலை சிறந்தது' என்று கொண்டாடப்படும் பரிசு நோபெல் பரிசு எனப்படுவது. இது ஸ்வீடின் நாட்டினரான ஆல்பிரட் பெர்ன் ஹாட் நோபெல் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது.

இவருடைய பாட்டனார் இராணுவத்தில் இரண வைத்தியர். இவருடைய தகப்பனார் எம்மானுவெல்; விஞ்ஞான ஆசிரியர். இவர் வெடி மருந்துகளையும் கடலினுள்ளே வெடிக்கும் கடற் கண்ணிகளையும் இயற்றியும், ஆராய்ந்தும் வந்தார். உயிரைக் கொள்ளை கொள்ளும் இந்தத் தொழிலில் ஈடுபட்ட எம்மானுவெல் உயிருக்கு உதவி செய்யும் காரியத்திலும் ஈடுபட்டு இரண வைத்திய ஆயுதங்களையும், நோயாளிக்கு உதவும் 'இரப்பர்'த் தலையணைகளையும் இயற்றி வந்தார்.

வெடிமருந்தைச் செய்வதே அபாயகரமானது. அதோடு அதை யொட்டிய ஆராய்ச்சியும் சேர்ந்துவிட்டால் கேட்பானேன்? எம்மானுவெலுடைய தொழிற் சாலையிலே ஒருமுறை பெரிய வெடிவிபத்து நேர்ந்தது. தொழிற்சாலை தூள்தூளாகி விட்டது. அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளுக்கும் பலத்த சேதம். அதனால் ஊராருடைய கோபத்துக்கு உள்ளான எம்மானுவெல் அயல்நாடு செல்லவேண்டியதாயிற்று.

எம்மானுவெல் ருஷியாவுக்குச் சென்று அங்கே கிட்டத்தட்ட இருபது வருஷகாலம் தம்முடைய தொழிலை நடத்தி

வந்து பிறகு தம் ஊருக்குத் திரும்பினார். ருஷியாவிலே தங்கிய அவர் மகன் லுட்விக் என்பவன்தான் 'பாக்கு' என்னுமிடத்திலுள்ள மண்ணெண்ணெய்ச் சுரங்கங்களைக் கண்டு பிடித்தவன்.

எம்மானுவெல் தம் சொந்த நாட்டை அடைந்த பிறகும் முன்போலத் தம்முடைய தொழிலையே நடாத்தி வந்தார். மறுபடியும் ஒரு பெரிய வெடிவிபத்து உண்டாயிற்று. அதில் எம்மானுவெலுடைய மகன் ஒருவன் இறந்துபோனான். அதிர்ச்சியாலும், பொருள் நஷ்டத்தாலும் புத்திரசோகத்தாலும் மனமுடைந்த எம்மானுவெலும் அவருடைய மனைவியும் அப்படியே படுத்த படுக்கையாய்ப் போய்விட்டார்கள். அதன் பிறகு அவர்களுடைய மகனான ஆல்பிரட் பெர்ன் ஹாட்நோபெல் அந்தத் தொழிலை மேற்கொண்டு நடாத்தி வந்தார். இவர் தாம் 'நோபெல்' பரிசை ஏற்படுத்தியவர்.

ஆல்பிரட் பெர்ன் ஹாட் நோபெல் 1838-ம் வருஷத்திலே 'ஸ்டாக்ஹோம்' நகரத்திலே பிறந்தார். ஆயுள் முழுவதும் அடிக்கடி தலை நோவினால் வருந்துவார்.

சிறுவயது முதலே இவருக்கு இரசாயனம், பௌதிகம், எந்திரம் முதலிய விஞ்ஞான சாஸ்திரங்களில் மிக அவா இருந்தது. இவர் அமெரிக்காவுக்குச் சென்று மிகவும் பிரக்கியாதி பெற்றிருந்த எந்திர சாஸ்திர நிபுணராகிய எரிக்ஸன் என்பவரோடு தங்கி, அவரிடம் வேலை கற்றுக்கொண்டார். அப்போது எரிக்ஸன் பல தடவைகளிற் சோதனைகளை நடத்தப் போதிய பணம் இல்லாமற் கஷ்டப்படுவதைக் கண்டு, தாம் பணக்காரரானால் விஞ்ஞானிகளுக்கு உதவும்படியாகப் பெரிய நிதி ஒன்றை அளிக்கவேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டார். பிற்காலத்தில் இதை நிறை வேற்றுவதற்காகச் செய்த ஏற்பாடு தான் 'நோபெல்' பரிசு.

நாற்பது ஐம்பது வருஷங்களுக்குமுன் 'நைட்ரோக்ளிஸெரீன்' என்பது தான் மிகவும் சிறந்த வெடிமருந்து. ஆனால் எதிர் பாராத வேளைகளில் வெடித்துப் பெருத்த உயிர்ச்சேதமும் பொருள் நஷ்டமும் உண்டாக்கி வந்தது. வெடிக்கும் சக்தியில் மிகச் சிறந்ததாயும், பயமின்றிக் கையாளக் கூடியதாயும்



உள்ள வெடிமருந்தைக் கண்டு பிடிக்கவேண்டுமென்று நோபெல் மிகவும் தீவிரமாய் முயன்று வந்தார்.

இவ்வாறு முயன்று வருகையில் தற்செயலாக நேர்ந்த சம்பவம் ஒன்று இவருக்கு உதவி செய்தது. பீப்பாய் ஒன்றிலிருந்து இலேசாக ஒழுகிய 'நைட்ரோக்ளிஸெரீன்' பீப்பாயைச் சுற்றி அணைத்துக் கொட்டியிருந்த மணலோடு கலந்து கட்டியாக இருந்தது. இதைச் சோதித்தபோது தாம் நாடிய குணங்கள் இதற்கு இருப்பதை நோபெல் தெரிந்துகொண்டார். பிறகு முக்கால் பங்கு 'நைட்ரோக்ளிஸெரீனையும்' கால் பங்கு ஒருவகை மண்ணையும் கலந்து சிறந்த வெடிமருந்தை இயற்றினார். இதுதான் இக்காலத்தில் 'டைனமைட்' என்று வழங்கும் வெடிமருந்து.

பீரங்கி, துப்பாக்கி, கடற்கண்ணி முதலியவை மூலமாக இது செய்துள்ள கெடுதியும் கணக்கற்றது. எனினும், இதனால் உலகத்துக்கு விளைந்த நன்மைகளும் கணக்கில. நமது நாகரிகமே இதனாற் புதிய வளர்ச்சியை அடைந்ததென்று சொல்லலாம். தூரதேசங்களைப் பிணைக்கும் 'ரெயில்' பாதைகளைப் போடுவதற்கும், வழியே குறுக்கிடும் மலைகளைத் தகர்த்தெறிவதற்கும், பூமியைக் குடைந்து அதன் குடருக்குள்ளே ஒளித்துப் பயனற்றுக் கிடக்கும் செல்வங்களைக் கொண்டு வருவதற்கும், கடல்களை இருகூறாக்கும் நிலத்தைப் பெயர்த்தெறிந்து சமுத்திரங்களை ஒன்றாக இணைப்பதற்கும் உதவுகிறது. கிணறு வெட்டவும், வாய்க்கால் வெட்டவும், மரம் வைக்கக் குழி தோண்டவும் உதவுகிறது. நதிகளைத் தடுத்து, அணைகளைக் கட்டிப் பாலைவனத்தைச் செழிக்கச் செய்வதற்கும், கடலில் துறைமுகங்களைக் கட்டி வர்த்தகத்தை வளர்ப்பதற்கும், பெரிய பாலங்களைக் கட்டி நாட்டை ஒன்றாக இணைப்பதற்கும் வேண்டிய பெரும் பாறைகளை இது பெயர்த்துத் தருகிறது.

ராக்ஷஸ சத்தி வாய்ந்த இந்த மருந்துப் பொடியினின்று நோபெல் லக்ஷம் லக்ஷமாகப் பணம் சம்பாதித்தார், ஆயினும் இவர் சந்தோஷமான சுகவாழ்வு வாழவில்லை. தாம் வாலிபத்தில் காதலித்த பெண் இறந்து விட்டபடியால், இவர் மணம் செய்துகொள்ளாது நோயுற்ற உடலோடு, தன்னந்தனியாகவே வாழ்ந்து வந்தார். தீராத் தலைநோவோடு வருந்திய நிலையிலும்

கூட இவர் துர்நாற்றம் வீசும் சோதனைச்சாலையிலே வேலை செய்வார்.

இவரை அழகானவரென்று சொல்லமுடியாது; குள்ள வடிவம் உடையவர்; இவருக்குப் பல பாஷைகள் தெரியும்; ரஸமாய்ப் பேசுவார்; நன்றாய்க் கதை சொல்லுவார். சற்றே அவநம்பிக்கையுள்ள சுபாவம். 1896-ம் வருஷம் டிசம்பர் மாதம் 10-ம் தேதியன்று தம்முடைய பாரிஸ் நகரத்துத் தொழிற்சாலையில் திடீரென்று இறந்துபோனார். சுமார் இருபது லக்ஷம் பவுண் மதிப்புள்ள தம்முடைய சொத்து முழுவதையும் தர்மத்துக்கு எழுதி வைத்தார்.

தம்முடைய சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை வருஷந்தோறும் ஐந்து பரிசுகளாக வழங்கவேண்டுமென்று இவருடைய மரணசாஸனத்திற் கண்டிருந்தது. இதன்படி, பரிசளிக்கப்படும் வருஷத்துக்கு முந்திய வருஷத்திலே பௌதிகம், இரசாயனம், வைத்தியம், இலக்கியம், சமாதானம் என்னும் ஐந்து துறைகளுள் ஒவ்வொன்றிலும் மிகச் சிறந்த செயலைச் செய்த மேதாவியைத் தேர்ந்தெடுத்து, அவருக்குப் பரிசும், பொற்பதக்கமும், நற்சாக்ஷிப் பத்திரமும் அளித்து வருகிறார்கள். பரிசின் மதிப்பு இப்போது சுமார் லக்ஷம் ரூபாயாக இருக்கிறது. இதைத்தான் 'நோபெல் பரிசு' என்று சொல்லுகிறார்கள். பாரபக்ஷம் இன்றி, ஜாதி மதம் தேசம் முதலிய வேற்றுமைகளைக் கருதாது, மதிப்பு ஒன்றையே கருத்தாகக்கொண்டு இப் பரிசுகள் வழங்கப்பட்டுவருகின்றன. உலகத்திலுள்ள அறிவாளிகள் அனைவரும் இந்தப் பரிசையே மிகவும் சிறந்த பரிசாகக் கொண்டாடுவதால் இதைப் பெறும் மேதாவி ஒவ்வொருவனும் தன்னுடைய பிறவியில் பெரும் பேற்றைப் பெற்றதாகக் கருதுகிறான்.

இந்தப் பரிசை ஏற்படுத்தின நோபெல் இறந்த தினமாகிய டிசம்பர் மாதம் பத்தாம் தேதியன்று இந்தப் பரிசு அளிக்கப்பட்ட விவரங்கள் வெளியிடப்படும்.

இரசாயனத்துக்கும், பௌதிகத்துக்கும் பரிசுக்குத் தகுதியானவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் பொறுப்பும் ஸ்வீடின் நாட்டு விஞ்ஞான சங்கத்தாரைச் சேர்ந்தவை. வைத்தியப் பரிசுக்குத் தகுந்தவரைத் தெரிந்து எடுப்பது



ஸ்டாக்ஹோம் நகரத்துக்காரரின் ஸ்தாபனம். இலக்கியப் பரிசுக்குத் தகுந்தவரைத் தேர்ந்தெடுப்பது ஸ்டாக்ஹோம் இலக்கியச் சங்கர். சமாதானப் பரிசுக்கு உரியவரைத் தேர்ந்தெடுப்பது நோர்வே தேசத்துப் 'பார்லிமெண்டு' சபையார் பொறுக்கி எடுத்த ஐவர் கொண்ட 'கமிட்டி' ஒன்று.

1901-ம் வருஷம் முதல் இப் பரிசுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பல நாட்டினர் இப் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள். மகாகவி ரவீந்திரநாத் தாகூருக்கு 1913-ம் வருஷத்திலே இலக்கியப் பரிசு அளிக்கப்பட்டது. 1930-ம் வருஷத்திலே ஸேர் ஸி. வி. ராமனுக்குப் பௌதிக சாஸ்திரப் பரிசு அளிக்கப்பட்டது. பெண் மக்களிற் சிலரும் இப் பரிசைப் பெற்றிருக்கிறார்கள். ரேடியத்தைக் கண்டு பிடித்த மாதம் க்யூரிக்கு இர்சாயனப் பரிசும் பௌதிக சாஸ்திரப் பரிசும் அளிக்கப்பட்டன. இலக்கியத்திலும் சங்கீதத்திலும் பெண் மக்கள் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

1936-ம் வருஷத்திலே சமாதானப் பரிசு ஜெர்மனி நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒருவருக்கு அளிக்கப்பட்ட காரணத்தால் அது முதற்கொண்டு ஜெர்மன் நாட்டினர்களுள் ஒருவரும் 'நோபெல்' பரிசை ஏற்றுக்கொள்ளலாகாதென்று நாஸிக் கக்ஷியார் மிகவும் விசித்திரமான தடை உத்தரவைப் பிறப்பித்தனர்.

உலகத்திலுள்ள பிற நாட்டு மக்கள் யாவரும் தாங்கள் பெறக்கூடிய பரிசுகள் அனைத்தினும் சிறந்ததாகவே நோபெல் பரிசைப் பாராட்டி வருகிறார்கள்.

குறிப்புரை

தேவ + அமிர்தம் = தேவாமிர்தம்; தேவர்களால் இறவாமைப் பொருட்டு உண்ணப்பட்ட அமிர்தம்; சாமானியர் – பொதுமக்கள்; ஏகோபித்து – ஒருமித்து; குவை – குவியல்; பரிசு - வெகுமதி; இரண வைத்தியம் – சத்திர சிகிச்சை; அபாயம் – ஆபத்து; விபத்து – ஆபத்து; சோகம் - துன்பம்; எந்திரம் – யந்திரம்; பிரக்யாதி – புகழ் (வடமொழி); நிதி – பணம்; சேதம் – நஷ்டம்; கிளர்ச்சி – உற்சாகம்; சக்தி – பெலம்; துர் நாற்றம் – கெட்ட நாற்றம்; ரஸம் – இனிமை (வடமொழி); மரணசாஸனம் – மரணத்தின் பின் தம் சொத்து எவ்விதம் பரிபாலிக்கப்படவேண்டுமெனத் தெரிவிக்கும் பத்திரம்; மேதாவி - அறிஞன்; பாரபக்ஷம் – வித்தியாசம்; விசித்திரம் – புதுமை, சிறப்பற்று

பயிற்சி:

1. நோபெல் பரிசை ஏற்படுத்தியவர் யார்? அங்ஙனம் அவர் ஏற்படுத்துதற்கு ஆதாரமாக இருந்த காரணங்கள் எவை?
2. அதிர்ஷ்டமே நோபெலைப் பணக்காரராக்கியது எங்ஙனம்?
3. நோபெல் பரிசு பெற்ற இந்தியர் யார்?
4. எவ்வெவ் விஷயங்களுக்காக நோபெல் பரிசு பங்கிடப்படுகிறது?
5. ஒரு நாட்டில் அறிஞர்கள் வாழ்ந்தனர் என்பதை உலகம் எவ்விதம் தீர்மானிக்கலாம்.
6. நோபெல் வாழ்க்கை வரலாறுபற்றி 10 வரி எழுதுக.
7. 'விஞ்ஞானம் நன்மையையும் தீமையையும் செய்யும்' என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.
8. நோபெல் பரிசு எப்பொழுது தொடங்கியது? எவ்வெப்போது அது கொடுக்கப்படும்.
9. நோபெல் பரிசு பெற்ற ஐவர் பெயர் கூறுக.

இலக்கணம்

1. பிரித்தெழுதுக: தேவாமிர்தம், நற்சாட்சிப் பத்திரம், பொற்குவை, கணக்கில.
2. எதிர்ச்சொல் எழுதுக: சாமானியர், இணைப்பது, சித்திரம், ரஸம்.
3. பின்வரும் சொற்களை அமைத்து வசனம் ஆக்குக: ராக்ஷஸ சக்தி, லக்ஷாலக்ஷம்.

---

## 9. விசுவரூப தரிசனம் *

[ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்]

[இவர் சேலம் ஜில்லாவில் 1879-ம் ஆண்டு பிறந்தவர். இவர் வழக்கறிஞராய்க் கடமை புரிந்தார். இந்திய சுதந்தரப் போரில் ஈடுபட்டமையால் வழக்கறிஞர்த் தொழிலைத் தியாகம் செய்தார். சுதந்தரப்போரில் பலமுறை சிறை சென்றார். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் போதிய அறிவுபடைத்த இவர், இப்பொழுது இந்தியாவின் 'பிரதம தேசாதிபதியாக' இருக்கிறார். இவரால் பல கட்டுரைகளும் கதைகளும் எழுதப்பட்டுள்ளன. அவை இப்பொழுது நூல்களாக வெளிவந்திருக்கின்றன.

உபநிஷதப் பலகணி, கண்ணன் காட்டிய வழி, வியாசர் விருந்து, தமிழில் முடியுமா? முதலிய பல நூல்களை எழுதி

* காரைக்குடி புதுமைப் பதிப்பகத்தார் வெளியிட்ட "ராஜாஜி கட்டுரைகள்" என்னும் நூலில் விசுவரூப தரிசனம் என்னும் கட்டுரையினின்று தொகுக்கப்பட்டது.



யுள்ளார். 'கலைச்சொல்' மகாநாட்டிற் பங்குபற்றி உழைத்தவர். தீண்டாமை ஒழியவேண்டுமென்பதும், மது ஒழியவேண்டுமென்பதும் இவரது முக்கிய இலட்சியங்களாகும்.]

சேஷாசாஸ்திரிகள், B. A., L. T.: வாருங்கள் தீக்ஷிதர்வாள் இன்று கொஞ்சம் வேதாந்தம் பேசலாம். நீங்கள்தான் வேதாந்தத்தில் நிபுணராச்சே. விசுவரூப தரிசனம் என்பதை கொஞ்சம் விளக்கிச் சொல்லுங்கள்.

தீக்ஷிதர்: உலகமெல்லாம் பரமேசுவரனுடைய சொரூபம் அல்லவா? அதை அர்ச்சுனனுக்கு உணர்த்தும் பொருட்டுப் பகவான், ஆயிரம் சூரியன்கள் ஒரே சமயத்தில் உதயமானாற்போல கண் கூசும்படியான ஜோதிப் பிரகாசத்தோடு விளங்கினான். இது கீதையில் பதினோராவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதைத்தான் விசுவரூப தரிசனமென்று சொல்வது. வேறு ஒன்றுமில்லை.

சே: சுலபமாகத்தான் சொல்லிவிட்டீர்கள். என்னுடைய அபிப்பிராயம், தற்காலத்தில் விசுவரூப தரிசனத்தை உண்மையிற் கண்டு வேதாந்த உணர்ச்சியைப் பெற்றவர்கள் யார் என்றால் பௌதிக ஆராய்ச்சிப் பண்டிதர்கள்தான்.

* * * * *

சே: வண்ணான் துணி தோய்ப்பதைத் தூரத்தில் மேட்டிலிருந்து எப்போதாவது தீக்ஷிதர்வாள் நீங்கள் கவனித்ததுண்டா?

தீ: ஆகா, எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். அதில் என்ன விசேஷம்?

சே: கல்லின்மேல் துணி படுவதற்கும் சப்தம் வந்து காதிற் படுதற்கும் ஓர் இடைநேரம் உண்டு. அதைக் கவனித்திருக்கிறீர்களோ?

தீ: சாதாரணமாச்சே! இதில் என்ன ஆச்சரியம்? சப்தம் நம்மை வந்து எட்டுதற்குக் கொஞ்சம் நேரம் பிடிக்கிறது. அதனாற் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் இடையில் ஒரு க்ஷணம் செல்லுகிறது.

சே: ஆச்சரியம் ஒன்றுமில்லை. இயற்கை நிகழ்ச்சிகளைக் கவனித்தால் எல்லாமே ஆச்சரியம்; இன்னொரு வழியாகப் பார்த்தால் எதிலுமே ஆச்சரியம் கிடையாது. ஒன்றைப்

போல்தான் மற்றொன்று. இடியும் மின்னலும் ஒரே சமயத்தில் உண்டாகின்றன. ஆனால் முந்தி மின்னல் தோன்றுவதைக் காண்கிறோம். இடியோசை கொஞ்ச நேரம் கழித்துத்தான் காதிற் படுகிறது.

நீ: இடியும் மின்னலும் இரண்டும் கூடவே உண்டாகிறது என்கிறீர்களா? முந்தி மின்னல், பிந்தி இடி உண்டாகுமென்றல்லவோ எண்ணி வந்தேன்.

சே: வண்ணான் தோய்க்கும் துணியானது கல்லின்மேற் படுவதால்தான் ஓசை உண்டாகிறது என்பது நமக்கு நன்றாகத் தெரிந்தபடியால், அந்த நிகழ்ச்சியில் காட்சி முந்துவதும் ஒலி பிந்துவதும் நமக்குத் தெரிந்துபோயிற்று. இடியும் மின்னலும் ஒரே நிகழ்ச்சி என்பது நம்முடைய பிரத்தியட்ச அநுபவத்திற் சேரவில்லை. ஆகையால் அதைப் பற்றி ஆராய்ந்துதான் தெரியவேண்டியதாகிறது. மின்னலின் ஒளி வேகம் முந்தி நம்மை வந்து சேருகிறது. கூட உண்டான இடியின் ஓசை பிந்தி வருகிறது. பந்தயத்தில் ஒளி முந்திவிடுகிறது; ஒலி பிந்திவிடுகிறது.

நீ: சொல்லுங்கள்.

சே: சாஸ்திரம் படித்தவர்களுக்குக் கொஞ்சம் சொன்னாற் போதும். ஒரு நிகழ்ச்சியோ பொருளோ நம் கண்களின் மூலம் நமக்குப் புலனாக வேண்டுமானால், நிகழ்ச்சி ஸ்தானம் அல்லது பொருளின்நிலை இடத்தினின்று ஒளிக் கணங்கள் பறந்து நம் கண்களை வந்து சேரவேண்டும். அப்போதுதான் அந்த நிகழ்ச்சியோ பொருளோ நமக்குப் புலனாகும்.

நீ: சப்தம் வந்துசேர நேரம் பிடிக்கும். ஆனால் ஒளி அதைப் போலல்லவே? கண்ணைத் திறந்து பார்த்தால் உடனே வந்து தென்படுமல்லவோ?

சே: அப்படியல்ல. எல்லா இந்திரியங்களுக்குமே பொருள் அல்லது நிகழ்ச்சியின் ஸ்தானத்திலிருந்து சூட்சும அலைகளோ பரமாணுக்களோ புறப்பட்டு நம்முடைய இந்திரியங்களை வந்து தாக்கவேண்டும். நம்முடைய கண்ணினின்று ஏதோ சக்தி புறப்பட்டுச் சென்று வஸ்துவை எட்டிப் பிடிக்கிறதாக நாம் எண்ணுவது தவறு. சூரியனை நாம் பார்க்கும்போது ஒளி யலைகள் சூரியனிடமிருந்து



நம்மை வந்து சேரவேண்டும். அவ்வாறு வந்துசேர எட்டே கால் நிமிஷம் பிடிக்கும்.

நீ: ஒன்றும் விளங்கவில்லை. கண்ணாடியில் என் முகத்தை நான் பார்த்துக்கொண்டால் அல்லது ஒரு மலையை இங்கிருந்து பார்த்தால் உடனுக்குடனே புலனாகிறது. இதற்கு நேரம் என்னத்திற்கு? இடைவேளை என்னத்திற்கு? காட்சிக்கு ஒரு பிரயாணத்தைப்போல் காலதேசக் கணக்கென்ன?

சே: வில்லைவிட்டு அம்பு பாய்ந்து குறியைத் தாக்கும்போது, அம்பு வெகுவேகமாகத்தான் செல்கிறது. ஆனால் தொலைக்கும் விசைக்கும் தக்கவாறு அம்பானது வில்லை விட்டதற்கும் அது குறிமேல் தாக்குவதற்கும் ஓர் இடைவேளை உண்டல்லவா?

நீ: உண்டு. அதைப்பற்றி என்ன சந்தேகம்?

சே: ஒரு துப்பாக்கியை விட்டுச் செல்லும் குண்டு, கொஞ்ச நேரத்திற்குப் பிறகுதான் குறியைத் தாக்கும். மிக்க விசையுடன் சென்றாலும் இப்படித்தானே.

நீ: ஆமாம்.

சே: வெகு வேகமாகச் செல்லும் அம்பும் குண்டும் குறியைத் தாக்குவதுபோலவே, சூரியனுடைய சோதி மண்டலத்திலிருந்து ஒளிக் கணங்கள் அவை தோன்றிய இடத்தை விட்டு வெகு விசையுடன் பறந்து நம்மை வந்து சேருகின்றன. அப்படிச் சேரும் வரையில் நமக்கு ஒன்றும் புலனாகாது. மலையைப் பார்க்கும்போது சூரியவெளிச்சம் மலையைத் தாக்கி அங்கிருந்து நம்முடைய கண்களை வந்து தாக்குகிறது. அப்படித் தாக்கினால்தான் மலை திருஷ்டி கோசமாகிறது.

நீ: ஜோதிக் கணங்களின் விசை என்ன?

சே: அப்படிக் கேளுங்கள். ஒரு விநாடியில் கொஞ்சம் குறைய இரண்டு லட்சம் மைல் பாயும்; ஒரு நிமிஷத்துக்கு ஒருகோடி மைலுக்கு மேற் பாய்ந்துவிடும்.

நீ: சப்தத்தின் விசை என்ன?

சே: சப்தமானது காற்றில் ஒரு வினாடியில் ஆயிரம் அடி செல்லும்.

நீ: இவ்வளவு தானா? ஆயிரம் அடியா? மைல்களா?
சே: ஆயிரத்தெண்பது அடி; மைல்களல்ல ஒரு மைல் செல்ல ஐந்து வினாடிகளாகும்.

**குறிப்புரை :**

வேத+அந்தம்=வேதாந்தம்; நிபுணர் – கெட்டிக்காரர்; ஸ்வ+ரூபம்=ஸ்வரூபம்; அது விசுவரூபம் என்றாயிற்று இயற்கையான ரூபம் என்பது கருத்து. பரம+ஈஸ்வரன்=பரமேஸ்வரன்=எல்லாவற்றிற்கும் தலைவன். ஜோதிப்பிரகாசம – ஒளிப்பிழப்பு; பௌதிகம் – பூத சம்பந்தமானது, தத்திதாந்தப் பெயர்; (பெயரிலிருந்து பெயர் பிறப்பது) பிருதுவி, முதலியன பூதங்களெனப்படும். க்ஷணம் – குறைந்த காலம்; பிரத்தியட்சம் - கண்கூடு (நேருக்கு நேர்). நிகழ்ச்சி ஸ்தானம் - செயல் நடைபெறும் இடம்; கணம் – கூட்டம்; வஸ்து – பொருள்; சூட்சும - சூக்கும – கண்ணுக்குத் தெரியாத; பரம+அணு=பரமாணு= மிகச் சிறிய அணுக்கள். குறி – இலக்கு; திருஷ்டி கோசம் - தோற்றம்; வினாடி – செக்கன்.

**பயிற்சி :**

1. விசுவரூப தரிசனமாவது யாது?
2. இடியும் மின்னலும் ஒருமித்துத் தோன்றவும் அவை புலனாவதற்குக் கால வேறுபாடு இருக்கக் காரணம் யாது?
3. நம்முடைய கண்களுக்குப் பொருள் தோற்றமாவது எங்ஙனம்?
4. சூரியன் நமக்குத் தோற்றமாவதற்கும் ஒருமலை நமக்குத் தோற்றமாவதற்குமுள்ள பேதம் என்ன?
5. சப்தத்தின் கெதி என்ன? ஒளியின் கெதி என்ன?
6. சூரிய ஒளி பூமியை அடைய எவவளவு நேரம் செல்லும்? ஆகவே பூமிக்கும் சூரியனுக்கும் இடைத்தூரமியாது?
7. 'ஒலி, ஒளிகளின் விசித்திரம்' என்பதுபற்றி ஒருபந்தி எழுதுக.
8. வடசொற்களை எழுதுக.

**இலக்கணம்**

1. தத்திதாந்தப் பெயராவது யாது? 5 உதாரணம் தருக.
2. அயற்கூற்று வாக்கியமாக்குக: தீட்சிதர்: "இடியும் மின்னலும் இரண்டும் கூடவே உண்டாகிறது என்கிறீர்களா? முந்தி மின்னல் பிந்தி இடி உண்டாகுமென்றல்லலோ எண்ணி வந்தேன்" என்று சேஷாஸ்திரிக்குச் சொன்னார்.
3. செயப்பாட்டு வினையாக்குக: பொருள் அல்லது நிகழ்ச்சியின் ஸ்தானத்திலிருந்து சூட்சும அலைகளோ பரமாணுக்களோ புறப்பட்டு நம்முடைய இந்திரியங்களை வந்து தாக்கவேண்டும்.
4. கீழ்வரும் சொற்களை அமைத்து வசனங்கள் ஆக்குக:
திருஷ்டி கோசம, க்ஷணம், வஸ்து, கணம், நிபுணர், பிரத்தியக்ஷம்:

# 10. பரீக்ஷை எடாத பண்டிதர் *

[பண்டிதர் ஸ்ரீமத் சி. கணபதிப்பிள்ளை அவர்கள்]

[இவர் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் தமிழ்ப் பண்டிதராய்க் கடமையாற்றி வருகிறார். சுன்னாகம், ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களது மாணாக்கர் ஆவார்.

இவரது ஜனனவூர் மட்டுவில். அவ்வப்போது பல சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். பிரசங்க வன்மையும் கட்டுரை வன்மையும் அமையப் பெற்றவர். அருணாசலக்கவிராயரா லியற்றப்பட்ட ஆறுமுகநாவலர் சரிதத்தைச் சிறந்த முகவுரை எழுதிச் சேர்த்துப் பதிப்பித்துள்ளார்.]

மகாலிங்கசிவத்தின் தந்தையார் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள். இவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் — வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை — கார்த்திகேய உபாத்தியாயர் — இந்த மூவர்களிடத்தும் முறையாகப் பாடங் கேட்டவர்கள்; இலக்கிய நயங்களை எடுத்துக் காட்டுவதில், பொன்னம்பலபிள்ளைக்கு அடுத்தபடியில்வைத்து எண்ணப்படுபவர்கள்; சிறந்த நூலுரைகள் செய்தவர்கள்; நீண்டகாலமாக — தமது அந்தியகாலம்வரை — தரிசிக்க முத்தி தரும் திவ்வியக்ஷேத்திரமாகிய சிதம்பரத்திலே தலவாசம் செய்துகொண்டு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தாபித்த சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமைப் போதகாசிரியராய் இருந்தவர்கள். அந்தக்காலத்தில் இடையிடையே தாம் பிறந்த ஊராகிய மட்டுவிலுக்கு வந்துபோவார்கள்.

முப்பது வருஷங்களுக்குமுன் ஒருநாள் பின்னேரம், தென்மராட்சியிலே படித்தவர்கள் என்றுள்ளவர்கள் பலர், தோடம்பழம், மாம்பழம் முதலிய கையுறைகளோடு வேலுப்பிள்ளை உபாத்தியாயர் வீட்டுக்குப்போகின்றார்கள். என்னுடைய தகப்பனாரும் போனார்கள். நானுங் கூடப்போனேன்.

கிழக்குப்புற வெளிவிருந்தையிலே ஒரு உயரமான பெரிய திண்ணை; சாணத்தினால் மெழுகப்பட்டிருக்கின்றது. அதற்கு முகப்பிலுள்ள முற்றத்தில் தெற்கு வடக்காக ஒரு கிடுகுக்

* கலாநிதி கலை 1. கதிர் 1. இதழில் பண்டிதர் ஸ்ரீமத் சி. கணபதிப் பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது.

கொட்டகை; வெள்ளைமணல் பரப்பப்பட்டிருக்கின்றது. திண்ணையிலும் முற்றத்திலும் பலர் குழுமியிருக்கின்றார்கள். தெற்குப்புறத்தில் உயர்ந்து படர்ந்த ஒரு பெரிய நாவல்மரம். அதன் கிளைகளை உளர்ந்துகொண்டு இளந்தென்றல் சுகம் பேசுகின்றது.

திண்ணைக்கு மத்தியிலே ஒரு மான்றோல் ஆசனத்தில் ஒரு முதியவர் சப்பணங்கூட்டிக் கிழக்கு முகமாக வீற்றிருக்கின்றார்கள். வயசுக்கேற்ற உயரம், பருமன், தோற்றம் உள்ளவர்கள். வசீகரமான முறுவலிக்கின்ற முகம்; அழகான செல்லவண்டி; உத்தூளனமும் திரிபுண்டரமுமான விபூதிப்பூச்சு; விசாலமான சந்தனப் பொட்டு; காதுகளிலே கடுக்கன்; கழுத்திலே பருத்த உருத்திராக்கமணிமாலை; இவைகள் அவர்களைப்பற்றி நினைப்பில் வைக்கத்தக்கவைகள். அவர்கள்தான் வேலுப்பிள்ளை உபாத்தியாயர் அவர்கள். கதை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அங்கே வருகிறவர்கள் வணக்கஞ்செய்து, சிதம்பரத்து விபூதி வாங்கித் தரித்துக்கொண்டிருக்கிறார்கள். எனது தகப்பனார் நமஸ்காரஞ்செய்து விபூதி வாங்கித் தரித்தார்கள். நானும் வாங்கிப் பூசிக்கொண்டு ஒருபுறத்தில் இருந்தேன். எங்கும் நிசப்தப் நிலவியது. 'சித்திரப் புாவையின் அத்தகவு அடங்கி' என்று சொல்லுகிற அடக்கமா யிருந்தது அந்த அடக்கம். கதை நடக்கின்றது, இரண்டு மூன்று வாரம் தொடர்ந்து நடந்தது.

* * * * *

உபாத்தியாயர் அவர்கள் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைக்குத் தலைமைப் போதகாசிரியராய்ப் போவதற்குமுன் தமது வீட்டையே வித்தியாசாலையாக வைத்து வகுப்புக்கள் நடத்திவந்தார்கள். * * * * ஒருபுறத்தில் புராணங்களுக்கு அர்த்தம்; மற்றொருபுறத்தில் கம்பராமாயண வியாக்கியானம்; வேறொருபக்கத்தில் தொல்காப்பியம் முதலிய இலக்கண பாடம்; மரங்களின் கீழே மாணவர்களின் பாட ஆயத்தம்; பின்னேரங்களில், அங்கே வருகிறவர்களையும் சேர்த்து வழக்கமான கதைகள் சம்பாஷணைகள். இவைகள் நாள்தோறும் இடையீடின்றி நடைபெறும்.

* * * * *

இப்படிப்பட்ட சூழலிலேதான், கண்ணுவ இருஷியின் ஆசிரமத்திலே காளிதாசமகாகவி வர்ணிக்கின்ற இளம் மான்



கன்றுபோலே, மகாலிங்கசிவம் என்கிற பச்சை — இளம் — கலை — மான்கன்று துள்ளிக் குதித்து விளையாடி வளராநின்றது,

மகாலிங்கசிவத்தின் தாயார் பெயர் மகேசுவரி; புலோலியில் உள்ளவர்கள். ஸ்ரீமத் சு. சிவபாதசுந்தரம் B. A., அவர்களின் உடன்பிறந்த சகோதரி. மகேசுவரியின் தந்தையார் பெயர். சுப்பிரமணியர். * * * அவருக்கு ஒரு பெண் சகோதரியும் இரு ஆண் சகோதரர்களுமாக மூவர் சகோதரர்கள். சகோதரர்களில் மூத்தவருக்குப் பெயர் கணபதிப்பிள்ளை. இவர் சமஸ்கிருதத்திலே மகா பண்டிதர். * * அடுத்த சகோதரர் குமாரசுவாமிப்புலவர். டக்டர் சிவப்பிரகாசத்தின் தந்தையார். இவர் ஒரு இலக்கணப்புலி. * * * சகோதரியின் பெயர் பார்ப்பதி அம்மையார். இப் பெண்மணியார் சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் மகா மேதை; மரணபரியந்தம் நைஷ்டிகப் பிரமசாரிணியாயிருந்தவர். * * *

* * * * *

மகாலிங்கசிவம் புலோலியிலே தங்குகிற காலங்களிலே பார்ப்பதி அம்மையாரின் மடியிலே இருந்து, சம்ஸ்கிருத மகா பண்டிதராகிய கணபதிப்பிள்ளை அவர்களின் இதயத்திலே நடந்து, குமாரசுவாமிப்புலவர் அவர்களோடு மழலை மொழி பயின்று எல்லோருடைய உள்ளங்களையும் கவர்ந்து வளர்ந்து வந்தார்.

* * * * *

மகாலிங்கசிவத்தின் மூத்தவர்களும் இளையவர்களுமான நான்கு சகோதரர்களும் பெரும்பாலுந் தாயார் பக்கத்தைச் சார்ந்து ஆங்கிலங் கற்பதில் ஈடுபட்டுவிட்டார்கள். நடுவில் உள்ள மகாலிங்கசிவம் தாயார் கொள்கைக்கும் தந்தையார் கொள்கைக்கும் நடுநின்று சிறிது ஆங்கிலமும் தமிழ் சம்ஸ்கிருதங்களும் பயின்றார்.

'கல்லாமற் பாதி குலவித்தை' என்ற பழமொழியைத்தான் மகாலிங்கசிவத்தின் படிப்புக்குச் சொல்லலாம். மகாலிங்கசிவம் ஆத்திசூடி தொடக்கம், முறையாக — இரு என இருந்து — சொல் எனச் சொல்லி — ஏடு — அவிழென அவிழ்த்து ஒழுங்காகப் பாடங்கேட்டவர் என்று சொல்ல முடியாது. யாராவது மாணவர்களுக்குத் தந்தையார் அவர்கள்

பாடஞ் சொல்லிக்கொண்டே யிருப்பார்கள். அது, தாழ் வாரத்திலே மண் சோறு கறி விளையாடுகிற மகாலிங்கசிவத்தின் செவிகளிலும் விழலாம்; இதுதான் மகாலிங்கசிவம் பாடம் கேட்ட வரலாறு.

* * * * *

ஒருநாள் விடியற்காலையிற் பாட்டியாராகிய பார்ப்பதி அம்மையார் மட்டுவிலுக்கு வந்தார்கள். அப்போது வெளிக்குப் போயிருந்த மகாலிங்கசிவம் வருகிறபோது ஒரு ஆத்திசூடிப் புஸ்தகத்துடன் வந்தார். அம்மையார் 'ஏது ஆத்திசூடி' என்றார்கள். "பாருய்ச்சி கேள்" என்று மகாலிங்கசிவம் கதை பண்ணத் தொடங்கினார் :—

"இராத்திரி நல்ல நிலவு. நான் ஔவையார்க் கிழவியை அண்ணாந்து பார்த்து, 'ஔவையார்க் கிழவி! ஔவையார்க் கிழவி!! எனக்கு ஒரு ஆத்திசூடி போடு ஔவையார்க் கிழவி; நீ கனக்க ஆத்திசூடிப் புஸ்தகங்கள் வைத்திருக்கிறாயாம்; எனக்கு ஒன்றுபோடு 'ஔவையார்க் கிழவி' என்று கேட்டேன். இப்பொழுது நான் வெளிக்குப்போன இடத்திலெ, ஒரு கொய்யாப்பற்றைக்கு மேலே இந்த ஆத்திசூடி போட்டிருந்தது. நான் எடுத்துவருகிறேன். ஔவையார்க் கிழவி நல்ல கிழவி. என்ன பாருய்ச்சி?" என்று கதை நடந்தது.

அம்மையார் 'அடே அப்பா! நீ அந்தரப் புளுகனையும் வெல்லுவாயடா' என்று மகாலிங்கசிவத்தின் கற்பனையைப் பாராட்டினார்கள்.

**குறிப்புரை :**

அந்தியகாலம் – முடிவுகாலம் (இறக்கும்காலம்); முத்தி – மோட்சம்; திவ்ய – சிறந்த; க்ஷேத்திரம் – கோயில்; கையுறை – பெரியோர்களைச் சந்திக்கப் போகும்போது கொண்டுசெல்லும் பொருள்கள்; குழுமி – கூடி; மூறுவலித்தல் – சிரித்தல்; உத்தூளனம், திரிபுண்டரம் என்பன விபூதி தரிக்கும் விதங்கள். நிசப்தம் – சப்தமின்மை; பாவையின் – பாவைபோல; வியாக்கியானம் – விளக்க உரை; இடையீடு – இடைவெளி; மேதை – அறிவாளி; பிரமசாரிணீ – விவாகமாகாதவள்.

**பயிற்சி :**

1. ஸ்ரீமத் ம. க. வேற்பிள்ளை ஆசிரியரின் தோற்றத்தை வர்ணனை நடையில் எழுதுக.
2. உரையாசிரியர் வேற்பிள்ளையின் ஆசிரியர்கள் யாவர்?
3. மகாலிங்கசிவம் அவர்களுக்கு உவமையாக இக் கட்டுரையில் கூறப்பட்டிருப்பதென்ன? அவற்றின் ஒப்புமையை விளக்குக.
4. மகாலிங்கசிவம் அவர்களது கற்பனை மேதைக்கும் 'குலவித்தை கல்லாமல் பாகம்படும்' என்ற சொற்றொடர்க்கும் உள்ள தொடர்பை எழுதுக.
5. மகாலிங்கசிவம் பண்ணின கதையில் உள்ள விசேடம் யாது?
6. நீர் மகாலிங்கசிவத்தைப்பற்றி அறிந்தன உளவேல் கூறுக.



**இலக்கணம் :**

1. பின்வரும் சொற்களின் கருத்து விளங்க வசனம் எழுதுக: இலக்கணப்புலி, கையுறை, வியாக்கியானம், இடையீடு, ஆசிரமம், மேதை, பரியந்தம்.
2. இப் பாடத்துள் வந்துள்ள வடமொழிச் சொற்களை எழுதுக. அவற்றின் அர்த்தங்களையும் குறிப்பிடுக.
3. எதிர்ப் பால் கூறுக: பிரமசாரிணீ, அம்மையார், சகோதரி, கிழவி.
4. பிரித்தெழுதுக: போதகாசிரியர், மான்றேல், இளந்தென்றல்.

---

# 11. தமிழ்த் தொண்டு*

[அருள் திரு. விபுலானந்த அடிகளார்]

[இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த—துறவியாயிருந்த சுவாமிஜி 1892-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ந் திகதி மட்டக்களப்பைச் சேர்ந்த காரைதீவிற் பிறந்தார். இவரால் மதங்கசூளாமணி, யாழ்நூல் முதலிய நூல்கள் யாக்கப்பெற்றன. இவரால் எழுதப்பட்ட 'ஆங்கில வாணி' என்னும் கட்டுரை தமிழ் மக்களுக்கு மிக உபயோகமாகத் தக்கது. இவர் 1947-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ந் திகதி இறைவனடி சேர்ந்தார். இவரது சரிதக் குறிப்புகளைச் செய்யுள் பாகத்துக் காண்க.]

காால நீரோட்டம் விரைந்து ஓடுகின்றது. தமிழர் பழங் காலத்துச் சிறப்பினை மாத்திரம் பறையறைந்துகொண்டிருப்பாரெனின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் முற்றிலும் இழந்த நீர்மையராதலுங்கூடும். சென்ற நூற்றாண்டிலே ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் விஞ்ஞானநூல் மிகவும் விருத்தி

---

* முத்தமிழ் மகாநாட்டு இயற்பகுதித் தலைமைப் பேருரையினின்றும் இப் பகுதி எடுக்கப்பட்டது.

யடைந்து விளங்குகின்றது. அந்த அறிவுச் செல்வத்தைத் தமிழ் மொழி பெறுவதற்கு ஆவன செய்தல் சிறந்த தமிழ்த் தொண்டாகும்! இலண்டன்மாநகரில் உள்ள வேத்தவை (Royal Society) என்னும் அறிவுநூற் புலவர் குழுவானது நமது தமிழ் நாட்டிலே பிறந்து தமிழ்நாட்டுக் கலைக் கழகங்களிலே கல்வி பயின்று கணித நூலினும் விஞ்ஞான நூலினும் பெரும் புலமைபடைத்த திரு. இராமானுசம், திரு. இராமன், திரு. கிருஷ்ணன் என்றின்னோருடைய புலமையைப் பாராட்டி அவையகத்தாராக்கிய செய்திகேட்டு நாமெல்லாம் பெருமகிழ்வடைந்தோம். கணித விஞ்ஞான அறிவு நிரம்பிப் பூவுலகத்துப் பேரறிஞர் குழுவிலே தலையணியில் இருக்கும் ஆற்றல் தமிழனுக்கு உண்டு என்பதை அறிந்துகொண்டோம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரின் முயற்சியினாலே தமிழ்மொழியிலே பூதநூல் (Physics), வேதிநூல் (Chemistry), புதிய தருக்கநூல் (Logic) என்றிவை வெளிவந்துவிட்டன. ஆட்சியும் குணமும் காரணமாகக் கலைச்சொற்கள் நாளடைவிலே செம்மையுறும் தன்மையன. அங்ஙனமாதலின் வடமொழி, தென்மொழி, மேற்றிசைமொழி யென்னும் முந்நீர மொழிகளுளும் இற்றை நாளிலே அறிவுப் பெருங்கடலிலே கலைத்தலை யாமெல்லாம் விருப்பொடு ஏற்றுக்கொள்வோமாக. தமிழ்நாடு தனக்குரிய ஆக்கத்தினைப் பெறுகிற நன்னாளிலே அறிவுக் கடலிலிருந்து எழப்போகின்ற தமிழ் முகிலானது புன்மையாகிய உவர்த்தன்மையினை முற்றிலும் நீக்கித் தூய தமிழ் நீரினை நாடெங்கும் பொழியக் காண்போம். அந்நாள் மிகவும் அணுகிவருகிற தென்பதற்கு இம் முத்தமிழ் மாநாடே சான்று பகருகின்றது. மூடநம்பிக்கையோடு கூடிய பௌராணிக மனப்பான்மை யென்னும் இருள் அகல்கின்றது. அறிவுக் கதிரோனுடைய இள வெயிலானது நம்முள்ளத்திற்கு உவகையையும் உடல் நலத்திற்குப் புதிய வலிமையையும் தருகிறது. புத்தம் புதிய நூல்கள் பலவற்றைப் புனைந்து தமிழன்னையின் திருவடிகளிலே காணிக்கையாக வைப்போமாக. சேர முனிவன் செய்தளித்த சிலம்பினை யணிந்த அச் சீறடிகள் நம் நாவிலே களிநடம் புரிபவாகுக. உறக்கம் நீக்கி விழித்தெழுந்த தமிழராகிய நாம் ஓய்வின்றி உழைத்து உலகனைத்தினும் நம் மொழிச் செல்வத்தைப் பரப்புதற்கு முயல்வோமாக.



தமிழ் மொழியை மரபு தவறாது ஆராய்ந்து கற்றோரும், அவ்வாறு கற்றுத் தேறியவரை வழிபடுவோருமாகிய இரு சாராருமே உண்மைத் தமிழ்த் தொண்டிற்கு உரியோராவர். 'கற்றலிற் கற்றாரை, வழிபடுதல் சிறந்தன்று' என்னும் அறிஞருரையும் இவ்வுண்மையினையே வலியுறுத்துகின்றது. முறையாகக் கற்றலும் செய்யாது, கற்று வல்லாரை அடைந்து வழிபாடியற்றிப் பெறுதற்குரிய கேள்விச் செல்வமும் எய்தப்பெறாது தமிழ்த்தொண்டு செய்ய முற்படுதல் பயனில் செயலாகும். முன்னோர் மொழி பொருளையும் மரபுபட்ட இலக்கண முடிபுகளையும் ஆராய்ந்தறிந்து கொள்ளாது நெறியறியா மாக்களை மயக்கி அவர் தம்மை நெறியல்லா நெறியிற் புகுத்தி ஆரவாரிப்போர் செயலானது, குருடனைக் குருடன் வழிநடத்துவது போலாகும்.

அவைக்களத்திற் சொல்லுதற்குரிய வரம்பினமைந்த ஆங்கில மொழியினை 'வேந்தன் மொழி' (King's English) என அம் மொழிப் புலவர் விதந்து கூறுவர். அப்பரிசே, யாமும் அவைக்களத்திற் செல்லுதற்குரிய வரம்பினமைந்த தமிழினை 'பாண்டியன் தமிழ்' என்போம். 'எது தமிழ்' என வினவுவார்க்கு 'பாண்டியன்றமிழே தமிழ்' என்பது விடையாகும். அதுவே நிலைபேறுடையது; அறிஞர் போற்றற்குரியது. பொருள் வருவாய் ஒன்றினையே கருதி மனம் போனவாறு மரபு தவறி எழுதும் மொழி வழக்கானது மழைக்காலத்திலே தோன்றி அக்காலங் கழிய மறைந்து போகின்ற சிறு பூடுகளைப்போல நிலைபேறில்லாதது. நிலைபேறுடைய 'உண்மை' (Truth), 'அழகு' (Beauty). 'செம்மை' (Goodness) என்னும் இவை தம்மையே அறிஞரது உள்ளம் அவாவி நிற்கும். முத்தமிழுள் இயற்றமிழானது உண்மையினையும், இசைத்தமிழானது அழகினையும் நாடகத்தமிழானது செம்மையினையும் சிறப்புற வெளிப்படுத்திக் காட்டுவன. பேருண்மையும், பேரழகும், வரம்பு கடந்த செம்மையும் இறைவனுக்குரிய குணங்களாகச் சமய நூல்களாற் கூறப்பட்டன. இவை தம்மை வெளியிட்டுரைக்கும் ஆற்றல் உடைமையினாலேதான் மொழிகள் தெய்வத்தன்மை யுடையன வாகக் கருதப்பட்டன.

M. Nadarajah. J.S.C.



**குறிப்புரை :**

நீர்மை – இயல்பு ; வேந்து + அவை = வேத்தவை – அரச சபை ; புலமை – பாண்டித்தியம் ; குழு – கூட்டம் ; அவையகத்தார் – அங்கத்திவர் ; தலையணி – முன்னணி ; நீர – தன்மையினையுடைய ; இன்று + நாள் = இற்றைநாள் ; கலைத்தலை - கலையிடத்தை ; புன்மை – இழிவு ; சான்று - சாட்சி ; அணுகி – கிட்டி, பௌராணிக – புராணத்தொடர்புடைய ; கதிரோன் – சூரியன் ; காணிக்கை – தட்சணை ; சேரமுனிவனென்றது இளங்கோவை ; சிறுமை + அடி = சீறடி ; கழி – மிகவும் (உரிச்சொல்) ; அண்மை – சமீபம் ; சால – மிகவும் (உரிச்சொல்). வழிபாடு – வணக்கம் ; நெறி – வழி ; வரம்பு – கட்டுப்பாடு (இலக்கணம்) ; அவாவி – விரும்பி ; பரிசு – இயல்பு.

**பயிற்சி :**

1. தமிழ்த்தொண்டிற்கு வேறு பாஷைகளிலிருந்து பெறக்கூடியன யாவை ?
2. தமிழன் பூவுலகத்து முதன்மையிடம் பெறும் ஆற்றலுடையவன் என்பதற்கு உதாரணங்கள் தருக.
3. தமிழர் மனப்பான்மையிலிருந்து ஒழியவேண்டுவன யாவை ?
4. சங்ககாலத்தின் பின் தோன்றிய நூல்கள் எத்தகையன ?
5. தமிழ் வளர்ச்சிசெய்வோர் எவ்வித தகுதியமைந்தோராய் இருக்க வேண்டும் ? அல்லாக்கால் எங்ஙனமாகும் ?
6. 'பேச்சு வழக்கே நூல் வழக்காகலாம்' என்பார் கூற்றுக்குச் 'சுவாமி' அவர்களின் விடை யாது ?
7. இலக்கியங்கள் எவற்றை உணர்த்துகின்றன ?
8. பொருள் கூறுக : பரிசு, சான்று, அவையகத்தார், அண்மை வரம்பு.

**இலக்கணம் :**

1. பிரித்தெழுதுக : இற்றைநாள், வேத்தவை, அவையகத்தார், தமிழ்த்தொண்டு, பேரறிஞர்.
2. பின்வரும் சொற்களை அமைத்து உமதுநடையில் வசனங்கள் ஆக்குக, பரிசு, நீர்மை, காணிக்கை, பறையறைதல், உளங்கொள, அணுகி.
3. இப்பாடத்துள் வந்த உவமானங்களெவை ? உவமேயங்களியாவை ? உவமஉருபுகளைக் கூறுக.
4. இலக்கணம் கூறுக : நீர, அணுகி, அணிந்த, முயல்வோமாக.

**கட்டுரை :**

'தமிழ்த்தொண்டுசெய்யும் தகுதியுடையார்' என்னும் பொருளில் ஒரு கட்டுரை வரைக.

---

அச்சகம்:
திருமகள் அழுத்தகம்